# இந்து நாகரீகம்

## A/L பாகம் I

க. சொக்கலிங்கம் *M. A.*

ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நாகரிகம்

## முதலாம் பாகம்

★ அறுவகைச் சமயங்களும்

★ இருபெருந் தத்துவங்களும்

வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ.
(சொக்கன்)

வெளியீடு:
சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம்
235, காங்கேசன் துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 90/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: 1995—06—08

உரிமை ஆசிரியருக்கு

அச்சுப்பதிப்பு:
சிறி சுப்பிரமணிய அச்சகம்
63, B.A தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு:
சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம்
235, காங்கேசன்துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

—o—

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள் எழுத்துலகில் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலமாகப் பல்வேறு துறைகளில் காலத்தின் தேவை உணர்ந்து எழுதிவருபவர். பல்துறை சார்ந்த எழுத்தாளராக விளங்கிவரும் அவர், சமய நூல் எழுத்தாளர் என்ற நிலையிலும் சிறப்படைந்தவர். இத்துறையில் அவர் கொண்ட ஈடுபாடு, மற்றும் அநுபவம் ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைவது அவரது 'இந்து நாகரிகம்' என்ற இந்த நூலாகும். நீண்ட காலம் ஆசிரியராகப் பணியாற்றி அநுபவமிக்க கல்வியாளனாகத் திகழும் சொக்கன் அவர்கள் தாம் பெற்ற அறிவியற் சிந்தனைகளை மாணவர்களின் நலன் கருதி இந்நூலின் வழியாக வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்து நாகரிகம் பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளிலும் பல்கலைக் கழகத்திலும் ஒரு பாடமாக இருந்து வருகிறது. அதனைக் கற்கும் மாணவர்கள் பல்துறை சார்ந்த அறிவினைப் பெறவேண்டிய தேவையிருப்பதனால் அவ் வத்துறை சார்ந்த நூல்களை வாசித்துத் தமது அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அநேகமானோருக்குத் தேவையான நூல்கள் கிடைப்பதில்லை. அத்தகையோருக்குப் பயன்படத்தக்க விடயங்களைத் தொகுத்துச் சொக்கன் இந் நூலில் தந்துள்ளார்.

இந்துநாகரிகப் பாடப் பரப்பில் சிறப்பாக இந்து சமய நெறிகள் பெறும் முக்கியத்துவத்தினை உணர்ந்து அவைபற்றி இந்நூலில் விளக்கம் தரப்பட்டுள்ளது. அடுத்து இந்து தத்துவ மரபில் சிறப்புப் பெறும் இருபெரும் தத்துவங்களாகிய வேதாந் தம் பற்றியும் சைவசித்தாந்தம் பற்றியும் பல அடிப்படை விடயங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பரந்துபட்ட விட யங்களைக் கொண்ட இத்துறைகள் பற்றிய ஒரு பரிமாணத்தை மாணவர்கள் அறிந்து கொள்வதற்குச் சொக்கனின் இந்நூல் துணைபுரிய வல்லது.

வித்துவான் சொக்கன் அவர்கள் சமயத்துறையிற் கொண் டுள்ள நீண்ட அநுபவத்தின் பெறுபேறாக மேலும் இது போன்ற நூல்களை எழுதிச் சமயப் பணியாற்ற அவருக்குச் சகல நலன்களும் கிட்டும் வண்ணம் இறைவன் திருவருள் துணை நிற்பதாகுக.

29-06-1995 ப. கோபாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

—o—

க. பொ. த (உ/த) மாணாக்கரின் இந்து நாகரிக பாடத் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு ''இந்து நாகரிகம் - பாகம் 1'' என்ற தலைப்பில், இந்நூல் வெளியாகின்றது. அறுவகைச் சமயங்களும், வேதாந்தம், சைவ சித்தாந்தம் ஆகிய இரு பெருந்தத்துவங்களும் இதன் உள்ளடக்கங்கள். பல நூல்களையும் பாடக் குறிப்புக்களையும் தேடி அலையாது மேற்குறித்த பொருள்களின் சாரத்தைத் திரட்டி, மாணாக்கர் நிலையில் விளங்கிக் கொள்ளத்தக்கவாறு எழுத முயன்றுள்ளேன். க. பொ. த (உ/த) மாணாக்கர் இந்நூலை நன்கு பயன்செய்வர் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்து நாகரிகம் - பாகம் 2 இல், பக்தியியக்கம், தென்கிழக்காசிய நாடுகளில் இந்துசமய கலாசாரச் செல்வாக்கு, இலங்கையில் இந்து சமய வளர்ச்சி, நவீன இந்துமத சீர்திருத்த இயக்கம் என்பன இடம் பெறும்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி என்னை இத்துறையிலே ஊக்குவித்துள்ள, இந்து நாகரிகத் துறைத் தலைவர், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு எனது மனங்கனிந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

வழமைபோல இந்நூலையும் அச்சேற்றி வெளியிடும் சிறி சுப்பிரமணிய அச்சகத்தார்க்கும் எனது அன்போடு கூடிய நன்றி உரித்தாகுக.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்,
28-06-95

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கோள் நூல்கள்

1. உண்மை விளக்கம்- வச்சிரவேலு முதலியார் தெளிவுரை, நல்லசாமிப்பிள்ளை ஆங்கிலமொழிபெயர்ப்பு
2. திருவருட்பயன் - புலோலிநகர் சு. சிவபாதசுந்தரம் B. A.
3. சைவபோதம் - இரண்டாம் புத்தகம் ,,
4. சிவஞானசித்தியார் - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவெளியீடு
5. சிவஞானபோதமும் சிற்றுரையும் -ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பரிசோதித்தவை.
6. முப்பொருள் உண்மை விளக்கம் - மு. இளையதம்பி B.A. (Lond)
7. வினாவெண்பா - வெளியீடு, அகில இலங்கை சைவப் புலவர்சங்கம்
8. இந்திய தத்துவஞானம் - கி. லக்ஷ்மணன் M. A.
9. சைவசமய வளர்ச்சி - டாக்டர் மா. இராசமாணிக்கனார்
10. சைவசமய சிந்தாமணி - சைவப்புலவர், தேசிகமணி கா. அருணாசல ஆசிரியர்
11. சைவசித்தாந்தம் - பொ. சங்கரப்பிள்ளை M.Sc. (Econ-Lond)
12. சைவசித்தாந்தம் - பேராசிரியர் ர. ராமானுஜாச்சாரி
13. முருகன் அல்லது அழகு - திருவாளர் வி. கலியாணசுந்தரனார்
14. சுப்பிரமணிய பராக்கிரமம் - மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை
15. வித்துவம் - வித்துவான் சி. குமாரசாமி
16. தொல்லியல் நோக்கில் - நடன காசிநாதன் எம். ஏ.
17. சைவ சித்தாந்தத் தெளிவியல் - மகாவித்துவான் அருணை வடிவேல்முதலியார்
18. புகழ் மணக்கும் வைணவத் தலங்கள் - புலவர் சி.முத்துப்பிள்ளை
19. இலக்கியக் கட்டுரைகள் -உயர்திரு. விபுலாநந்த அடிகள்
20. பரிபாடற் சொற்பொழிவுகள் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
21. திருஅருள்மொழி - ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
22. ஆழ்கடலான் - சிங்கை ஆழியான்
13. ஆறுமுகநாவலர் - இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
24. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் - தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம்
25. A Concise History of Ceylon - Published by the University of Ceylon, Peradeniya.
26. A Short History of Hinduism in Ceylon - C. S. Navaratnam
27. Sankara and Shanmata - Sovenir-Published in the Conference, Sankara and Shanmata held in Madras from June 1 ,June 9. 1669

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | காணபத்தியம் | 1 |
| 2. | சைவம் | 8 |
| 3. | சாக்தம் | 22 |
| 4. | வைணவம் | 28 |
| 5. | கௌமாரம் | 42 |
| 6. | சௌரம் | 56 |
| 7. | வேதாந்தம் | 61 |
| 8. | சைவசித்தாந்தம் | 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணபத்தியம்

பாரத நாட்டிலே தோன்றிய சமயங்களை இருபெரும் பிரிவுகளுள் அடக்கலாம். வேதங்களை முதனூல்களாய் ஏற்றவை ஒரு பிரிவு. வேதங்களை ஏற்காதவை மற்றொரு பிரிவு. முன்னைய பிரிவு வைதிகசமயம் எனவும் பின்னைய பிரிவு அவைதிக சமயம் எனவும் பெயர்பெறும். வேதங்களைப் பொதுநூல்களாகவும் (தத்தமது நோக்கில் முழுமுதற் கடவுளாய்க் கொள்பவருக்கென்று வகுத்த) ஆகமங்களைச் சிறப்பு நூல்களாகவுங் கொண்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் வைதிக சமயங்கள் ஆறாகும். இவை வடமொழியில், சண்மதங்கள் என வழங்கும். (சட்-ஆறு, மதம்-சமயம்) காணபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்பனவே சண்மதங்கள். திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகியவற்றில் அறுவகைச் சமயங்கள் பற்றிய செய்திகள் உண்டு. ஆனால் அவை சைவத்தோடு ஓரளவு ஒத்தும், முரணியும் நிலவிய புறப்புறம், புறம், அகப்புறம், அகச் சமயங்களில் (இவை ஒவ்வொன்றும் ஆறாறு பிரிவுகள் கொண்டவை) எவற்றையோ குறிப்பன என்றே கொள்ள வேண்டும். எனவே,

> முன்னமிரு மூன்று சமயங்கள் அவையாகிப்
> பின்னையருள் செய்த பிறையாளன்.

எனத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும்,

> அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்
> மறுசமயச் சாக்கியர்தம் வடிவினால் வருந்தொண்டர்.

எனச் சேக்கிழாரும் குறிப்பன சண்மதங்களோ 'என்பது ஆய்விற்குரியது. (சைவசித்தாந்த சாத்திரங்கள் குறிக்கும் நால்வகைச் சமயங்கள் பற்றிச் 'சைவசித்தாந்தம்' என்ற இயலிலே சிறிய விளக்கம் தரப்படும். மறுசமயச் சாக்கியர் - பௌத்தர், உலகாயதம், சமணம், பௌத்தம் முதலியன அவைதிக சமயங்களுள் அடங்கும்.)

ஏகான்மவாதியாகிய ஸ்ரீ சங்கராச்சாரியார் தமது காலத்திலே நிலவிய வைதிக சமயங்களான காணபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் ஆகியவற்றை மீள்தாபிதம் செய்தவர் (சண்மதப் பிரதித் தாபகர்) எனக் கொள்ளப்படுகிறார். அவர் பிரதித் தாபனம் செய்தவற்றுள் காணபத்தியம் பற்றி முதலில் நோக்குவோம்.

''வெள்ளுடை தரித்தவர், யாவிலும் மேலானவர், சந்திரன் போலும் குளிர்மையும் நிறமும் பொருந்தியவர், நான்கு புயஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர், எப்போதும் மலர்ந்த புன்முறுவலுடன் கூடிய திருமுகத்தினர், எல்லாத் தடைகளையும் போக்கியருள்பவர்" ஆகிய விநாயகக் கடவுள், தமக்கு மேலான தலைவர் இல்லாதவர். இவரின் மற்றொரு திருநாமம் கணபதி என்பதாகும். கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே காணபத்தியமாகும்.

கணபதி உபநிடதம், ஏரம்ப உபநிடதம், பார்சுவபுராணம் என்னும் விநாயக புராணம், ஸ்காந்தத்தின் ஒரு பிரிவான கணேச மகாத்மியம், பிரமவைவர்த்த புராணத்தின் கணேச புராணம், முட்கல புராணம், கணேசகீதை, கணேசதந்திரம், கணேசகற்பம், கணேசார சந்திரிகை என்பன காணபத்திய மதத்திற்குரிய முதனூல்களாகும். காணபத்தியத்தைக் கடைப்பிடிப்போர் காணபதர் எனப்படுவர். இவர்கள், கணபதியையே மற்றைய மதத்தவரும் முதன்மைப்படுத்துவர் என்று கூறுவது நியாயமானதே. ஏனெனில் மற்றைய வைதிக மதத்தவரும், (பௌத்தருங்கூட) தமது வழிபாட்டில் கணபதியாகிய விநாயகப் பெருமானுக்கு முதலிடம் வழங்குகின்றனர்.

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம்பிள்ளையார் பட்டுக் கோயிலிற் காணப்படுகின்ற கணபதி சிற்பமும், வேலஞ்சேரி, உத்தரமேரூரப் புடைப்புச் சிற்பத்தொகுதியும் கணபதி வழிபாடு கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டுகளில் நிலயமைச்குச் சான்றுகள் என்பர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் அறிமுகமாயிற்று என்பதும் ஒன்று. (நரசிம்ம பல்லவன் வடக்கே வாதாபி நகரை வென்று அங்கு நிலவிய விநாயகர் வணக்கத்தால் கவரப்பட்டு, அதனைத் தமிழ்நாட்டிலே அறிமுகம் செய்தான் என்பர்.) 7 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழிலக்கிய நூல்களிலோ தோத்திரங்களிலோ விநாயகர் பற்றிய செய்திகள் கிடைக்காததாலேயே இவர்கள் இம்முடிவுக்கு வந்திருக்கலாம். ஆனால் இருக்கு வேதத்திலேயே கணபதி பற்றிய செய்தியுண்டு என்பது அறிஞரின் முடிபு.

இருக்கு வேதத்தில் 'கணங்களின் தலைவர்' (கணபதி), ஞானிகளின் ஞானி அல்லது 'கவிஞர்களின் கவி' (கவீனாம்கவி), 'அரசர்களின் அரசர்' (ஜ்யேஷ்டராஜா) என்று போற்றப்படுபவர் கணபதியே என்பர். ஆனால் அவருக்கேயுரிய யானைமுகம் கூறப்பட்டமையால் இக்கூற்றினைத் திட்டவட்டமாகக் கொள்ளல் இயலாது. ஆனால் தைத்திரீய ஆரணியகத்தில் தந்தத்தை உடையவர் எனக் கூறப்படும் கடவுள் கணபதியே என்பதில் ஐயம் இல்லை. காயத்திரி மந்திரத்திலும் ''தந்தத்தை உடையவர் எமது சிந்தனைகளை வழிப்படுத்துக'' என்று கூறியுள்ளமையும் கவனிக்கத் தக்கது. இஃது எவ்வாறாயினும் இதிகாச காலத்தில் கணபதி - விநாயகராக, தமக்குமேல் தலைவர் இல்லாதவராக - ஆகி விட்டார்.

விக்கினேசுவரன் என்ற திருப்பெயர் கணபதிக்கு உண்டு. விக்கினம்-தடை, ஈசுவரன்-இறைவன், ஆன்மாக்கள் ஆணவத்தாலே மூடப்படாமல் இருக்க, அவற்றிற்குத் தடைகளை உண்டாக்கி, ஈற்றில் அருள்புரிபவர் என்பதே இத்திருப்பெயருக்குப் பொருள். பரம்பொருளின் வெளிப்பாடு ஓசையினின்றே ஏற்படுவதாகும். ''ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே'' என்பார் அப்பர் சுவாமிகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியினுடைய தும்பிக்கை ஓங்காரமாகிய பிரணவ வடிவமானது. அதற்கு அடையாளமாக 'உ' எனச் சுழியிடுவது வழக்கம். இதில் வட்டமாக இடும் சுழி விந்து ஆகிய சத்தியையும் கீறாகிய கோடு, நாதமாகிய சிவத்தையும் குறிப்பதால் சக்தி, சிவம் ஆகிய இரண்டினதும் உள்ளடக்கமாகப் பிள்ளையார் சுழி அமைந்தது. அகர உகர மகரச் சேர்க்கையாலாகும் 'ஓம்' என்னும் பிரணவத்தைக் கணபதியுடைய தும்பிக்கை குறியீடாகப் புலப்படுத்தும் எனக் கொள்ளலாம். 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' விநாயகப் பெருமான்.

சிவபெருமான் ஆண், பெண் என்ற இரு பால்களும் ஓர் உருவாய் அமைந்தவர் என்பதற்கு, அவரின் இடப்பாகத்தைச் சத்தியாகிய உமையின் பாகமாய்க் (அர்த்தநாரி - அர்த்தம் - பாதி நாரி - பெண்) காட்டுதல் உண்டு. கணபதியின் தந்தம் குறிக்கப்பட்ட வலப்பாகம் பெண்மையும், இடப்பாகம் ஆண்மையும் கொண்டதாய்க் கூறுவர். மகாகணபதிக்குப் பத்துக் கரங்கள் குறிக்கப்படும். அவற்றுள் ஒருபக்க ஐந்து கரங்களும் முறையே விட்டுணு, சிவன், மன்மதன், வராகம், தாம் (கணபதி) ஆகிய ஐவரையும் குறிக்கும். மற்றைய ஐந்து கரங்களும் இலக்குமி, பார்வதி, இரதி, பூதேவி, வல்லபை ஆகிய ஐவரையும் குறிக்கும். பிரமம் விலங்காகவும் மனிதனாகவும் தோற்றுவதென்பதைக் காட்ட அவருக்கு யானை முகமும் மனித உடலும் உள்ளன.

கணபதி கிருதயுகத்தில் தீ போன்ற நிறத்துத் திருமேனியும் சிங்க வாகனமும் பத்துத் திருக்கரங்களும் கொண்டு விநாயகர் என்ற திருநாமத்தோடு விளங்குவர். திரேதயுகத்தில் ஆறு திருக்கரங்களும் வெண்ணிறத் திருமேனியும் மயில்வாகனமுங் கொண்டு மயூரேசர் என அழைக்கப்படுவர். துவாபர யுகத்தில் இவருக்கு நான்கு திருக்கரங்களே இருக்கும். இக்காலத்தில் இவர் திருநாமம் கஜானனர். மேனியின் நிறம் சிவப்பு. கலியுகத்திற் புகை நிறம் (கபிலநிறம்-இதனால் கணபதிக்குக் கபிலன் என்ற திருநாமமும் வழங்கும்) பூண்டு தும்ரகேது என்ற நாமத்தோடு இரு திருக்கரங்களும் குதிரைவாகனமும் உடையவராய் விளங்குவார். (இது காணபத்தியர் கருத்து. ஆனால் நான்கு திருக்கரங்களோடு, தும்பிக்கையையும் சேர்த்து அவரை ஐங்கரனாகவே மூர்த்தம் அமைத்து வழிபடுகின்றோம்)

யானை முகமும் பருத்த வயிறும் மோதகம் ஏந்திய திருக்கரமும் கணபதியின் இன்பமே வடிவான பரிபூரணத் தன்மையைக் காட்டுவதாகவும், பூரணப் பிரமத்தின் உருவகமே இந்தத் திருக்கோலம் எனவும் காணபதர் கொள்வர். எலியாகிய ஆன்மாவை வாகனமாகக் கொண்டு, அண்ட சராசரங்களையும் தமது திருவயிற்றினுள்ளடக்கிக் கருணையாகிய மதநீரைப் பொழிந்த வண்ணம் விநாயகப் பெருமான் விளங்குகின்றார். கன்னமதம் முருகியல் ஞானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் கபோலமதம் (கபோலம் - கழுத்து) ஆன்மஞானம் எனவும் பீஜமதம் பிரமஞானம் எனவும் கொள்ளப்படும்.

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்.

(திருவருட்பயன் - காப்பு)

கணபதிக்கு ஐந்து திருக்கரங்கள் உள்ளன என முன்னரே கூறப்பட்டது. இவ்வைந்து கரங்களும் ஐந்தொழில்களையும் புரிவனவாகும். பாசம் ஏந்தியகை படைத்தலையும், தந்தம் ஏந்திய கை காத்தலையும், அங்குசம் ஏந்தியகை அழித்தலையும், தும்பிக்கை மறைத்தலையும், மோதகம் ஏந்தியகை அருளலையும் குறிப்பன என்பர்.

கணபதி பிரமசாரி என்றே நாம் கொண்டு வழிபடுகின்றோம். ஆனால் காணபதரோ அவருக்கு வல்லபை, நீலசரதவதி, சித்தி, புத்தி ஆகிய நான்கு சந்திகள் உளர் எனக் கொண்டு வழிபாடாற்றுவர். வடமொழியில் உள்ள எழுத்துக்கள் 51. இந்த ஐம்பத்தோரெழுத்துக்களினதும் மூலமாய், பிரணவமாய் நின்றொலிக்கும் கணபதிக்கு ஐம்பத்தொரு மூர்த்தங்கள் உண்டு. அவற்றுள் பாலகணபதி, தருணகணபதி, பத்தகணபதி, வீரகணபதி, சத்திகணபதி, துவஜகணபதி, சித்திகணபதி அல்லது பிங்கலகணபதி, உத்கிருஷ்டகணபதி, விக்கினராஜகணபதி, க்ஷிப்ரகணபதி முதலாக முப்பத்திரண்டு மூர்த்தங்கள் வணக்கத்திற்குரியன. தமிழ்மக்கள் பிள்ளையார் என்ற திருநாமத்தோடு இவரை ஆலயங்களிலும் ஆறுகுளக்கரைகளிலும், அரச மரங்களின் கீழும் எழுந்தருளப்பண்ணி வழிபாடாற்றுகின்றனர். க்ஷணிகலிங்கம் (மா, சர்க்கரை முதலியவற்றால் உடனுக்குடன் சிவலிங்க வடிவைச் செய்து வழிபடுவதற்கான முறைமை) போன்று சாணத்தால், பிள்ளையார் செய்து அறுகம்புல்லை உச்சியில் குத்தி வைத்தும், மஞ்சட்பொடியால் அவ்வாறு செய்தும் வைத்து வழிபடலும் உண்டு. காணபத்திய மதம் மகாராஷ்டிர தேசத்திலே(பம்பாய்) முதன்மையான மதமாக நிலவி வருகின்றது.

தோபிகரணம் - (தோப்புக்கரணம்) இட்டும், சிதறு தேங்காயடித்தும் விநாயகர் சந்நிதியிலே வழிபாடு நிகழ்த்துவர். செவிகளை மாறுகைகளாற் பற்றி இருந்து எழுந்தும், நெற்றியில் குட்டியும் வழிபடலே தோபிகரணம்' என்பதாகும். ஆணவத்தை முற்றாகத் தகர்த்துப் பரஞானத்தைப் பெறுவதனைக் குறியீடாகக் காட்டி நிற்பதே சிதறு தேங்காயடித்தல். ஸ்கந்தபுராணம், காஞ்சிபுராணம் முதலான நூல்களிலே கணபதியின் திருவவதாரம் கூறப்படும்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கணபதி தோற்றத்தினை அழகாகப் பாடியுள்ளமை யாவரும் அறிந்ததே. வாதுளாகமம், கணபதி சிவபெருமானின் கண்டத்திலிருந்து தோன்றியதாகக் கூறும்.

விநாயகபுராணம் விநாயகரின் தோற்றம், அவர் கயமுகாசுரனை வதைத்தமையாகிய செய்திகளை விரிவாக எடுத்துரைக்கும். அதன் சுருக்கம் வருமாறு:-

ஒரு காலத்திலே கயமுக (யானைமுக) அசுரன் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவஞ் செய்து அளவில்லாத பல வரங்களையும் பெற்றுக்கொண்டான். தனது வரமகிமையாலே செருக்குற்ற அவன் தேவர்களைப் பெரிதும் வருத்தினான். ''என்னைக் காணும் போதெல்லாம் கரங்களைப் பொத்திப் பிடித்து நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, கைகளை மாறிச் செவிகளைப் பிடித்து மூன்று முறை இருந்தெழுதல் வேண்டும்'' என்று தேவர்களுக்குக் கட்டளையும் இட்டான். தேவர்கள் அவன் கட்டளைப்படியே நடந்து வந்தனர். நாட்செல்லச் செல்லக் கயமுகாசுரனின் அக்கிரமங்கள் அளவு கடந்தன. அவற்றை ஆற்றாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் அவர்களின் முறையீட்டுக்கு இரங்கி ''உங்கள் துயரை விரைவில் துடைப்போம்'' என்று உறுதியளித்தருளினார்

ஒருநாள் சிவபெருமானும் உமாதேவியாரும் திருக்கைலாசத்திலே பூங்காவில் அமர்ந்திருந்தனர். இருவரின் திருவிழிகளும் அங்குள்ள சித்திர மண்டபத்தை நோக்கின. சுவர்ப்புறத்திலே 'ஓம்' என்னும் பிரணவம் ஆண், பெண் வடிவுகள் கொண்ட இரு யானைகளாகத் தோன்றின. உமாதேவியார் அவற்றின் அழகிலே திருநோக்கம் செய்தருளினார். அந்த அருட்பார்வையால் சுவரோவியங்களான களிறும் பிடியும் உயிர்பெற்றுக் கூடின. அந்தக் கூட்டத்தின் பயனாக விநாயகர் தோன்றியருளினார். அம்மையும் அப்பனும் விநாயகர் மீது அருணோக்கம் செய்து, முதலிலே தோன்றியமையால் அவருக்கு ''மூத்தபிள்ளை'' என்ற திருநாமத்தை வழங்கினர். சிவபெருமான் ''நீ ஆன்மாக்களின் விக்கினங்களைப் போக்கியருள்வாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்னரும் ''தேவர்களை வருத்தும் கயமுகாசுரனை வதைத்து ஆட்கொண்டு தேவர்களின் இடர்போக்கு'' என்றும் பணித்தருளினார்.

தந்தையின் பணிப்பை ஏற்றுக் கணபதி கயமுகாசுரனோடு போராடி அவன் ஆணவத்தினை ஒடுக்கியருளினார். அவன் எலி வாகனமாகி அவரைச் சுமந்திடும் பேறடைந்தான். தேவர்களும் தமது துயரம் நீங்கப் பெற்றனர்.

இது விநாயக புராணம் கூறும் கதை. கயமுகாசுரன் தேவர்களைத் தனக்கு மும்முறை தோப்புக்கரணமிட்டு வணங்குமாறு பணித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். எனவே விநாயகப் பெருமானுக்கும் மும்முறை தோப்புக்கரணமிட்டு வழிபடுவது கயமுகாசுரனை வழிபடுவதையே ஒக்கும் எனவும், விநாயகருக்கு ஐந்துமுறை தோப்புக்கரணமிட்டு வழிபடலே சிறந்ததென்றும் சைவப் பெரியார் ஒருவர் கூறியது இவ்விடத்தில் நினைவு கூரற்குரியது. விநாயகர் சிவபெருமானின் வேறல்லர். இருவரும் ஒருவரே என்பதைக் கந்தபுராணம் போல விநாயகபுராணமும் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கதே. ''இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, திவ்யன், சுபர்ணன், கருத்மான் முதலிய பலபெயர்களால் அறிவாளிகள் கடவுளைச் சொல்கிறார்கள். ஆயினும் கடவுள் ஒருவரே'' என்னும் இருக்குவேத மகா வாக்கியத்தை இவ்விடத்தில் உளங்கொள்வது பொருத்தமாகும்.

''ஆதலால் விநாயகர் முதலியோரும் அவருடைய (சிவபெருமானுடைய) திருவருட்சத்தியாம். சத்தியும், சிவமும் நெருப்பும் அதன் சூடும்போல ஒன்றானவை. ஆகவே சிவபெருமான், உமாதேவியார், விநாயகர் என்று பல பெயர்கள் இருந்தாலும் பதி ஒரே பொருளாம். அப்பர் சுவாமிகள் ''ஒருவர்தாம் பல பேருளர் காண்மினே'' என்றார்,

(சைவபோதம், இரண்டாம் புத்தகம்)

நம்பியாண்டார்நம்பி ஔவையார் ஆகிய தமிழ்ப் புலவர் பெருமக்கள் கணபதியாகிய விநாயகரை இட்ட தெய்வமாக வழிபட்டு மேன்மைகளை அடைந்தார்கள். விநாயகரை வழிபட்டதால், சுந்தரர், சேரமான்பெருமாள் ஆகியோர் முறையே வெள்ளானையிலும், குதிரையிலும் திருக்கைலாசம் செல்ல, ஔவையாரோ விநாயகரின் தும்பிக்கையால் தூக்கப்பட்டு இவர்களுக்கு முன்பே திருக்கைலாசத்திலே சேர்க்கப்பட்டார் என்பர். நம்பியாண்டார்நம்பி, விநாயகப் பெருமானின் அருளாலே, குருவிடம் சென்று கற்காமலே கலைஞானம் பெற்றதோடு, அவரின் வழிகாட்டலிலே திருமுறைகளையும் சிதம்பரத்திலே பெற்று, தொகுத்துச் சைவ உலகத்திற்கு அளித்தருளினார். சைவர் எக்கருமத்தையும் விநாயக வணக்கத்துடனேயே தொடங்குவர். எழுதத் தொடங்கும்போது பிள்ளையார் சுழி இடுவது சைவமரபு. எள்ளுருண்டை, மோதகம், அப்பம், அவல், நெற்பொரி ஆகியன கணபதிக்கு உகந்த நிவேதனப் பொருள்கள் என்பார் அருணகிரியார். அறுகு, நந்தியாவர்த்தம்பூ, விநாயகருக்குகந்த பத்திர புஷ்பங்கள்.

விநாயகர், லம்போதரர் (பெருவயிரவர்), கஜானனர் (யானை முகத்தர்), சூர்ப்பகர்ணர், (சுளகுக்காதர்), விக்நராசர், மூஷிகவாகனர் (எலியை வாகனமாகக் கொண்டவர்), முதலாகப் பல திருநாமங்களை அளித்துக் கணபதியினை வழிபடுகின்றோம். மகாராஷ்டிரத்திலே, மயூரக்கிராமத்லே (மோர்க்கஓன்) எழுந்தருளிய கணபதியை மூமரேசர் என்ற பெயரால் வழிபடுவது வழக்கமாயிருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்களும் சமணர்களுங்கூடக் கணபதியை வழிபடுவர். இலங்கையிலுள்ள சில பௌத்த விகாரைகளிலே 'கணபதி தெய்யோ, என்ற பெயரிட்டு விநாயக விக்கிரகத்தை வைத்து இன்றும் வழிபடுகின்றனர். அநுரதபுரத்திலுள்ள தொல்பொருளகத்தில் விநாயகர் மோதகத்திற்குப் பதிலாக மாங்கனி ஒன்றினைக் கையில் வைத்திருக்கும் விக்கிரகம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இது விநாயகரும் முருகனும் சிவபிரானிடமிருந்து மாங்கனி பெறப் போட்டியிடும் கதையை நினைவூட்டுவதாகும். ஜாவாவிலும் விநாயக வழிபாடு நிலவியமைக்குச் சான்று. அங்குக் கிடைத்த விநாயகர் விக்கிரகங்களாகும். அண்மைக்காலத்தில் கபால விநாயகர் (மண்டையோடு தரித்த விநாயகர்) விக்கிரகம் பர்மாவில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை இலங்கைக்குக் கொணர்ந்து யாழ்ப்பாணத்திலும் தரிசனத்திற்கு வைத்தமை நினைவுகூரத் தக்கதாகும்.

இவ்வாறு காணபதரின் முழுமுதற் கடவுளான கணபதி சைவர் முதலியோரின் முதல் வணக்கக் கடவுளாகவும் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றில் ஒரு காலத்தில் பரவலாக வழிபடப்பட்டவராகவும் விளங்குவது எமது கவனத்தை ஈர்க்கும் ஒரு செய்தியேயாகும்.

ஆவணி மாதத்துச் சதுர்த்தி, கார்த்திகை மாதத்துச் சட்டி, சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை) ஆகியன கணபதிக்குரிய விரத தினங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம்

''உண்மைப் பொருள் ஒன்றே. அதனை அறிவாளர் பல பெயர்களால் வழங்குவர். என்று இருக்கு வேதம் கூறும். அந்த உண்மைப் பொருளே சிவம். அதனை முதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம். சைவநெறி நின்று ஒழுகுபவர்கள் சைவர்கள். சிவம் பேருண்மை, பேரறிவு, பேரருள் மூன்றும் ஒருசேர அமைந்த பரம் பொருள். சத்து-பேருண்மை. சித்து-பேரறிவு. ஆனந்தம்-பேரருள். சிவம் சச்சிதானந்த மயமானது.

## சைவத்தின் முதனூல்கள்.

### அ) வேதம், ஆகமம்.

சைவத்தின் முதனூல்கள் வேதங்களும் ஆகமங்களுமாகும். வேதம் பொதுநூல். ஆகமம் சிறப்பு நூல். வேதங்களை ஏற்றுக் கொண்டமையால், சைவசமயம் வைதிக சைவம் எனவும் வழங்கும்.

'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்பது திருத்தொண்டர் பெரியபுராணத் திருவாக்கு.

சைவநெறியில் ஆகமங்களே முதன்மை பெறுகின்றன. இறைவனே ஆகம வடிவானவன் என்பது சைவர்கள் கருதிது.

'ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என்பது மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாக்கு. ஆ - பாசம், ப - பசு, ம - பதி = ஆகமம். கம - என்ற வடசொல் போதல் என்னும் பொருளது; ஆ என்ற உபசர்க்கம் சேர்வதால் அதன் எதிர்மறைப் பொருளான வருதல் எனப் பொருள் கொள்ளப்படும். எனவே ஆகமம் என்பதற்கு இறைவனாகிய சிவபெருமானிடமிருந்து வந்தது என்பது பொருள். வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுக்கப்பட்டுள்ளன. ஆகமங்கள் சாமிகம் முதல் வாதுளம் வரை இருபத்தெட்டாகும்.

வேதங்கள் யாகக் கிரியைகளை வழிபாட்டு முறையாகக் கொள்கின்றன. ஆகமங்கள் ஆலய வழிபாட்டினை முதன்மையாகக் கொள்கின்றன.

'ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'

என்ற சிவஞானபோத நூலின் இறுதியடி சிவாகமக் குறிக்கோளின் சாரம் எனலாம்.

ஆகமங்கள், கோயில்களின் அமைப்பு, விக்கிரகங்களின் அமைப்பு அவற்றை ஆலயங்களிலே எழுந்தருளச் செய்தற்கான முறைமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைக்கிரமம், அபிடேகம் ஆகியவற்றையும், குரு, லிங்கம், சங்கமம் ஆகிய மூவகை வழிபாட்டு முறைகளையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்கங்களின் விளக்கத்தையும் சிவசின்னங்களான உருத்திராக்கம், விபூதி, ஸ்ரீபஞ்சாட்சரம் என்பவற்றின் தத்துவ உண்மைகளையும் விளக்கி வழிகாட்டுவன.

(ஆ) தோத்திர நூல்கள்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய நாயன்மார் மூவரும் அருளிய தேவாரங்கள் (1-7 ஆந் திருமுறைகள்), மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் (8 ஆந் திருமுறை), சேந்தனார், திருவாலியமுதனார், முதலாம் சிவனடியார்கள் ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா, சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு (9 ஆந் திருமுறை), திருமூலர் அருளிய திருமந்திரம் (10 ஆந் திருமுறை) திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள் நாயனார் உள்ளிட்ட பன்னிருவர் அருளிய பிரபந்தங்கள் நாற்பது (11 ஆந் திருமுறை), சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் (12 ஆந் திருமுறை) என்பன சைவ சமயத்திற்குரிய தோத்திர நூல்களாகக் கொள்ளப்படும். இவற்றுள்ளே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் (பெரியபுராணம்) என்பவற்றிலுள்ள திருப்பாடல்கள் ஆலயங்களிலே வழிபாட்டின்போது ஓதப்படுவன. இவற்றைப் 'பஞ்சபுராணங்கள், என்பர். திருமந்திரம் தோத்திரமாக மட்டுமன்றிச் சாத்திரமாகவும் கொள்ளப்படும். சைவசமயத்தின் மிக்குயர்ந்த தத்துவமான 'சைவ சித்தாந்தம்' என்ற சொற்றொடர் முதன்முதற் கையாளப்பட்டது திருமந்திரத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து நரசிம்ம பல்லவன் காலத்துக் கல்வெட்டொன்றில் 'நான் ஒரு சைவசித்தாந்தி' என்று பொறிக்கப்பட்டுள்ளமையும் கருதத்தக்கதே.

சிவபெருமானின் அருள்வழி நின்று பாடியருளப்பட்டமையால் திருமுறைகள், சிறப்பாகச் சமயகுரவரின் திருப்பாடல்கள் 'திருவருட்பாக்கள்' எனப்படும். தெய்விகம் வாய்ந்த திருப்பாடல்களின் தொகுப்பு என்பதால், இவற்றைத் திருமுறைகள் எனவும் அழைப்பர். சைவசித்தாந்த நெறியானது தத்துவ வடிவிலே உருவாகத் திருமுறைகளும் அடிப்படை சமைத்தன.

(இ) சாத்திர நூல்கள்.

சைவசமயத்தின் தத்துவங்களை விரிவாகவும், விளக்கமாகவும் தரும் நூல்கள் சாத்திரங்களாகும். சித்தாந்தத்தை உணர்த்துவதால், இவை சித்தாந்த சாத்திரங்கள் எனவும், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையைக் கண்டவையாதலால் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் வழங்கும். மெய்கண்ட சாத்திரங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை வாய்ந்த சிவஞானபோதம் வடமொழியில் ஆக்கப்பட்டுப் (இரௌரவ ஆகமம்) பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதென்றும் தமிழில் முதலில் ஆக்கப்பட்டுப் பின் வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டதென்றும் இருவேறு கருத்துக்கள் சைவ அறிஞரிடையே நிலவுகின்றன. மெய்கண்டசாத்திரங்களை இயற்றியருளியவர்கள் சந்தானகுரவர் எனப்படுவர்.

சந்தானம் என்பது பரம்பரையைக் குறிக்கும் வடசொல். குரு என்ற வடசொல்லின் பன்மை குரவர் ஆகும். எனவே சந்தான குரவர்' என்பது குருபரம்பரையினர் எனப் பொருள்படும். இப்பரம்பரையின் முதல்வராகக் கொள்ளப்படுபவர் வித்தியேசர். அவரின் சீடர் ஆனந்ததேவர். ஆனந்ததேவருக்குச் சீடர் ஸ்ரீகண்டருத்திரர். நந்திதேவர் அவருக்குச் சீடர். நந்திதேவரின் சீடர் சனற்குமாரர். சனற்குமாரரின் சீடராகச் சத்திய ஞான தரிசினிகளும், அவர் சீடராகப் பரஞ்சோதி முனிவரும் அமைந்தனர். இவர்கள் யாவரும் கைலாச வாசிகளாதலின் சந்தான குரவர் வழியைத் திருக்கைலாச ஞான பரம்பரை என்றழைப்பதுண்டு. இவர்கள் அகச்சந்தான குரவர்கள். சத்தியஞானதரிசினிகள் பூவுலகம் வந்து மெய்கண்டாருக்கும் மெய்கண்டார் அருணந்தி சிவாசாரியாருக்கும், அருணந்தி சிவாசாரியார் மறைஞான சம்பந்தருக்கும், மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாசாரியாருக்கும் முறையே குரவர்களாய் விளங்கினர். கைலாசத்துக்குப் புறத்தே பூவுலகிலே வாழ்ந்து மெய்கண்ட சாத்திரங்களை அருளியமையால் இவர்கள் புறச்சந்தான குரவர்கள். இவர்களும் இவர்களின் சீடர்களும் பிறரும் ஆக்கிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு. அவற்றின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்ததேவர் |
| 2. | திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்ததேவர் |
| 3. | சிவஞானபோதம் | மெய்கண்டதேவர் |
| 4. | உண்மைவிளக்கம் | திருவதிகை மனவாசகம் கடந்ததேவர் |
| 5. | சிவஞானசித்தியார் | அருணந்திசிவாசாரியார் |
| 6. | இருபாஇருபஃது | அருணந்திசிவாசாரியார் |
| 7. | சிவப்பிரகாசம் | உமாபதி சிவாசாரியார் (இவ்வெட்டும் சித்தாந்த அட்டகம் என வழங்கும்) |
| 8. | திருவருட்பயன் | |
| 9. | வினாவெண்பா | |
| 10. | போற்றிப்பஃறொடை வெண்பா | |
| 11. | கொடிக்கவி | |
| 12. | நெஞ்சுவிடுதூது | |
| 12. | உண்மைநெறிவிளக்கம் | |
| 14. | சங்கற்பநிராகரணம் | |

வேத, ஆகம, திருமுறைகளின் சாரமும் விளக்கமுமாய் அமைந்து சைவர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாய் உள்ளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மெய்கண்ட சாத்திரங்களே. இவை பற்றிய சுருக்கமான விளக்கம் 'சைவ சித்தாந்தம்' என்ற இயலிலே தரப்படும்.

சைவத்தின் பழமை

சைவம் சநாதனமானது. அது என்று தோற்றியது என்று எவராலும் உறுதியாகக் கூறல் இயலாது. எனினும் வரலாற்றடிப்படையிலே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் சிவ வழிபாடு நிலவியமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

வடமேற்கு இந்தியாவிலே சிந்துநதி பாய்ந்து வளப்படுத்தும் பள்ளத்தாக்கிலே கி.மு, 3000 ஆண்டளவில் தலைசிறந்த நாகரிகம் நிலவியது. (இந்நிலப்பகுதி இன்று பாகிஸ்தானுக்கு உரிமையாயுள்ளது) இந்து நாகரிகத்தின் சிறப்பியல்புகளை அறியச் சிந்துவெளியிலே ஆரப்பா, மொகஞ்சதாரோ என்ற புராதன நகரங்களிற் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்களான முத்திரைகளும் சிறிய உருவங்களும் உதவுகின்றன இங்கு வாழ்ந்த மக்கள் சிவனைச் சிவலிங்கவடிவிலும், மூன்றுமுக மூர்த்தி வடிவிலும் ஒரு முகமூர்த்தி வடிவிலும் (பசுபதி), நடராசர்வடிவிலும் வழிபட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன, தாய்த்தெய்வம், நந்தி ஆகியனவும் வழிபடப்பட்டன என்பதற்கும் சான்றுகள் உண்டு. சிந்துவெளிப் புதை பொருளாராய்ச்சியிலே முதன் முதல் ஈடுபட்ட சேர். ஜோன் மார்ஷல் கூறுவன இவை:

> ''மொகஞ்சதாரோவினதும், ஆரப்பாவினதும் வெளிப்பாடுகளாய் நாம் பெற்றுள்ள பறவற்றுள்ளும் சைவசமயம் பற்றிக் கிடைத்தவையே மிகச் சிறந்தனவும் குறிப்பிடத்தக்கனவுமாகும். இந்நாகரிக வரலாறானது பழங்கற்காலத்திற்குரியதாகும். எனவே புரதானமான சமயநம்பிக்கையின் மிகப் பழமை வாய்ந்தது சிவவழிபாடே எனலாம்.''

ஆரியர் என்ற இனத்தினர் இந்தியாவிற் குடியேறியது கி, மு. 1500 அளவிலாகும். உலகின் மிகப் பழமையான சமய இலக்கியமான இருக்கு வேதம் கி. மு. 1500 க்கு உரியது என்பர். வேதத்திலே 'சிவம்' என்ற சொல் கையாளப்படினும் அது மங்கலம், அழகு முதலாம் பொருள்களிலேயே கையாளப்பட்டது என்றும் 'தெய்வம், என்ற பொருளிற் கையாளப்படவில்லை என்றும் உலகப் புகழ் வாய்ந்த தத்துவப் பேராசிரியர் எஸ். இராதாகிருஷ்ணன் கருதுகின்றார். சிவவழிபாடு திராவிடரிடமிருந்து ஆரியர் பெற்றுக் கொண்டது என்றும் அவர் முடிவுசெய்கிறார். தமிழர் திராவிட இனத்தினர். எனவே சிவவழிபாடு தென்னிந்தியாவிற்கே உரித்தான ஐயாயிரமாண்டுப் பழமை வாய்ந்த ஒன்று மன்பது இதனாற் பெறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடநூல் முடிபுகள்

இந்து மதத்தின் தொல்லிலக்கியமான வேதத்தின் இறுதியாக வும் சாரமாகவும் விளங்குவன உபநிடதங்கள். இவற்றுள் ஒன்றான சுவேதாசுவதர உபநிடதத்திலே,

> ''தெய்வங்களுக்கெல்லாம் தெய்வம், எல்லா இறைதன்மை யையுங் கடந்த மாபெரும் இறைதன்மையை உடையவர், எல்லா உலகங்களுக்கும் தலைவர்''

என்று சிவபெருமான் போற்றப்படுவதாய் அறிந்தார் உரைப்பர். பிரகத்ஜபால உபநிடதத்தில் அவரின் ஈசானம், தற்புருடம், அகோ ரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகியன முறையே தலை, முகம், தொடை, மறையுறுப்பு, பாதங்கள் எனக் குறிக்கப்படுகின்றன. இவை யாவும் சேர்ந்த முழுவுடலும் 'ஓம்' என்னும் பிரணவமா கும் என்றும் அந்த உபநிடதத்திலே கூறப்பட்டுள்ளது. அதர்வசிக உபநிடதம் பிரமா, விட்டுணு, உருத்திரன், ஈசுவரன், சிவன் ஆகிய கடவுளியல்புகள் யாவும் ஒருசேர அமைந்த பதியே சிவபெருமான் எனக் கூறுகின்றது. இவரை வழிபட்டால் எல்லா நன்மைகளும் கிடைக்கும் என்று அந்த நூல் உரைப்பதையும் காண்கின்றோம். உமையோடு பிரிவின்றி விளங்கித் தோன்றும் பரம்பொருளான சிவனை இதயத்தில் தியானம் செய்யுமாறு கைவல்ய உபநிடதம் அறிவுறுத்துகின்றது. வேதங்களில் இடம்பெற்ற உருத்திரனே பின்னர்ச் சிவபெருமானாகக் கொள்ளப்பட்டதாகக் கூறுவதும் ஒன்று.

இவ்வாறே சிவாகமங்கள், பாரத இதிகாசம், பின்வந்த சிவ புராணங்கள் ஆகிய யாவும் சிவபெருமானின் பரம்பொருட்டன்மையை ஏற்று, அவரை வழிபடலே பிறவி எடுத்ததன் பயன் என்று வலி யுறுத்தல் காணலாம்.

## சங்க நூல்களிற் சிவன்

சங்கநூல்களிலே 'சிவன்' என்று பெயர்சுட்டி அவர் போற்றப் படுதலைக் காணவியலாது, ஆனால் சிவனுடைய பேரியல்புகளும், பெருந்திறங்களும் ஆங்காங்கே குறித்துக் காட்டப்படுகின்றன. இச் செய்திகள் பத்துப்பாட்டிலும், எட்டுத்தொகையிலும் ஆங்காங்கு விளங்கித் தோன்றுகின்றன. சங்ககாலம் கி.பி 100 - 300 என்பர்

புறநானூற்றிற் கடவுள் வாழ்த்ததாக வரும் பாடல், 'கண்ணி கார்நறும் கொன்றை எனத் தொடங்குகின்றது. அப்பாடல், சிவ பெருமான் அணிந்தருளிய கொன்றைமாலை, ஊர்தியாகக் கொள் ளும் வெள்ளேறு (இடபம்), அவர்தம் நஞ்சுண்டு கறுத்த கழுத்து கண்டம், அதனை வேதம் வல்ல அந்தணர் புகழ்ந்து பாடுதல், உமாதேவியாரை இடப்பாகம் கொள்ளல், நெற்றியில் அணிந்த இளம்பிறை, அது பதினெண் கணத்தினராலும் புகழப்படுதல், எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுயிர்க்கும் காப்பருளும் கங்கை சூடிய செஞ்சடை பற்றியெல்லாம் புகழ்ந்து பாடுவதாய் அமைந்துள்ளது. இப்பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார், கடவுள் வாழ்த்தினை நூற்பாடல்களுடன் சேர்த்துக் கணிக்கும் வழக்கம் இல்லை. புறநானூற்றைத் தொகுத்தவரே இப்பாடலையும் பாடிச் சேர்த்திருக்கலாம் என்று கொண்டு, சங்கப்பாடல் வரிசையிலிருந்து இதனைத் தவிர்த்தாலும் புறநானூற்றுப் பாடல்களிலே ஆங்காங்குச் சிவன்பற்றி வருஞ் செய்திகளையும் அவ்வாறு தவிர்த்தல் இயலாது.

பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி வேதவழி நின்று யாகங்கள் பல நிகழ்த்தியவன் இவன் பெயருக்கு அடையாகப் 'பல்யாகசாலை' என்ற சொற்றொடர் சேர்க்கப்பட்டுள்ளது. புறநானூற்று 9 ஆம் பாடலிற் காரிகிழார் என்னும் புலவர் ''நின்கொற்றக்குடை, முனிவர்களாலே போற்றப்படும் முக்கட்செல்வரின்(சிவபெருமானின்)கோயிலை வலம்வரும் பொழுது தாழ்வதாக'' என்கின்றார். இப்பாடலிலே கோயில் என்பதற்கு நகர் என்றசொல் கையாளப்பட்டுள்ளது, (பல்லவர்காலத்திலே 'பரமேசுவர விண்ணகரம்' என்று ஒரு கோயில் குறிக்கப்படுவது இதனோடு ஒப்பிடத்தக்கது.) வேத நெறியோடு ஆகம நெறியான கோயில் வழிபாட்டிலும் ஈடுபட்டு 'முக்கட்செல்வரை' வணங்குவதையும் பெருவழுதி கடைப்பிடித்தான் என்பது இப்பாடலாலே தெரியவருகிறது. வேதகாலத்தில் விக்கிரகவழிபாடு நிலவியமைக்குச் சான்றுகள் இல்லை என்பர். வேதங்களிலே குறிக்கப்படுந் தெய்வங்களின் உருவங்கள் ஆங்காங்கு வருணிக்கப்பட்டுள்ளமை உண்மைதான், ஆனால் அவை விக்கிரகங்களாய் வடிவமைக்கப்பட்டு வழிபடப்படவில்லை. ஆகமவழிபாட்டுமுறையிலேயே விக்கிரகவழிபாடு முதன்மை பெறுகிறது. இது சங்ககாலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டமைக்கு மேற்குறித்த பாடலை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்

ஆலமர்செல்வன் (சிறுபாணாற்றுப்படை - அடி 96.) சூலம் பிடித்த சுடர்படைக் காலக்கடவுள் (பதிற்றுப்பத்து), முதுமுதல்வன் (புறம் 55) பைங்கட்பார்ப்பான் (புறம் 54), புங்கம் ஊர்பவன் (புறம் 100 , மறுமிடற்று அண்ணல் (பரிபாடல் 5), கணிச்சியோன் (கலித்தொகை 5) ஒருகுழை ஒருவன் (கலித்தொகை), வாலிழை பாகத்தொருவன் (ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து) முதலாகப் பல்வேறு சொற்றொடர்கள் சிவபெருமானின் மாண்புகளை அறியத் தருகின்றன.

சிவனுக்குரிய கொடி, 'ஆனேற்றுக்கொடி' அவன் அமர்ந்தருளுவது 'ஆலமுற்றம்' அவன் பலவடிவுகள் தாங்கி யாவற்றையும் ஒடுக்கி அழித்து ஆடும் ஆடல் கொடுகொட்டி முப்புரங்களையும் எரித்து வெந்த நீறுபூசி ஆடும் ஆடல் பாண்டரங்கம் இமயமலையிலே உமையம்மையுடன் அவன் எழுந்தருயிருக்கையில் இராவணன் அம்மலையினை எடுக்க முயன்று அல்லற்பட்டு ஆற்றாது கதறியழுதமை என்பன கலித்தொகை மூலம் அறியப்படும் செய்திகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன்

என்பது மதுரைக்காஞ்சி மூலம் அறிய வருவதாகும்.

இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் பொழுது, சங்க காலத்திலேயே சிவபெருமானுக்குரிய திருவுருவ அமைப்புப்பற்றிய புராணச் செய்திகள் நிலவியுள்ளன என்பதும் அச்செய்திகளின் அடிப்படையிலே மக்கள் சிவனைத் திருவுரு அமைத்து வழிபட்டனர் என்பதும் கோயில் வழிபாட்டோடு, யாக வழிபாடும் அக்காலத்தில் இடம் பெற்றன என்பதும் பெறப்படுகின்றன.

சங்ககாலத்துக்குப் பின்—ஒரு பறவைப் பார்வை

சங்ககாலத்திலே கோயில் அமைத்து வழிபட்ட போதிலும் பொதியில் என்னும் பொது இடங்களிலேயே இறைவழிபாடு பெருமளவு இடம் பெற்றமைக்குச் சான்றுகள் உண்டு. சங்ககாலத்தை அடுத்துவந்த காலப்பகுதியான சங்கமருவிய காலத்தில் (கி. பி. 300-600), கோயில்கள் முன்னரிலும் கூடிய எண்ணிக்கையில் அமையலாயின. இக்காலப் பிரிவைச் சேர்ந்த கோச்செங்கட் சோழன் திருத்தொண்டர் பெரிய புராணத்து நாயனார் அறுபத்துமூவர் வரிசையில் இடம்பெறுகின்றான், காவிரிக்கரையிலே 'சந்திரசேகரருக்குத் தானங்கள் (கோயில்கள்) பல சமைத்ததாய்' அறிகிறோம். மண்ணாலும் மரத்தாலும் ஆன இவை இயற்கையின் தாக்குதலுக்கு ஆற்றாது சிதைந்து போயின. இக்காலப் பிரிவில் வாழ்ந்த காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (2), திருவிரட்டை மணிமாலை ஆகிய சைவப்பிரபந்தங்களை இயற்றிப் பத்தியிலக்கியத்திற்கு முன்னோடியானார்;

அடுத்து வந்த பல்லவர் காலத்தில், (கி.பி. 600 - 900) மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன், இராசசிம்மன் முதலாம் வேந்தர்கள் முறையே குடைவரைக் கோயில்கள், தனிக்கற்கோயில்கள், கருங்கற் கோயில்கள் என்பவற்றைச் சமைத்துச் சிவவழிபாட்டிற்கு மேலும் வளஞ் சேர்த்தார்கள் சமயகுரவர்கள் நால்வரும்,சேரமான் பெருமான் நாயனாரும், ஐயடிகள் காடவர்கோனும் சிவபெருமானுக்குப் பத்திப் பாமாலைகள் சூட்டி, அக்காலச் சிவத்தலங்களுக்கு நிலைபேறளித்ததோடு, பத்திவெள்ளம் பிரவகித்து ஓடவும் வழிசமைத்தார்கள்.

பல்லவர் காலத்தைத் தொடர்ந்து சோழப்பெருமன்னர்கள் பேரரசமைத்துப் பெருவாழ்வு வாழ்ந்தகாலத்தில், உன்னதமான பெருங் கோயில்கள் எழுகின்றன. இராசராசன், இராசேந்திரன் போன்ற புகழ்சால் மன்னர்கள், அமைத்த இராசராசேச்சரம், கங்கைகோண்ட சோழேச்சரம் முதலான பெருங்கோயில்கள் பெருவுடையாரான சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான்மீது மீளா அடிமைத்திறம் கொள்ளவைக்கின்றன. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடியருளப்பட்ட காலமும், மெய்கண்ட சாத்திரங்கள் உருவான காலமும் சோழர் காலமே (கி.பி. 900-1300), சேக்கிழார் திருத்தொண்டர் பெரியபுராணத்தைத் தந்தருளியமையும் இக்காலமே.

அடுத்து நாயக்கர், விசயநகரப்பேரரசின் பிரதிநிதிகளாய் மதுரையிலும், தஞ்சாவூரிலும் அமர்வதற்கு இடைப்பட்ட காலத்தில் சைவத்துக்குச் சிறிது தளர்ச்சி ஏற்படுகின்றது, கி.பி. 15ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியரின் படையெழுச்சியும் பேரழிப்புமே இதற்குக் காரணங்கள். எனினும் நாயக்கமன்னர் காலத்தில் சைவம் மீண்டும் தலையெடுக்கிறது. தலபுராணங்கள் தோன்றுகின்றன. மெய்கண்ட சாத்திரங்களுக்கு உரை வகுக்கும் பணி தொடர்கிறது. துறைமங்கலம் சிவப்பிரகாசர், குமரகுருபரசுவாமிகள் முதலியோர் சைவப் பிரபந்தங்கள் பல இயற்றுகின்றனர். கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன பாண்டியர் பாணி, நாயக்கர்பாணி என்று கோயிற் கட்டடக்கலை புதுமலர்ச்சி பெறுகின்றது. மடாதீனங்கள் தோன்றுகின்றன.

பின்வந்த அந்நியரான ஐரோப்பியர் காலத்தில் (கி. பி. 1800-1947) நிலைமைகள் மாறுகின்றன. ஆறுமுகநாவலர் முதலாம் சைவக் காவலர்கள் தோன்றிச் சைவசமயக் காப்பிலே பங்களிப்பை முனைப்புடன் மேற்கொண்டு சைவரைச் சைவராக வாழவைக்கின்றனர். வட இந்தியாவிலே இந்துமத சீர்திருத்த இயக்கம் தலை எடுக்கிறது. இராஜாராம் மோகன்ராய் (பிரம்மசமாஜம்) சுவாமி தயானந்தர் (ஆரிய சமாஜம்) ஆகியோர் இந்துசமயத்தில் நுழைந்துவிட்ட களைகளை எடுப்பதில் முனைகின்றனர். அடுத்து இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் வழியில் இந்துமதம் புத்துயிர் கொள்கின்றது. இந்திய விடுதலைப் போராட்டத் தந்தையான மகாத்மாகாந்தியும் இந்துமத எழுச்சிக்கு வழி வகுக்கின்றார். எனினும் நாம் எடுத்துக் கொண்ட பொருளான சைவம் பற்றிய வரையில் ஆறுமுகநாவலரின் பங்களிப்பே முதன்மையானதெனலாம்! (இந்துசமயம், வைதிகசமயங்கள் யாவற்றையும் உள்ளடக்கியது. இப்பெயர் ஈரானியாரால் வழங்கப்பட்டது.) இங்கு மிகச் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ள சைவசமய வரலாறு மிக விரிவாக ஆராயப்பட வேண்டியது. இஃது ஒரு பறவைப்பார்வை மட்டுமே.

சைவசமயப் பிரிவுகள்:

சைவசமயத்தின் முதன்மையான பிரிவுகள் மூன்று. காஷ்மீரசைவம், வீரசைவம், சைவசித்தாந்தம் என்பனவே அம்மூன்றுவாம். ('காஷ்மீரத்திலேதான் 'ஆகமாந்தா' என்னும் சைவசித்தாந்தம் தோன்றியது. அஃது 28 சிவாகமங்களின் சத்தாகும். வேதங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடதங்கள் இவற்றில் மறைந்து கிடக்கும் உண்மைகளை விளக்கிக் கூறுவனவே ஆகமங்கள், சைவசித்தாந்தம் காஷ்மீரில் 'பிரத்ய பிஞ்ஞான தரிசனம்' எனப்பட்டது. அதுவே தென்னாட்டில் 'சுத்த சைவ தரிசனம்' எனப்பட்டது. சைவசித்தாந்தத்திற் கோயில் வழிபாடு புறச்சடங்குகளில் ஒன்றாக வற்புறுத்தப்படுகிறது. என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமது 'சைவசமய வளர்ச்சி' என்னும் ஆய்வு நூலிலே குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுவதாவது.

''ஆகமாந்த உண்மைகளைத் திருமூலர் திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது. திருமந்திரத்திற்கும் காஷ்மீரத்தில் தோன்றிய பிரத்ய பிஞ்ஞான தரிசனத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. திருமூலர் கயிலாயத்திலிருந்து வந்தவர் என்று வரலாறு கூறுகிறது. இவற்றை நோக்க, பிரத்ய பிஞ்ஞான தரிசனக் கருத்துக்கள் காஷ்மீரத்தில் சிறப்புற்றிருந்த காலத்தில், திருமந்திரம் செய்யப்பட்டதென்பது தெளிவு''.

காஷ்மீர சைவத்தின் சிறந்த ஆசாரியராய் இருவர் கொள்ளப்படுகின்றனர். 'சிவதிருஷ்டி' என்ற நூலைச் செய்த சோமநாதர் 'பரமார்த்தசாரம்' என்ற நூலைச் செய்த அபிநவகுப்தர் என்போரே அவ்விருவருமாவர், டாக்டர் இராசமாணிக்கனாரின் கூற்றினை நோக்கச் சைவசித்தாந்தத்தின் மூலம் காஷ்மீரசைவம் என்பதும், அதனைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகம் செய்தவர் திருமூலர் என்பதும் புலனாகின்றன.

அடுத்ததாக நோக்க வேண்டியது வீரசைவம். வீரசைவத்திற்கு முதன்மையான ஆகமங்கள் வீரம், வாதுளம் என்பன. வீரசைவர் வீரமாகேசுரர், லிங்காயத்துக்கள் எனவும் அழைக்கப்படுவர். இவர்களின் வழிபாட்டிலே சிவலிங்கம் மட்டுமே இடம்பெறும். அதனை இவர்கள் தங்கள் மார்புகளிலே தொங்கவிட்டிருப்பார்கள். சிவனை வழிபடும் நெறிமுறையிலே பத்திக்கே முதன்மையளிப்பது இவர்களின் முறைமை. கேதாரம், ஸ்ரீசைலம், பெலஹெல்தர், உச்சையினி, காசி ஆகிய மடத்தலைவர்களாலே வீரசைவம் தோற்றுவிக்கப்பட்டது. வேதங்களை ஒப்புக்கொள்ளாமை, சாதி வேறுபாட்டினைக் களைதல் குழந்தை மணமறுப்பு, விதவைகளின் மறுமணத்தை ஏற்றல், புலால். குடி என்பவற்றை ஒழித்தல், இறந்தாரைப் புதைத்தல் ஆகியன இவர்கள் கடைப்பிடிக்கும் ஒழுக்கங்கள் என்கிறார் டாக்டர் இராசமாணிக்கனார். வீரசைவம் கன்னட நாட்டில் முதன்மை பெற்றுள்ளது.

சைவசித்தாந்தம் மேற்குறித்த சமயங்கள் இரண்டோடும் ஒத்தும், பல வழிகளில் வேறுபட்டும் நடப்பது. இதன் தத்துவநோக்குப் பற்றி ஏழாம் இயலிலே விரிவாக நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் காலத்தில் சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்தசைவம் என நால்வகைப்பட்ட சைவப் பிரிவுகள் நிலவினவென்றும் இவைபற்றிய செய்திகள் சைவசித்தாந்த சாத்திரங்களிலே காணப்படாதவையென்றும் டாக்டர் இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார். இவை தவிரக் கடும் அநுட்டானங்களை மேற்கொள்ளும் பாசுபதம், தீக்கைக்கு முதன்மையளித்து எலும்பு மாலை, நெற்றியில் திரிபுண்டரமாகவும் உடலிலே பூச்சாகவும் அணியும் திருநீறு, கோவணம், அதன்மேற் சிற்றுடை, மயிர்க்கற்றையாலமைந்த பூணூல் என்பவற்றை யணிந்து இவற்றையே சரியை வழிபாடு எனக்கொண்ட மாவிரதம், சிவன் தம்மில் ஆவேசித்தலால் முத்தி கிட்டும் என்ற நம்பிக்கையோடு, மண்டையோட்டில் ஐயம் ஏற்று உண்ணும் கபாலிகம், 'சடமும் சித்தும் சத்தியே, அதன் வெளிப்பாடே' எனக் கொள்ளும் வாமம், முப்பொருளுண்மை, நால்வகைப் பாதங்களில் நம்பிக்கை கொண்டு ஆகமநெறி நிற்கும் சைவம் என்ற ஆறுவகைச் சமயங்கள் பல்லவர் காலத்தில் நிலவின. இவற்றுள்ளே சைவம் சைவசித்தாந்தமாய் வளர்ச்சிபெற மற்றவை காலகதியில் அருகிப் போயின. இந்த ஆறுவகைச் சமயங்களிலும் சில பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் மது மாமிசம் உண்பவராயும் சுடலை போன்ற இடங்களிலே சென்று சிவவழிபாட்டை நிகழ்த்தியவராயும் இருந்தனர்,

சௌமியப்பிரிவு எனப்படும் பிறதொரு சிவவழிபாட்டுக்குழுவும் உள்ளது. இதில் எட்டு உபபிரிவுகள் கூறப்படுகின்றன. இவை ஐக்கிய வாதம், பாஷாணவாதம், பேதவாதம், சமவாதம், சங்கிராந்தி வாதம், அவீசுரவாதம், சித்தாந்தவாதம் பரிணாமவாத என்பன. இவற்றிடையே குறிப்பிடக்கூடிய ஒற்றுமை இவற்றைப் பின்பற்றுவோர் தாவர போசனிகளாயும் சிவத்தை அன்புவடிவாக வழிபடுவோர்களாயும் விளங்குவதே. எனினும் தத்துவ அடிப்படையிலே இவற்றிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிறப்பாக முத்தி நிலை பற்றிய கருத்தில் முரன்பாடுகள் அதிகமாய் உள்ளன.

மேற்குறித்த எட்டினுள் சித்தாந்த சைவமே தமிழ்நாட்டில் பிரசித்தி அடைந்துள்ளது. இதனையே சைவசித்தாந்தம் என அழைக்கின்றோம்,

## சிவனின் மூர்த்தங்கள்

சிவபெருமானுக்கு இருபத்தைந்து மூர்த்தங்கள் கூறப்படுகின்றன, இலிங்கோற்பவமூர்த்தி, சுகாசனமூர்த்தி, உமாசகிதமூர்த்தி, சுகாசன மூர்த்தி, கல்யாணசுந்தரமூர்த்தி, அர்த்த நாரீச்சுரமூர்த்தி, தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, சக்கரப்பிரதானமூர்த்தி, திரிமூர்த்தி, நடராசமூர்த்தி என்பன இவற்றுட் சில. இம்மூர்த்திகளுள்ளே தட்சணாமூர்த்தி, ஞானத்தை அருளும் குருவாகச் சிவாலயங்களிலே தெற்குத் திசையிலே அமர்ந்தருளுவார். நடராசமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடலழகர். சிவனடியார்கள் அனைவரையும் ஒருசேரக் கவர்ந்து அவர்களின் கண்களிலும் கருத்துக்களிலும் நீங்காதுறையும் இப்பெருமான் சைவவிக்கிரகக் கலையிலே தலைசிறந்த கலாசிருட்டியாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மூர்த்தி பற்றிய தத்துவ விளக்கம் 'உண்மை விளக்கம்' என்ற மெய்கண்ட சாத்திர நூலிலே மிக விரிவாகத் தரப்படுகின்றது. உலகப் புகழ் பெற்ற கலாயோகி கே. ஆனந்தக்குமாரசுவாமி நடராசரின் சமய, கலைத் தத்துவங்களை விரித்து, 'சிவநடனம்' (Danee of Siva) என்ற பெயரில் ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ளார்.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே,

— அப்பர் சுவாமிகள்.

சிந்துவெளி நாகரிகத்திலேயே வழிபாட்டிற்குரியதாகவும், சிவனாரின் அருவுருவத் திருமேனியாகவும், அவரின் சங்கற்பத்தில் நிகழும் ஐந்தொழில்களிலே அருள்பாலிப்பை நிகழ்த்துவதாகவும், சதாசிவம் என அழைக்கப்படுவதாகவும், சிவாலயங்களிலே மூலத்தானத்தில் எழுந்தருளியிருப்பதாகவும் உள்ளது சிவலிங்கமாகும்.

## சைவநெறியின் மூவகை இயல்புகள்

சைவநெறி ஏனைய சமயநெறிகளைப் போலவே வழிபாட்டு முறைமை, ஒழுக்கவியற் கோட்பாடு, தத்துவ ஆராய்ச்சி, என்னும் மூன்று கூறுகளையும் தன்னகத்துக் கொண்டதாகும், சிவபெருமானைப் பலவகைத் திருமேனிகளில் எழுந்தருளச் செய்து சிவாகமமுறை தவறாது பூசை, அபிடேகம் முதலியவற்றால் வழிபடலும், திருமுறைகளை ஓதுதலும், பஞ்சாட்சரமந்திர செபமும், புராணபடனமும், திருநீறு, உருத்திராக்க தாரணமும், சிவநாமம் செபித்தலும் சரியை, கிரியை என்பவற்றின் கடைப்பிடிப்பும், குரு, அடியார்கள் வழிபாடும் சிவவழிபாட்டின் இன்றியமையா உறுப்புக்களாகும். சரியை வழிபாடு என்பது ஆலயத்தொண்டுகள், சமூகப் பணிகளாயவற்றை உள்ளடக்கியது. கிரியை வழிபாடென்பது ஆகமமுறைப் படி பூசை செய்தல் முதலியன. இவற்றோடு சமாதிநிலையில் புலன்களை ஒடுக்கிச் சிவத்தியானத்தில் நிலைப்பது யோகம் எனப்படும். இந்நிலையையும் கடந்து துரியாதீத நிலையிலே சிவமும் தானும் ஒன்றாகி நிற்கும் கடந்த நிலை ஞானம் எனப்படும், யோகமும் ஞானமும் வழிபாட்டு நெறியில் மிகவும் உன்னதமானவை என்பது உளங்கொள்ளத்தக்கது.

'குருவே தேவர், குருவே பிரமா, குருவே விஷ்ணு, குருவே மகேசுவரன், குருவே கண்கண்ட பரம்பொருள், என்ற வேதவாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவும் பிசகாது சைவராற் கடைப்பிடிக்கப்படுவதாகும். குருவானவர் அவரவர் பக்குவ நிலைக்கேற்ப வந்தமைந்து வழிகாட்டுவார். மாணிக்கவாசகருக்கு அவரின் மிக்குயர்ந்த பக்குவ நிலைக்கேற்பச் சிவபெருமானே திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே எழுந்தருளி உபதேசம் அருளியமை ஈண்டு நோக்கத்தக்கது. ''பாம்பு கடித்த விடம் பாம்புக்குப் பகையாகிய கீரியாலே நீங்குவதன்று. கீரியாகத் தன்னைப் பாவனை செய்யும் மந்திரவாதியே விடத்தைப் போக்கவல்லவன்'' என்பது உமாபதிசிவாசாரியாரின் அநுபவசித்தாந்தம். ஞானநூல்களை ஒருவன் தானாகவே கற்று ஞானத்தைப் பெறமுடியாதென்பதும், அம்முயற்சி விடமேறியவன் முன் கீரியைக் காண்பிப்பது போன்றதென்பதும், மந்திரவாதி விடம் போக்குவது போல ஞானாசாரியனே சீடனின் அறியாமையிருளைப் போக்கவல்லவன் என்பதும் 'அவரது திருவருட்பயன்' குறட்பாவினாலே அறிவுறுத்தப்படுகிறது. திருவருளின் வெளிப்பாட்டுருவே குரு என்பது அவரின் முடிந்த முடிபு,

> ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
> டன்னிய மின்மையில் அரன்கழல் தொழுமே.
>
> (சிவஞானபோதம் 8)

> சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
> சூரிய காந்தமும் சூழ்பஞ்சைச் சுடமாட்டா
> சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
> சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே
>
> — திருமந்திரம்

என்பது சிவவடிவாகிய குருவேயாகும்.

ஆலயங்களிலே எழுந்தருளிருக்கும் இலிங்கம் அசைவற்றது. அசையாமையைக் குறிக்கும் தாவரம் என்ற அடைகொடுத்து அவ்விலிங்கத்தைத் 'தாவரலிங்கம்' என்பர். சிவபெருமானது அடியார்கள் அவ்வாறல்லர். அவர்கள் அசைதலாகிய நிலையில் உள்ள தெய்வங்களேயாவர். சங்கமம் - அசைவு. எனவே அவர்கள் சங்கமர் ஆவர். மகேசுவரனின் வழிநிற்போராதலின் அவர்கள் மாகேசுரர் ஆவர். அவர்களை வழிபடலும் அன்னதானம் முதலியன வழங்கலும் மாகேசுர பூசையாகும். 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பது ஔவைப் பிராட்டியின் அமுதவாக்கு. ஆக, சைவமானது குருவையும் இலிங்கத்தையும், சிவனடியார்களையும் ஒரே படியில் வைத்துப் போற்றிவருவதில் வியப்பில்லை. 'மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்றும், 'அன்பரொடு மரீஇ' என்றும் மெய்கண்டதேவர் அருளியதும் சிவனடியார் பெருமையை நன்கு எடுத்துக் காட்டுவதாகும். சிவனடியார் வழிபாட்டின் திறத்தையுணர்ந்து அவரின் "அடியார்க்கும் அடியேன் என்று ந்தரர் அடியெடுத்துக் கொடுக்க நம்பியாண்டார்நம்பி அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கொடுக்க, சேக்கிழார் சுவாமிகள் அதனை வளர்த்தெடுத்து வழிகாட்டும் பெருவிளக்காகத் திருத்தொண்டர் பெரிய புராணத்தினை அருளிச் செய்தார்.

மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவர்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.
(திருத்தொண்டர் புராணம் — திருக்கூட்டச்சிறப்பு)

பொய், கொலை, களவு, கள்ளுண்ணல், விபசாரம் ஆகிய பஞ்சமா பாதகங்களினின்றும் நீங்கி ஒழுக்கத்தினை உயிரினும் மேலாக ஓம்புதல் சைவம் வலியுறுத்தும் ஒழுக்க நெறியாகும். 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்ற குறிக்கோளினை உயிர்நாடியாகக் கொள்ளல் வேண்டும் என்பது சைவத்தின் மேலானஎதிர்பார்ப்பு. தமக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி எவருக்கும் சமமான நீதியை வழங்கல் வேண்டும் என்பதே இதன்பொருள். கொடுத்த வாக்குத் தவறிப் பரவையாரை ஏமாற்ற முற்பட்ட சுந்தரரைத் தம் தோழர் என்றும் பாராது அவர்தம் கண்களை வாங்கி ஒறுத்துச் சைவநீதியைச் சிவபெருமான் நிலைநாட்டியது இவ்விடத்தில் உளங்கொள்ளத் தக்கது. அவர் வழிநின்று மனுச்சோழன், தன் மகனின் தேர்க்காலிற் சிக்கிய பசுக்கன்று இறந்து போனதற்காக (அந்தக் கொலைக் குற்றத்திற்காகத்) தன் ஒரே மகன் என்றும் பாராது தானே அவனைத் தேர்ச்சில்லில் இட்டுக் கொல்ல முற்பட்டான். அவனது சைவநீதி இருந்தவாறு அது. பசுக்கன்று இறந்த செய்தியைக் கேள்வியுற்றதும் அவன் அடைந்த ஆற்றொண்ணாத் துயரநிலையினைச் சேக்கிழார் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை அகத்து மிக்கிங்(கு)
இவ்வினை விளைந்த வாறென் றிடருறும் இரங்கும் ஏங்கும்
செவ்விதென் செங்கோல் என்னும் தெருமருந் தெளியும் தேறான்

அருளென்னும் அன்பு பெற்ற குழந்தையால் அலமரலுற்ற மனுச்சோழனின் நீதிவழுவா நெறிமுறையானது என்றும் சைவத்தின் பெருமையை நிலநிறுத்த வல்லதாகும்.

நீதி சைவத்தின் ஒருவிழி எனக்கொண்டால் அன்பு அதன் மற்ற விழியாகும். அன்புஞ் சிவமும் இரண்டல்ல ஒன்றே என்பர் திருமூலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புஞ் சிமுவம் இரண்டெென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே,

(திருமந்திரம்)

இந்த அன்பானது சிவனையே எல்லா உயிர்களிலும் காண்ப தாய் மலர்ந்து மணம்பரப்ப வல்லதாகும்.

எவ்வுயிரும் என்னுயுர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பாராபரமே

என்றும்,

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அம்லாமல் வேறொன் நறியேன் பாராபரமே.

என்றும்,

அன்பர்பணி செய்யஎனை அளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

என்றும்

தாயுமான சுவாமிகள் சமுதாயம் முழுவதையும் அன்பாலே கட்டுவதற்கு வழிகாட்டுவதோடு அதனையே பரம்பொருளாகிய சிவபிரானிடம் வேண்டி நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாக்தம்

சக்திவழிபாடு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடையது. ஏறக்குறைய எழுபதாண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலே சிந்துவெளிப் புதைபொருள் ஆய்வின்போது ஆரப்பா, மொஹஞ்சதாரோ ஆகிய நகரங்களின் சிதைவுகளிலே கிடைத்த முத்திரைகள், உருவங்களிடையே தாய்த்தெய்வம் எனக் கருதப்படும் இரு உருவங்கள் கிடைத்தன. ஒன்று நிருவாண கோலத்தில் கைகள் இரண்டிலும் பல வளையல்கள் அணிந்து விளங்கியது. மற்றொன்று தலைகீழாக நின்று தனது வயிற்றிலே செடியொன்று முளைத்து வரக் காணப்பட்டது. உலகம் யாவிற்கும் தாயாகவும் வளஞ்சுரக்கும் அன்னையாகவும் வழிபடப்பட்ட பெண்தெய்வத்தின் எச்சங்களாய் இவை கொள்ளப்பட்டன.

ஒரு காலத்தில் உலகெங்கணும் இருவகைச் சமூக அமைப்புக்கள் காணப்பட்டன. ஒன்று தாய்வழிச் சமூகஅமைப்பு. மற்றது தந்தை வழிச் சமூக அமைப்பு. விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட மக்களிடையே தாய்வழிச் சமூக அமைப்புச் செல்வாக்குப் பெற்றிருந்ததென்றும், வேட்டை, மந்தை மேய்த்தல் என்பவற்றைத் தொழில்களாய்க் கொண்ட மக்களிடையே தந்தை வழிச் சமூக அமைப்பு மேலாண்மை பெற்றிருந்த தென்றும் சமூகவியலார் கருதுவர். மரபுவழி, உறவுமுறை, சொத்துரிமை, ஆட்சியுரிமை, அதிகாரம், மணமுறை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அது தாய்வழிச் சமூகமா, தந்தை வழிச் சமூகமா என்பது நிருணயிக்கப்படுகின்றது. மேற்குறித்தவைகளிலே கூடிய செல்வாக்கினைப் பெண் பெறும்பொழுது, அவளே மேலாண்னமயடைந்து தாய்வழிச் சமூகம் உதயமாகின்றது. இவ்வாறு தாய்வழிச் சமூகம் தோன்றும் பொழுது தெய்வமாக உருவகிக்கப்படுபவருக்குப் பெண்படிமமே அமைக்கப்படுகிறது. அப்பனிலும் அம்மையே முதன்மை பெற்று வணக்கத்திற்குரியவளாகின்றாள். எனவே தாய்வழிச் சமூக அமைப்பு நிலவிய நாடுகளிலெல்லாம் பெண்தெய்வங்களே வழிபாட்டிற்குரியவை. சிந்துவெளியில் தாய்த்தெய்வமும் எகிப்தில் 'இசிஸ்' என்ற பெண் தெய்வமும், சின்னாசியாவில் 'சிபிஸ்' என்ற பெண்தெய்வமும், சிரியாவில் 'அஸ்தாத்' என்ற பெண் தெய்வமும் வழிபடப்பட்டதிலிருந்து அங்கெல்லாம் புராதனகாலத்தில் தாய்வழிச் சமூக அமைப்பே நிலவியது என்பது தெளிவாகின்றது.

சிந்துவெளி நாகரிகம் திராவிட இனத்திற்குரியது என ஆய்வாளர் பலர் ஏற்றுள்ளனர். திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களே தமிழர்கள் என்பது ஒப்ப முடிந்த ஒன்று. எனவே தமிழரிடையிலும் தொடக்கத்தில் சிவவழிபாட்டிற்குச் சமாந்தரமாகவோ, மேலாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வழிபாடு நிலவியது என்று கொள்ள இடமுண்டு. திருமுருகாற்றுப்படையிலே முருகனை,

இழையணி சிறப்பில் 'பழையோள்' குழவி

என நக்கீரர் போற்றல் காணலாம். 'பழையோள்' என்பது சக்தியாகிய கொற்றவையே. தமிழரின் முதல்தெய்வம் என்று நிறுவப்போதிய சான்றாகும். கொற்றவைக்குக் 'காடுகிழாள்' என்றும் ஒரு பெயர் உண்டு. தமிழன் காடுகளில் வேட்டையாடி அலைந்து திரிந்த காலத்திலும் தன் தலைவியாய்த் தெய்வமாய்த் தாயாகிய கொற்றவையையே கொண்டான் என்பதும் இதனால் புலனாகின்றது.

வேதங்களிலே பெண்தெய்வங்களும் இடம் பெற்றாலும் ஆண்தெய்வங்களுக்கே முதன்மை வழங்கப்பட்டுள்ளதாய் ஆய்வாளர்கொள்வர். அதிதி வளத் தெய்வம். தெய்வங்கள் யாவிற்கும் தாய். இருந்த போதிலும் இந்திரன், வருணன், அக்கினி முதலாம் ஆண்தெய்வங்களுக்குக் கொடுக்கப்பட்ட முதன்மை அதிதிக்கு வழங்கப்பட்ட தாய்த் தெரியவில்லை. உஷை (உதயகாலத்தைக் குறிக்கும் பெண் தெய்வம்( இராத்திரி, சந்தியா, சரசுவதி, பிருதுவி முதலியன வேதகாலப் பெண் தெய்வங்கள். இவை யாவும் இரண்டாமிடத்தையே பெறுகின்றன. எனினும் சத்தியின் மகிமை முதன்முதலாகக் கேனோபநிடதத்திலேயே பரம்பொருள் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. கேனோபநிடதத்தில் வரும் கதை இது.

இந்திரன், வாயு, அக்கினி முதலாம் தேவர்கள் தாந்தாமே பெரியவர் என்று ஒருகால் போட்டியிட்டனர். அது காலை பிரபஞ்சம் அனைத்துக்கும் தாயாகிய சக்தி ஒரு துரும்பு வடிவில் அவர்கள் முன்பு தோன்றினாள். ''இதனை அசைக்கவோ அழிக்கவோ வல்லவர் யாரோ அவரே ஆற்றல்கள் யாவும் நிரம்பிய தலைவராகக் கொள்ளப்படுவர்'' என்று ஓர் அசரீரி எழுந்தது. உடனே அக்கினி முன்வந்து அந்தத் துரும்பை எரித்திட முற்பட்டான். அவன் முயற்சி பலிக்கவில்லை. வாயு அந்தத் துரும்பினை அசைத்து அலைக்க முற்பட்டு இயலாது தோற்றான். தேவர்கள் யாவரும் தத்தம் வலிமையனைத்தையும் பயன்படுத்தியும்அந்தத்துரும்பு இருந்தபடியேஇருந்தது இறுதியில் அவர்கள், தம் தோல்வியை ஏற்ற பொழுது சக்தியானவள் அவர்கள் யாவரும் வியந்து போற்றி வழிபடும் வகையில் பெருஞ்சுடராய் முன்பு தோன்றினாள். இந்தக் கதை வாயிலாக வேதகாலத்திலும் சக்தி மேனிலையில் வழிபடப்பட்டாள் என்ற முடிவிற்கே வரலாம்.

தொல்காப்பியத்திலே பாலை நிலத்திற்குத் தெய்வம் குறிப்பிடப்படாவிட்டாலும் நச்சினார்க்கினியர் சூரியனையும், கொற்றவையையுந் தெய்வங்களாய்க் குறிப்பதும் நோக்கத்தக்கதே. தொல்குடிகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் மலைச்சாதியார். பிலிமக்கா, தார்ஜி, டொம், கடவா, ஒக்கரை, கங்கை, கொல்லா, அத்தி, புடுபுடுக்கி எனப் பெண் தெய்வங்கள் பலவற்றை வணங்கிவருவதாக ஆன்பெல்ஸ் என்ற ஐரோப்பிய ஆய்வாளர் குறிப்பிடுவதிலிருந்தும் சத்திவழிபாட்டின் தொன்மையை அறிந்து கொள்ளலாம். மாரியம்மன் முத்துமாரியம்மன், கண்ணகையம்மன் முதலான அம்மைகளின் வழி பாடு பெரும்பாலும் கிராமமக்களிடையே வேதசிவாகமவழிப்படாத வழிபாட்டடிப்படையில் போற்றப்படுவதும் சக்திவழிபாட்டின் பழமைக் குச் சான்றாகும்.

போர், வெற்றி என்பனவற்றை வேண்டி வழிபடப்படும் கொற் றவை வழிபாட்டிற்கு இணையாகப் பாபிலோனியர் 'அனாட்' என்ற பெண்தெய்வத்தை வழிபட்டனர் என்று தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியிலே கொற்றவை பாலை நிலமக்களால் மிகவும்விரிந்தஅள வில் பரவப்படுவதும், கொற்றவையின் மாட்சிகளும் பேசப்படுகின்றன. சிவலிங்கத்தின் ஆவுடையார் என்ற கூறு சக்திபாகமாகக் கொள்ளப் படும். சமயகுரவர்கள் அப்பனோடு அம்மையையும் இணைத்து அரு ளிய திருப்பாடல்கள் மிகப்பல.

சக்திவழிபாடு தமிழகத்திலே நாயக்கர்காலத்தில் மீண்டும் புத் துயிர் பெற்று நாயக்கமன்னரால் நவராத்திரி விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. குமரகுருபரசுவாமிகளின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலாவல்லிமாலை ஆகியன பிரபலமாகக் காண் கின்றோம். அடுத்து அபிராமிப்பட்டரின் அபிராமியந்தாதி சத்தியின் மகிமையை தெளிவாக விரித்துக்காட்டுகிறது. இந்த நூற்றாண்டில் பாரதியின் சத்திப்பாடல்கள் எழுந்தன.

இவ்வாறு உலகளாவியதாகவும், சிந்துவெளிக்காலப் பழமை கொண்டதாகவும், தமிழரின் பழம்பெருந் தெய்வமாக வழிபடப் பட்டு வந்ததாகவும் விளங்கும் சக்திவழிபாடானது, சுவேதாசுவதர உபநிடதத்தில் பூரணமான தத்துவப் பொலிவடைந்து வளரக் காண் கின்றோம். இதன் பின்னைய காலத்தில் சக்தியையே பரம்பொரு ளாகக் கொண்ட சாக்தம் என்ற தனிமதமே உருவாகின்றது.

'எங்கும் எவையும் உமை அல்லது சக்தியின் திருவடிவங்களே'
— சூதசங்கிதை

சத்தி என்ற சொல்லின் பொருள் வல்லமை. சிவத்தின்வல்லமையே சத்தி. அகிலாண்டங்களுக்கும் தாயாக விளங்கும் சத்தியை மிகப் பழங்காலந் தொட்டே வழிபட்டு வருகின்றனர். சக்தியை முழுமுதற் பரம்பொருளாகக் கொள்வது சாக்தமாகும்.

நாள்தோறும் ஓதப்படும் காயத்திரி மந்திரத்தில் காயத்திரி சூரி யனுக்கு ஒளி தருவதாகக் கூறப்படுகின்றது. ஆயின் அப்பெருமாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் உள்ளத்து ஞான ஒளியையும் தூண்டி எரிய வைக்கிறாள் என்றே சொல்லல் வேண்டும் "அன்னையே, உன்னை வழிபடுவோருக்கு நீ வரங்களை வழங்குகிறாய். வேதங்களும் உலகங்களும் உன்னையே மூலமாகக் கொண்டு தோற்றின. எனது சிந்தையிலே ஒளிர்ந்து எனது வணக்கத்தினை ஏற்பாய். நீயே விவேகம், நீயே பொறுமையின் ஆற்றல், நீயே வல்லமை, நீயே ஒளி, நீயே தெய்வங்களின் வல்லமையாகுவாய், நீ யாவிலும் இருப்பதோடு யாவற்றையும் கடந்து நிற்கின்றாய். உனது புகழிலே என்னைக் குளிப்பாட்டித் தூய்மை செய்வாய்." என்பது காயத்திரி மந்திரம் கூறும் வழிபாடாகும். சத்தி தத்துவங்களையும் வழிபாட்டு முறைமைகளையும் கூறும் ஆகமங்கள் தந்திரங்கள் என்ற பெயரால் வழங்கும்.

"சிவபெருமான் உலகத்தைப் பல்வேறு தந்திரங்களால் (ஆகமங்களால்) நிரப்பினார். பின்பு சத்தியின் வேண்டுகோளுக்கிசைய முன்னைய தந்திரங்களின் சாரத்தையும் நோக்கம், பயன் யாவற்றையும திரட்டி ஸ்ரீ தந்திரத்தை (சத்தி ஆகமத்தை) அருளினார். இது ஸ்ரீபுர வழிபாடு அல்லது ஸ்ரீ வித்யா (வித்தை) என அழைக்கப்படும்" என்று பொருள்பட ஸ்ரீ சங்கராச்சாரியர் தமது சவுந்தரிய லகரியிலே கூறியுள்ளார்.

தாத்தாத்திரேயர் என்ற பெரியார், ஸ்ரீ வித்யா எல்லா வகை வழிபாடுகளினதும் கூட்டாக இருப்பதைக் கண்டார். எனவே இதனை அடிப்படையாகக் கொண்டு சத்தியின் பல திறங்களையும் எடுத்துப் போற்றி வழிபடும் வகையிலே 18000 சுலோகங்கள் அமையச் சங்கிதை ஒன்றை ஆக்கினார், அவரிடமிருந்து பரசுராமர் தாம் கற்றவற்றை வைத்து அந்தச் சங்கிதையைச் சுருக்கி 6000 சுலோகங்கள் ஆக்கினார். தென்னிந்தியாவிலுள்ள சாக்தர்கள் இவற்றையே விதியாகக் கொண்டு சத்தி வழிபாட்டினை நடத்தி வருகின்றனர். ஆதிசங்கரர் ஸ்ரீ சக்கரம் அமைத்துச் சத்திபூசை செய்யும் முறையினைத் தமது சௌந்தரியலகரி, பிரபஞ்சசாரம், ஆகிய நூல்களில் எடுத்துக் காட்டினார். இவற்றின் வழியிலே சாக்தர்கள் ஸ்ரீ சக்கரம் என்னும் யந்திரத் தகடமைத்து அதன் வாயிலாகச் சத்தி வழிபாட்டை நிகழ்த்தி வருகின்றனர்.

சிவபெருமானுக்குப் போலவே சத்திக்கும் மூர்த்தங்கள் உள்ளன. அவை தொகையால் பதினெட்டு. அவையாவன:

(i) பாலா

சத்தியைப் பத்துவயதுச் சிறுமியாக உருவகித்த திருவடிவம். செந்தாமரையில் வீற்றிருப்பாள். திருக்கரத்திலே செபமாலை தரித்திருப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) லலிதாம்பாள்:

பதினாறு வயதுக் குமரி. அவள் அமர்ந்தருளும் கட்டிலுக்குப் பிரமன், விட்டுணு, உருத்திரன், ஈசுவரன் ஆகியோர் கால்களாய் விளங்குவர். பாசம், சவுக்கு, மலர், கரும்பு, ஆகியவற்றைத் தனது நான்கு திருக்கரங்களிலும் தரித்திருப்பாள்.

(iii) ஸ்ரீ இராஜராஜேஸ்வரி:

(மகாசோடசி) 60 வயதினள். ஞானமே உருவினள்.

(iv) நவக்ஷரிபாலா:

பாலாவின் திருவுருவ அமைப்பு.

(v) அன்னபூரணி:

வலது கரத்தில் தங்கக்கரண்டியும் இடதுகரத்தில் வைரம்பதித்த குடமும் ஏந்தியிருப்பாள். தங்க வைர வைடூரிய ஆபரணங்கள் அணிந்து அடியார்க்கு அமுது பாலிக்கும் அன்னை.

(vi) அஸ்வருதா:

முக்கண், சிவப்பு உடை. நாற்கரங்கள், குதிரையில் அமர்ந்த திருக்கோலம்.

(vii) இராசமாதங்கி:

வீணை தாங்கிய திருவுரு.

(viii) லகுக்ஷியாமா:

நீலநிறத் திருமேனியுடையாள். இந்திர நீலம்போல் ஒளிர்வாள்.

(ix) வாக்வாதினி:

வெண்டாமரையில் வீற்றிருக்கும் பெருமாட்டி. எழுத்தாணியும் ஏடுந் தாங்கிய இருகரத்தாள். பூரணசந்திரனே பரிவட்டமாய் அமையப் பெற்றவள்.

(x) நகுலி:

பற்கள் வைரம்போல் ஒளிரும். அவை பகைவரின் நச்சு நாக்கைக் கத்திரித்திடும் வலிமை உடையவை.

(xi) வராகி:

பன்றி முகமுடையவள். லலிதா என்ற மகாராணியின் படைத் தளபதியாவாள். இவளைத் தந்தினி எனவும் அழைப்பர்.

(xii) லகுவராகி:

பருத்த திருவுடல் உடையவள். பருத்த கூரான பற்கள் உடையவள். பூமியைக் கடலிலிருந்து தூக்கிக் காத்தவள்.

(xiii) சொப்பனவராகி:

தன் அடியார்களுக்கு நிகழப்போகும் நன்மை தீமைகளை அறிவிப்பவள்; தீய கனவுகளின் பயங்கரங்களினின்றும் அவர்களைக் காய்பவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(xiv) திரஸ்கரிணி:

ஒழுங்கற்றுக் குலைந்த கூந்தலாள். எல்லாவகையான ஆபரணமும் தரித்திருப்பாள். உலகப் பற்றுடையாரை அலைக்கழித்து உண்மை உணரவைப்பவள்.

(xv) பரை:

லலிதாவின் இதயபாகமாயுள்ளவள். பூரணசந்திரன் ஒத்த மேனியள். மூன்று கண்களையுடையவள். பிறையணிந்தநெற்றியள். சின்முத்திரையை ஒரு திருக்கரத்திற் காட்டி மறு திருக்கரத்தில் புத்தகம் தரித்தவள்.

(xvi) புவனேஸ்வரி:

உதய சூரியன் ஒத்த ஒளியுடையாள். பிறைதரித்த முடியினள். மூன்று திருவிழியாள். தங்கத்தோடுகள் தரித்திருப்பாள். தாமரை மலரில் விளங்கித் தோன்றுவாள். நான்கு திருக்கரங்கள் உடையாள்.

(xvii) சண்டி:

மின்னலொத்த திருமேனியள். சிங்கவாகனத்தில் அமர்ந்தவள். பயங்கரத்தோற்றமுடையாள். வாளும் கேடயமும் தரித்தவள். இன்னும் பல ஆயுதங்கள் தாங்கியவள். நெருப்புப்போல ஒளிர்பவள். மூன்று திருவிழியாள்.

(xviii) துர்க்கை:

இவளுக்குப் பலவேறு திருக்கோலங்கள் உள. இவள் பராசக்தியின் காவற்படைத் தலைவி. துர்க்கம் என்ற சொல்லின் பொருள் அகழி. பகைவரிடமிருந்து அகழி காப்பது போலத் துர்க்கையும் தீமைகள், பகைகளினின்றும் அடியவரைக் காத்தருள்வாள்.

சைவசித்தாந்த தத்துவத்திலே சிவபெருமானுக்கு உண்மைப் பொருளாகப் பராசத்தியும், உடைமைப் பொருளாகத் திரோதான சத்தியும் (சுத்தமாயை) பேசப்படுவர். இறைவனின் திருவருளே பர. சத்தி. அவளைத் துணைகொண்டே இறைவனை அடையலாமா எங்கள் பிரான் சத்தி பின்னமிலான். சிவமும் சத்தியும் சூரியனும் கதிரும் போன்றவர்கள். [இவற்றின் விளக்கத்தினைச் சைவசித்தாந்தம் என்ற பகுதியிலே காணலாம்.] சத்திக்குரிய விரதங்களாக நவராத்திரி, பங்குனி உத்தரம், சுக்கிரவாரம் ஆகியன கொள்ளப்படுகின்றன.

சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலக மெல்லாம்
சிவஞானசித்தியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைணவம்

விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயமே வைணவம் எனப் பெயர் பெறும். வேதங்களில் இடம்பெற்ற முதன்மையான தெய்வங்களுள் விட்டுணுவும் ஒருவன். விட்டுணு என்ற பெயர் (எங்கும் யாவிலும் நிறைந்தவன்) எனப் பொருள்படும். நாராயணன் என்ற பெயரே வேதபாசுரங்களிலே பெரும்பாலும் வழங்கியது. *நாரா + அயனன் என்ற இருசொற்களின் சேர்க்கையே 'நாராயணன்' என்ற பதமாகும். 'நாரா' என்பதற்குத் தோன்றுதல் எனவும் 'அயனன்' என்பதற்கு அமர்ந்திருப்பவன் எனவும் பொருள் கொள்வர். 'ஐம்பூதங்களாலான சேதன அசேதனப் பொருள்களைத் தோற்றுவித்து, அவற்றினுள்ளே அந்தர்யாமியாய் அமர்ந்திருப்பவன்' என்பதே இதற்குப் பொருள். உபநிடதங்களிலே 'பிரமம்' என்றும் 'ஆன்மன்' என்றும் குறிக்கப்படும் பரம்பொருள் விட்டுணுவே என வைணவர் கொள்வர்.

சண்மதங்களுள்ளே சாக்தமும் காணபத்தியமும் கௌமாரமும் சௌரமும் இந்தியாவின் பிரதேச மதங்களாகவே பெரும்பாலும் விளங்குகின்றன. அன்றியும் சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன சைவத்தினுள்ளே அடக்கப்பட்டும் விட்டன. சௌரமாகிய சூரியவழிபாடு வைணவத்திலும் இடம் பெறுகின்றது. ஆக, இந்தியாவிற்குரிய தேசிய மதங்களாகவும் உலகளாவிய பிரசித்தி வாய்ந்தவையாகவும் சைவமும் வைணவமுமே இன்று நிலவி வருகின்றன என்று கொள்வதிலே தவறில்லை.

### சைவமும் வைணவமும்

சிவனும் விட்டுணுவும் மைத்துன உறவினர் எனப் புராணங்கள் வாயிலாகவும் சிவனுடைய சத்தியே விட்டுணு எனச் சைவதத்துவ வாயிலாகவும் தெரிய வருகின்றன. ஒரு காலத்திலே சைவமும் வைணவமும் ஒன்றுபட்டு இணைந்தும், இன்னொரு காலத்திலே ஒன்றுடன் ஒன்று முரணியும் நிலவியமைக்குச் சான்றுகள் உண்டு. எனினும் விட்டுணுவின் லீலைகளைப் பலபட விரித்துரைக்கும் இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் சைவர், வைணவர், என்ற வேறுபாடின்றி இருசாராராலும் இன்றுவரை உணர்ந்து ஏற்றுச் சுவைக்கப்பட்டு வருகின்றமையை நாம் மறந்துவிடலாகாது.

---

* நாராயணன் என்ற பதத்திற்கு 'நீரிற்கிடப்போன்' எனவும் பொருள் கொள்வதுண்டு. ஆதியில் சிருட்டிப் பொருள்கள் யாவும் நீர்போல ஒன்றாய் அடையாள வேறுபாடு இன்றிக் கிடந்தனவென்றும் அவற்றை இயக்கியும் வேறாக்கியும் சிருட்டிகளை விட்டுணு தொடங்கினான் எனவும் அதனால் அவன் நாராயணன் எனப்பட்டான் எனவும் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் போற்றிய திருமால்

'திருமால்' என்றும் 'மாயோன்' என்றும் பெயர் வழங்கிப் பழந் தமிழர் போற்றிய தெய்வம் விட்டுணுவே. 'திருமால் என்பது தெய்வத்தன்மை பொருந்திய பெரியோன்' என்றோ, 'திருவாகிய இலக்குமியோடு கூடிய பெரியோன்' என்றோ பொருள்படும். மாயோன் என்பதற்கு மாமைநிறம் (மாநிறம்) அமைந்தவன் என்பது பொருள். தமிழர் வகுத்த நான்கு நிலங்களுள் ஒன்றாகிய காடும் காடுசார்ந்ததுமாகிய முல்லை நிலத்துத் தெய்வமாக மாயோன் கொள்ளப்பட்டான்.

மாயோன் மேய காடுறை உலகமும்

என்பது தொல்காப்பியம். அகநானூறு என்ற சங்கநூலிலே 'சிவனும் திருமாலும் ஒருருவமாய் இணைந்து கோலங் காட்டுவது போலச் செக்கர் வானமும் நீலக்கடலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து விளங்குகின்றன'' என்று புலவர் ஒருவர் வருணித்தல் காணலாம். இவ்வருணனை விட்டுணுவுக்கும் சிவனுக்கும் இடையே சமத்துவம் காண மேற்கொண்ட முயற்சி போலும் (அகநானூறு 300). புறநானூற்றில் ''ஆலமர் கடவுள்'' (புறம் - 198) எனத் திருமால் குறிக்கப்படுவான். ''பிறரை வருத்தி அச்சந் தருபவராகிய அரக்கர்கள் ஒருகால் சூரியனைக் கவர்ந்து சென்று ஒளித்தபொழுது உலகினை இருள் மூடிக்கொண்டது. மக்கள் துயருற்றனர். அவர்களின் துயர் போக்க, வலிமையும் அஞ்சனநிறமும் கொண்ட கண்ணன் (விட்டுணு) அரக்கரை அழித்துச் சூரியனை விடுவித்து உலகின் இருளைப் போக்கினான்'' என்ற செய்தி காணப்படுகிறது. (புறம் 198) பெரும்பாணாற்றுப்படையிலே ''பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்'' என விட்டுணு குறிக்கப்படுகின்றான். கலித்தொகையிலே ''பாம்பைஅணையாகவும் சக்கரத்தை ஆயுதமாகவும் கொண்டவன்'' என அவனைப் போற்றுவர். பரிபாடலில் எட்டுப்பாடல்கள் திருமாலைப் பரவுவனவாய் அமைந்தவை. திருமாலின் லீலைகள் அருட்செயல்கள், அவனைப் பரவுவார் அடையும் பயன், பாடியோரின் வேண்டுதல்கள் என்பன அமைந்துள்ளதோடு, சிவனுடனும் முருகனுடனும் ஒன்றுபட்டவனாகத் திருமாலைக் கருதி வழிபடுவனவாயும் இப்பாடல்கள் விளங்குகின்றன.

ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ

''ஐந்துதலைகளை உடையவனும் தெய்வத் தன்மையும் அரிய திறலும் திண்மையும் கொண்டவனுமாகிய ஒப்பற்ற சிவனும் அவன் மைந்தனாகிய அரியேறு ஒத்த முருகனும் நீயே'' என்பது இதன் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்தச் சமத்துவநோக்குக் காலப்போக்கில் கைவிடப்பட்டுச் சைவர் சிவபெருமானை ஏற்றியும் விட்டுணுவைத் தாழ்த்தியும் வைணவர் இதற்கு மாறாக விட்டுணுவை ஏற்றியும் சிவனைத் தாழ்த்தியும் தம்முள்ளே முரண்பட்டமைக்குச் சமய குரவர்களின் தேவார திருவாசகங்களிலும் ஆழ்வார்களின் திருப்பாசுரங்களிலும் பெருமளவு சான்றுகள் உள்ளன. சிவாலயங்களிலே விட்டுணுவைப் பரிவார தெய்வங்களுள் அடக்கி வழிபாடு செய்யும் வழக்கத்தினைக் காணலாம். விட்டுணு ஆலயங்களில் சிவனுக்கோ மற்றைக் கடவுளர்க்கோ இடம் இல்லை* 'அரியும் சிவனும் ஒண்ணு அறியாதவர் வாயில் மண்ணு' என்னும் பழமொழி, சைவவைணவ ஒற்றுமைக்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் வெளிப்பாடு என்றே கொள்ளக்கிடக்கிறது. சிவனுக்கும் விட்டுணுவுக்கும் ஒரே ஆலயத்தில் சந்நிதிகள் அமைத்தமையும் இவ்வொருமைப்பாட்டு முயற்சியின் மற்றொரு வெளிப்பாடே. கச்சியேகம்பம் (நிலாத்துண்டப்பெருமாள்). சிதம்பரம் (கோவிந்தராசப் பெருமாள்). திருநெல்வேலி (நெல்லைக்கோவிந்தர்) திருச்செந்தூர் (அரங்கநாதன்). திருப்புத்தூர் (இலட்சுமி நாராயணன்). பழனம் (வேணுகோபாலர்). திருநாவலூர் (வரதராசர்). பவானி (ஆதிகேசவப் பெருமாள்) என்பன இக்கூற்றிற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

### விட்டுணுவின் திருநாமங்களும் அவை குறிக்கும் தத்துவப் பொருளும்

ஆதிதேவன், ஆதிமூலம் என்ற திருநாமங்களும் எல்லாத் தேவர்களுக்கும் முதலும் முதன்மையுமான தேவன் எனவும் எல்லாவற்றிற்கும் மூலமாயுள்ள பரம்பொருள் எனவும் பொருள் தருகின்றன. பத்மநாபன் என்ற திருநாமம் தாமரை மலர் போன்ற கொப்பூழை உடையவன் எனப் பொருள்படும். சிருட்டி தேவனாகிய பிரமன் இந்த நாபிக் கமலத்திலே தோன்றி யாவற்றையும் படைத்தான் என்னும் பொழுது ''மூலமாய் நின்றதாமோர் மூர்த்தி'' விட்டுணுவே என்ற பொருள் தானாகவே பெறப்படுகின்றது. ஜகம் என்பது உலகம். இதற்கு அரங்கம் என்ற வேறொரு பெயரும் உண்டு. ஆகவே ,'ஜகந்நாதன்'' ''அரங்கநாதன் என்பன உலகின் மூலப்பொருள், தலைவன் என்ற கருத்தினைத் தருவனவாகும். இவ்வாறு விட்டுணுவுக்கு அமைந்த ஒவ்வொரு திருநாமமும் அவனது மூலமாந் தன்மையையும் பரம்பொருட்டன்மையையும் புலப்படுத்தவே அமைத்துக் கொள்ளப்பட்டவை என்பது தெரிகின்றது. சிவ சகஸ்ரநாமம்போன்றே விஷ்ணுசகஸ்ர நாமமும் விட்டுணுவுக்கு 1008 நாமங்கள் கூறி வழிபட அமைந்ததாகும்.

---

* இப்பொது முடிவிற்கு விதிவிலக்குக்களாக அன்பில். வித்துவகோடு என்னும் விட்டுணு தலங்களிலே சிவபெருமானுக்கும் சந்நிதிகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விட்டுணுவை விளித்தழைக்கும் நாமம் ஒவ்வொன்றும் அவனது பெருங்குண இயல்புகளைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

அகவுயிர்க்கு அமுதே போற்றி!
மாயச் சகடம் உதைத்தாய் போற்றி!
ஞானச் சுடரே போற்றி!
சொல்லுளாய் போற்றி!
உடையாய் போற்றி!
உத்தமா போற்றி!
அதிர்குரல் சங்கத்து அழகா போற்றி!
கதியே போற்றி!
கரியாய் போற்றி!
குறளாய் போற்றி!
குருமணி போற்றி!
மறையாய் போற்றி!
மாதவா போற்றி!
அந்தணர் வணங்கும் தன்மைய போற்றி!
சிந்தனைக்கு இனியா போற்றி!

**விட்டுணுவின் மூர்த்தங்கள்**

விட்டுணு கோயில்களில் அவன் கோலங்கள் நிற்பன, இருப்பன, கிடப்பன ஆகிய மூவகையாக அமைககப்பட்டுள்ளதைக் காணலாம். இவை யோக. போக, வீர, ஆபிசாரிக என நான்குவகை மூர்த்தங்களாக வகை செய்யப்படும். யோக மூர்த்தம் யோகிகளுக்கும், போகமூர்த்தம் போகிகளுக்கும், வீர மூர்த்தம் வீரர்களுக்கும், ஆபிசாரிக மூர்த்தம் அரசர்களுக்கும் வணங்குவதற்கு என அமைந்தவையாகும். வேறுவகையிற் சொல்வதானால் வாழ்க்கையின் எந்தநிலையில் நிற்பவர்களுக்கும் அவரவர் விருப்பிற்கு ஏற்ப வழிபடுவதற்கென இவை அமைக்கப்பட்டுள்ளன.

**விட்டுணுவின் திருமேனிகள்**

'நாராயணனே முடிவான பரம்பொருள். அவனே மிகவுயர்ந்த பேருண்மை' எனவும், எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனும், கடவுளர்க்கெல்லாம் மேலான கடவுளும் ஆகிய அவனை வணங்குவோம்' எனவும் வேதங்களிலே புகழப்படும் விட்டுணு, குணங்கடந்த குணங்களற்ற நிர்க்குணப் பிரமமாகவும், தன்னை வணங்கும் அடியார்களுக்காகக் குணங்களுள்ள சகுணப்பிரமமாகவும் விளங்குகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்க்குணப் பிரம நிலையில் அவனைத்தரிசிக்கவோ, அவன் அருளை அநுபவிக்கவோ இயலாது. எனவே ஞானிகள் உட்பட வைணவ அடியார்கள் அனைவரும் சகுணப் பிரம நிலையிலே அவனை வழிபட்டுப் பேரானந்தமடைதலையே விழைகின்றனர். சகுணப் பிரமநிலை ஐந்து வகையான திருமேனிகளாக வகுக்கப் படும். அவையாவன:

1. **பரம்:** யாவையும் கடந்த நிலையிய் வைகுண்டத்திலே ஸ்ரீதேவி, பூமாதேவி, நீலதேவி தனக்குப் பணிவிடை புரிய அமர்ந் தருளும் பேரானந்தத் திருமேனி.

2. **வியூகம்:** பாற்கடலில் அனந்தனாகிய ஆதிசேடனிலே பள்ளிகொண்டு படைத்தல், காத்தல், அழித்தல், சம்சார பந்தத்தி லிருந்து கரையேற்றல் ஆகிய நான்கு தொழில்களையும் முறையே பிரத்தியும்னன், அநிருத்தன், சங்கர்ஷணன், வாசுதேவன் ஆகிய நால்வகைத் திருமேனிகள் கொண்டு நடாத்துதல்.

3. **விபாவம்;** அவதாரத் திருமேனிகள் இதனுள் அடங்கும்.

4, **அந்தர்யாமி:** படைக்கப்பட்ட சீவராசிகள் யாவினுள்ளும் தோன்றாத் துணையாய் நின்று அருள்பாலிக்கும் திருமேனி.

5. **அர்ச்சம்:** ஆலயங்களில் விக்கிரக வடிவில் எழுந்தருளி அருள் பாலிக்கும் திருமேனிகள்.

**விட்டுணுவின் திருக்கோலத் தத்துவம்**

[i] **நீலவண்ண நெடிய திருமேனி:** நிறமில்லாத (நிர்குண) நீர், கடலாக விரியுமிடத்து நீலமாகக் காட்சி தரும். காணமுடியாத பர வெளி, ஆகாயமாய் விரிகையிலும் அதன் நிறம் நீலமே. எனவே யாவையும் கடந்து எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளாகிய விட் டுணுவும் நெடியோனாகவும் நீலநிறமுடையோனாகவும் சித்திரிக்கப் படுகின்றான்.

[ii] **இடது திருக்கரத்தில் ஏந்திய சங்கு:** சங்கினை ஊதுகையில் எழும் ஓசை பிரணவமாகிய ஓங்காரமாகும். இயற்கை முழுவதும் இயங்குவதால் உண்டாகும் ஓசையே ஓங்காரம். சங்கை இயக்கு வதால் ஓங்கார ஓசை உண்டாக உலகம் இயங்குகிறது. எனவே விட்டுணு ஓங்கார வடிவினன் என்பது சங்கின் மூலம் புலனாகிறது.

(iii) **வலது திருக்கரத்தில் ஏந்திய சக்கரம்:** சக்கரம் ஏந்திய கையனாதலால் சக்கரபாணி எனத் திருநாமம் பெற்ற விட்டுணு, தருமத்தின் அறிகுறியான அந்தக் கருவியைக் கொண்டு அண்டசரா சரங்களின் தருமத்திற்கெல்லாம் தான் காவலன் என்பதையும் தருமம் தவறி அதருமம் மேலோங்குகையில் தருமமே அதனை அழிக்கும் என்பதனையும் உணர்த்துகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv) மற்றிரு கரங்களும் ஏந்திய கதாயுதமும் தாமரை மலரும்: உயிர்களைத் தனது அருளினாலே வீடுபேற்றுக்குப் பக்குவப்படுத்தும் விட்டுணு, அவ்வாறு அவை பக்குவம் அடைவதற்காய் வல்லியல்பு, மெல்லியல்பு என்ற இருவகை இயல்புகளையும் கொள்கின்றான்; வல்லியல்பு காரணமாக உயிர்களைப் பேதித்து வளர்த்தெடுக்கக் கதாயுதமும், போதித்தும் அருள்பாலித்தும் வளர்த்தெடுக்கத் தாமரையும் குறிகளாகக் கொள்கின்றான்.

v) திருமேனியிற் பொலியும் பேரழகு: என்றும் மாறாததும் ஒரே நிலையானதும் பற்றறுத்ததுமான பரம்பொருள் அழியாத தெய்வப் பேரழகு வாய்ந்தும் பொலியும் என்பதைக் காட்ட, விட்டுணு பேரழகனாக அழியா அழகுடையவனாகக் காட்சி தருகின்றான். புன்முறுவல் மாறாத பவள வாயும் தாமரை விழிகளும் சிவந்த திருக்கரங்களும் திருப்பாதங்களும் விட்டுணுவின் தெய்விகப் பேரழகினைப் புலப்படுத்த அமைந்தனவாகும். பட்டுப் பீதாம்பரதாரியாய், சர்வாபரண பூஷிதனாய்க் கௌத்துவமணி அணிந்து செல்வநாயகனாய் அவன் விளங்கித் தோன்றுவான்.

vi) திருவாழ்மார்பன்: விட்டுணு உயிர்களைக் காக்கும் கடவுள். உயிர்களுக்கு உறுதியளிப்பன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குமாகும், இந்நான்கையும் விட்டுணுவின் இதயக்கமலத்தில் எழுந்தருளியிருக்கும் 'மலரின் மேவு திரு' வாகிய சத்தி வழங்குவதையே இலட்சுமி சமேதனாக விளங்கித் தோன்றுவது புலப்படுத்துகிறது.

**வைணவத்தின் தத்துவ நோக்கு**

'அது நீ ஆகின்றாய்' 'ஒன்றே உள்ள பொருள்', 'நான் பிரமம் ஆகின்றேன்', 'அது நீ' (தத்துவம் அஸி, ஏகம்சத், அஹம் பிரமாஸ்மி, தத் சத்) என்பன வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதங்களில் வரும் மகாவாக்கியங்களாகும். இவற்றின் விரிவான விளக்கங்கள் கருத்தளவில் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையான சிந்தனைகள் தோன்றக் காரணமாயின. இச்சிந்தனைகளைத் தொகுத்து ஒருமைவாத அடிப்படையில் விளக்கம் தரமுற்பட்ட தத்துவநூல் வாதராயனர் எழுதிய பிரமசூத்திரமாகும். இதற்கு விரிவான வியாக்கியானம் செய்து பேருரைகள் (மஹாபாஷ்யங்கள்) எழுதியோருட் ஸ்ரீசங்கராச்சாரியார், ஸ்ரீராமானுஜர், மத்துவர், நீலகண்ட சிவாச்சாரியார் ஆகியோர் முதன்மையானவர்.

ஸ்ரீசங்கராச்சாரியார் 'உள்ளது ஒன்றே அது பிரமமே' என்ற அடிப்படையில் தமது ஆய்வினை மேற்கொண்டார். நிர்க்குணப்பிரமம் மாயை காரணமாக ஈசுவரன் என்ற சகுணப் பிரமநிலைக்கு இறங்குகின்றது என்றும், அவித்தை காரணமாகப் பலவாகிய வடிவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாய்த் தோற்றுகின்றது என்றும், மாயையும் அவித்தையும் மறைய ஏகமாகிய பிரமம் மட்டுமே தோன்றும் என்றும், இரண்டற்ற ஒருமை நிலையாகிய 'கேவலாத்துவிதம்' - உயர்நிலை - அதுவே என்றும் பல் வேறு எடுத்துக்காட்டுக்கள், அநுமானங்கள் வாயிலாக அவர் நிறுவி யுள்ளார். சங்கர வேதாந்தம் என்றும் ஏகான்மவாதம் என்றும் மாயாவாதம் என்றும் இத்தத்துவ நோக்கு அழைக்கப்படுகின்றது. ஒன்று வேறொன்றாகத் தோற்றுவதாகிய விவர்த்தவாதமே இவரின் விளக்கத்திற்கு அடிப்படை. சண்மதப் பிரதித்தாபகரெனினும் சங் கரரின் வேதாந்த தத்துவம் சைவத்தையே அடிநிலையாகக் கொண்டது.

சங்கரருக்கு இரண்டு நூற்றாண்டுகள் பிற்பட்டவர் எனக் கொள் ளப்படும் (கி. பி. 1000) ஸ்ரீராமானுஜர் வைணவர், இவர் பிரமத்தை விட்டுணு எனவே கொள்கின்றார். சங்கரர் பிரமத்தை மட்டும், உள் பொருள் எனக் கொள்ள, ஸ்ரீராமனுஜர் பிரமம், உயிா, உலகம் மூன்றும் உள்பொருள்கள் என நிறுவ முற்படுகின்றார். பிரமம் உயிர். ஜீவன்களும் உலகமும் அதன் உடல். அஃதாவது பிரமம் சரீரியாகவும் ஜீவன்களும் உலகமும் சரீரமாகவும் உள்ளன. ஒன்றை ஒன்று பிரிந்து இயங்குவதில்லை. இவ்வகையில் இராமானுஜர் பரிணாமவாதியாவர். இவரின் கருத்துப்படி உலகையும் உயிர்களையும் அந்தர்யாமியாய் நின்று இயக்குபவன் விட்டுணுவாகிய பிரமம். உடலை உயிர் இயக்க உயிருள் உயிராய் நின்று உயிரை இயக்குவது பிரமம் என்பது இரா மானுஜரின் முடிபு. 'உள்ள பொருள் ஒன்றே' என்பதற்கு இவர் கொண்ட பொருள் 'சுதந்திரமாய் உள்ள பொருள் பிரமம் ஒன்றே. அதற்குக் கட்டுண்டு அதனால் இயக்கப்படுவன பலவாகிய உயிர்கள், உலகம், என்பதே. எனினும் சரீர சரீரி சம்பந்தத்தால் இவை இரண் டாகவோ பலவாகவோ வேறுபட்டு நின்று இயங்காது ஒன்றாய் இணைக்கப்பட்டு ஒன்றாகவே இயங்குகின்றன, என்பதும் இரா மானுஜரின் முடிபு. உலகும் உயிர்களும் விசேடணங்கள். இவ் விசேடணங்களைத் தன்னகத்தே கொண்ட விசேடியமே பிரமம். ஆக விசேடணங்களும் விசேடியமும் ஒன்றிணைந்து பிரிக்கமுடியாத வாறு ஒன்று போல விளங்குவதே (அப்பிரதக்சித்தி), ஸ்ரீராமானுஜ ரின் ஒருமைக்கோட்பாடு, இதனை விசிட்டாத்துவிதம் என்பர். இவ வாறு பிரமத்தை உயர்த்தி உயிரின் இயக்கத்திற்கு அதனை இன்றி யமையாததாய் ஆக்கியதன் மூலம், இராமானுஜர் தமது தத்துவத் திலே பத்திக்குத் தாராளமாக இடம் அளித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஸ்ரீராமானுஜர் பிரமசூத்திரத்துக்கு எழுதிய பேருரை ஸ்ரீபாஷ்யம் என வழங்கும்.

இராமானுஜருக்குப் பின்வந்த மத்துவர் இராமானுஜரைப்போல இறைவனுக்கும் உயிர் உலகிற்கும் பிரிக்கமுடியாத உறவைக்கற்பிக்க வில்லை. அவை இரண்டும் என்றும் வேறு வேறானவையே என்பது மத்துவரின் முடிபு. இவை மட்டுமல்ல, சடமாகிய உலகமும் இவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிலும் வேறானதே எனவும் அவர் கொள்வர். பொருள்கள் வேறு வேறு எனப் பிரிக்கப்படுவதற்கு அவற்றினிடையே உள்ள வித்தியாசங்கள் எடுத்துக் காட்டப்படல் வேண்டும். மத்துவர் இம்மூன்றற்கும் உள்ள வித்தியாசங்களை ஐந்துவகைப் பேதங்களாக வகுத்துக் காட்டுவர். ஈசுவரனுக்கும் சீவனுக்குமுள்ள பேதம் முதலாவதாகும். இது 'சீவேசுரபேதம்' எனப்படும். அடுத்தது சீவன்களுக்கிடையிலே காணப்படும் பேதம். இது சீவபரஸ்பரபேதம். மூன்றாவதாகச் சீவன்களுக்கும் சடமாகிய உலகிற்குமுள்ள பேதம். இது 'சீவசடபேதம்'ஆகும். நான்காவதாகச் சடங்களுக்கிடையிலே காணப்படும் பேதம். இது 'சடபரஸ்பர பேதம். ஐந்தாவது ஈசுவரனுக்கும் சடத்துக்கும் இடையேயான 'சடேஸ்வரபேதம்'.

இவ்வாறு பேதங்கற்பித்த மத்துவர், வாயு புத்திரனாகிய அனுமான் மூலம் உயிர்கள் ஈசுவரனைச் சென்று அடைவதே முத்தியென்றும் ஆனால் இந்த முத்தி சகல ஆன்மாக்களுக்கும் கிட்டாது என்றும் சில ஆன்மாக்கள் எக்காலத்திலுமே முத்தியடையா என்றும் கூறுவர். இவரின் வேதாந்த தத்துவம் துவிதம் (இரண்டாந் தன்மை) எனப்படும். மத்துவரும் வைணவராதலின் இவர் குறிக்கும் ஈசுவரனும் விட்டுணுவேயாவன். இராமானுஜருடைய தத்துவத்திலே பத்திக் கலப்புக் காணப்படுவதுபோல மத்துவரின் தத்துவத்திலும் பத்திக்கு இடமுண்டாயினும், சில ஆன்மாக்கள் முத்தி அடையா என்ற இவரின் கருத்து, பத்திவைராக்கியத்திலே தளர்ச்சியுண்டாக்கக் கூடியதாகும். இம்முடிவுக்கு இவர் வரக் கிறிஸ்தவ சமயச் செல்வாக்குக் காரணம் எனக் கூறப்படுவதுமுண்டு.

நீலகண்ட சிவாசாரியார் சைவசித்தாந்த நோக்கிலே பிரமசூத்திரத்திற்கு மகாபாடியம் எழுதியவராவர். சில வகைகளிலே, ஸ்ரீராமானுஜருடைய தத்துவக் கோட்பாடு, சைவசித்தாந்தத்தோடு ஒத்துச் செல்வது உண்மையே. (இறை, உலகு, உயிர் என்ற முப்பொருள்களும் உண்மையெனக் கொள்வதிலும் காட்சி, கருதல், நூல் ஆகிய முப்பிரமாணங்களை ஏற்பதிலும், வேதஉபநிடதங்களோடு புராணங்கள் ஆகமங்களைப் பிராமண நூல்களாகக் கொள்வதிலும் ஒற்றுமையுண்டு. ஆனால் அத்துவித முத்திநிலையில் இருசாராருக்கும் மிகப் பெரிய முரண்பாடு காணப்படுகின்றது. இராமானுஜருக்குப் பின்வந்த தெலுங்கரான நிம்பர்க்கர் அத்து விதத்தையும் துவிதத்தையும் இணைத்து'அத்துவிதாத்துவித' தத்துவத்தை உருவாக்கினார்.

**வைணவத்தின் பிரமாண நூல்கள்.**

சைவம் முதலிய மற்றைச் சமயங்கள் போலவே வைணவமும் வேதங்களையும் உபநிடதங்களையும் முதனூல்களாகக்கொண்டிருப்பது முன்னரே கூறப்பட்டது. சைவத்திற்கு இருபத்தெட்டு ஆகமங்கள் உள்ளது போல வைணவத்திற்கு இரண்டு ஆகமங்கள் பிரமாண நூல்களாக உள்ளன. முனிவர்கள் பலர் ஐந்து இராத்திரிகளிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசித்த பாஞ்சராததிர ஆகமமும் விகனசர் என்பவர் உபதே சித்த வைகாசன ஆகமமுமே அவை. சமய தத்துவம், வழிபாட்டு முறைமை, கிரியைகள், கோயில் அமைப்பு, விக்கிரக அமைப்பு என்ற யாவும் இவ்வாகமங்களிலே விரிவாகப் பேசப்படும்.

விட்டுணுவின் மகத்துவங்களையும் அவர் அடியார்களுக்கு அருளிய திறங்களையும் அடியார் பெருமைகளையும் எடுத்துரைப்பன பிரமாண நூல்களாய்க் கொள்ளப்படாத போதிலும், இவையும் வைணவ சமய வளர்ச்சிக்கு உதவின என்ற வகையில் வியாசர் யாத்த புராணங்களும் குறிப்பிடத் தக்கனவே. பதினெண் புராணங்களில் கருடம், வராகம், நாரதீயம், வைணவம், பாகவதம், வாமனம் ஆகிய ஆறும் விட்டுணு புராணங்களாகும்.

தத்துவ நூலாகவும் வாழ்க்கை நெறியை வகுத்துக் கூறுவதாகவும், கர்மயோகத்தை முதன்மைப்படுத்திச் செயல் புரியத் தூண்டுவதாகவும் விளங்கும் பகவத்கீதை வைணவர்க்கே சிறப்பு நூலாயினும் எல்லா மதத்தவரும் பொது நூலாகக் கொண்டு படித்துப் பெரும்பயன் அடைய உதவுவதுமாகும். இது மகாபாரதத்தில் வீட்டும பர்வத்தில் பதினெட்டு அத்தியாங்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

**வைணவத்தின் உட்பிரிவுகள்:**

வைணவ சமயத்தின் உட்பிரிவுகள் மூன்று. கிருஷ்ண சைதன்யம் நிம்பர்க்க வைணவம், வல்லபம் என்பனவே அவை. சைதன்யர், நிம்பர்க்கர், வல்லபர் என்ற வைணவ அருளாளர்களின் பெயர் களால் இவை அழைக்கப்படுகின்றன. இவற்றை விடத் தமிழ் நாட்டில் வடகலை, தென்கலை என்ற இருபிரிவுகளும் காணப்படு கின்றன. வடகலை என்பது வடமொழி வேதசாத்திரங்களையே பிர மாணங்களாகக் கொண்டு ஒழுகுபவர்களைக் கொண்ட பிரிவு. தென் கலை என்பது தமிழ்நாட்டு ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களைப் போற்றி அவற்றின் வழிநடப்போரைக் கொண்ட பிரிவு. விட்டுணு வின் திருவடிகள் இரண்டையுந் தவிர உயிர்கட்கு வேறு கதியில்லை என்பதைக் குறியீடாகக் காட்ட அவனது திருவடிகளைப் போல இடும் நாமத்திலும் வடகலையார் தென்கலையார்களுக்கிடையே வேறுபாடு காணப்படும்.

**வைணவ பத்தி நெறி**

''நான்'' ''எனது'' என்னும் அகப்பற்று (அகங்காரம்), புறப் பற்றுக்களை (மமகாரம்) ஒழித்து, தனது வலியில்லா நிலையினை உணர்ந்து இறைவனின் பாதார விந்தங்களைச் சரணாகதி அடையும் தன்னிழப்பு நிலையே பத்திக்கு வித்தாகும். அதுவே முத்திக்கு வழியு மாகும். தன்னை மறந்து தலைவன்தாள் பற்றி அவனிலேயே பித் துக் கொள்ளும் இன்ப அன்பினை வைணவர் ''பிரபத்தி'' என அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அவனிலே பிரபத்தி பண்ணுவோரை மூவகையாகப் பிரிக்கலாம்.

1. **சமானிய மக்கள்-** சடசம்பந்தத்தால் அறியாமை மிக்கு, சத்தி யற்றவர்களாய், இறைவனை அடையும் சாதனைகளிற் பழக முடியாது இறைவனிடம் தம் பாரத்தை ஒப்புவிப்பவர்கள்.

2. **ஆசாரியர்கள்-** ஆன்மாவின் உண்மைநிலை இறைவனுக்கு வசமாயிருத்தலே என உணர்ந்தும், ஞானத்தைப் பெறும் முயற்சியில் சாதனைத்திறன் பெற்றிருந்தும், இறைவனின் திருவுருவ தரிசனத்திலே மாறாக்காதல் பூண்டு வேறு கதியின்றி இறைவனிடம் தம்மை ஒப்புவிப்பவர்கள்.

3. **ஆழ்வார்கள்-** பகவானை நினைத்த உடனேயே பேரன்புமிக்கவர்களாய் அப்பேரன்பால் உணர்ச்சி மிகுதியாக, யோகசாதனைகளில் ஈடுபடமுடியாத அசத்தி நிலையில் அவனைத் தஞ்சமாகப் பற்றிக் கிடப்பவர்கள்.

இம்மூவகையாரதும் பொதுத்தன்மை யாதெனில் ''நான் செய்கிறேன்'' என்ற தன்னுணர்வின்றி எப்பொழுதும் ''நான்'' என்பதை ஒழிக்க முயலும் முயற்சியே. இவ்வாறு முயல்கையில் இத்தகையோருக்காக எளியவனாகிக் கீழிறங்கிவந்து தன்முயற்சியால் பகவான் இவர்களைத் தன் அடிகளிலே சேர்த்துக் கொள்கிறான். அஃதாவது முத்திக்குச் சாதனம் இறைவனேயாக வேறுசாதனம் வேண்டாத நிலையே பிரபத்தியாகும்.

பிரபத்தி பற்றிய பின்வருங் கூற்று உளங்கொள்ளத்தக்கது. ''பிரபத்தியில் உபாயமும் (வழியும்) அதனால் அடையப்படும் உபேயமும் (முடிவும்) ஒன்றாகின்றன. வேறு சாதனங்களைக் கொண்டு இறைவனை உபேயமாகக் பற்றுவர் சிலர். இறைவனை உபாயமாகக் கொண்டும் தமக்குவேண்டும் உலக இன்பம் முதலாக முத்தியின்பம் ஈறாகவுள்ள பலவகை இஷ்டங்களையும் உபேயங்களாகக் கொண்டும் அவற்றைப் பெறுவார் சிலருளர். ஆனால் பிரபன்னரோ (பிரபத்தி செய்பவர்களோ) இறைவனையே உபாயமாகப் பெறுவர். இப்பிரபத்தி நெறியில் முயற்சி செய்பவனும் இறைவன். முயற்சியின் பயனை அடைபவனும் அவனே. இறைவன் தனக்கும் ஜீவனுக்குமுள்ள உறவை நினைந்து, தனது உடைமையாகிய ஜீவன் பிறவிப் பெருங்கடலில் அமிழ்ந்து கிடப்பதைப் பொறாது தானே முயன்று அவற்றை வெளியேற்றித் தானே இன்புறுகிறான்; ஜீவன் தன்னைக் கருவியாகவே நினைக்கின்றான்; இறைவனால் ஆட்டுவிக்கப்படும் ஒரு கருவியாயினும் தான் அறிவுடையவனாதலினால், ஆட்டுவிக்கப்படுவதை உணர்ந்து இறைவனது மகிழ்ச்சிக்கென்றே தன்னை அமைத்துக் கொண்டு இன்படைகிறான். (இவ்விடத்தில் சைவசித்தாந்தம் குறிக்கும் மர்க்கட சம்பந்தம் (குரங்கு - குட்டி தொடர்பு) மார்ச்சார சம்பந்தம் (பூனை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டி சம்பந்தம்) என்பவற்றை ஒப்பு நோக்கலாம். (அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' _ மாணிக்கவாசக சுவாமிகள்)

பத்தியின் முதிர்ச்சியிலேயே பிரபத்தி உண்டாகும் என்பது வைணவத்தின் முடிபு. இந்தப் பிரபத்திநிலையிலே ஒருவன் செய்ய வேண்டுவன பின்வருமாறு:-

i. சிரவணம்: பத்திசிரத்தையோடு புராணம் முதலியவற்றைக் கேட்டல்.

ii. கீர்த்தனம்: பத்திததும்பப் பகவானைப் பாடுதலும், புகழ் கூறுதலும்.

iii. ஸ்மரணம்: இறைவன் நாமத்தை ஓதுதலும், அவனது ரூபத்தையும் குணங்களையும் இடைவிடாது நினைத்தலும்.

iv. பாதஸேவனம்: குருவின் பாதங்களில் தொண்டு பூணல்.

v. அர்ச்சனம்: இறைவனது திருவடிவங்களுக்குப் பூசை செய்தல்.

vi. வந்தனம்: தெய்வங்கள், குரு, சாதுக்கள், அடியார்கள் (பாகவதர்கள்), நல்லோர் ஆகியோரை வணங்குதல்.

vii. ஆத்மநிவேதனம்- ஆத்மாவை இறைவனிடம் ஒப்புவித்தல்.

இவற்றோடு கூடிப் பாடுதலாகிய பஜனையும் மந்திரம் செபித்தலாகிய உபாசனையும் ("ஓம் நமோ நாராயணா" - அட்டாட்சர மந்திரம்) செய்தலும் பத்தர்களின் இடைவிடாப் பணிகளாகும்.

பகவானை ஆண்டானாகவும் தன்னை அடியவனாகவும் பாவனை பண்ணும் தாஸ்ய பாவம், அவனைத் தந்தை அல்லது மகனாகப் பாவிக்கும் வாத்ஸல்யபாவம், நண்பனாகக் கொள்ளும் ஸக்ய பாவம், அவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கற்பிக்கும் மதுரபாவம் என்னும் பாவனைகளும் பத்தி முதிர்ச்சியின் வெளிப்பாடுகளே.

இவ்வாறு பத்திநெறியிலே அதிதீவிர பக்குவம் அடைந்த பாகவதனில் (அடியவனில்) பின்வரும் குணவியல்புகள் காணப்படும்:

1. உலகியலில் லாப நட்டங்களைப் பொருட்படுத்தாமை.

2. உலகியலிலே காலத்தைப்போக்காது எந்நேரமும் சாதனையில் ஈடுபடல்.

3. உலகப் பற்றின்மை.

4. புகழ்ப்பற்றின்மையும் தன்னைத் தாழ்த்தலும்.

5. பகவான் கருணைபுரிவான் என்பதில் உறுதியான நம்பிக்கை.

6. இறைவனோடு கலப்பதில் பெரு வேட்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இறைநாமத்தை ஓதுவதில் பேரவா.
8. அவனது கல்யாண குணங்களை எடுத்துரைத்தலிற் பெருவிருப்பு
9. இறைவனது லீலைகள் நடந்த புனித தலங்களில் தானும் வாழ்வதிற் பேராசை.

அவதாரக் கோட்பாடு

''நல்லோரைக் காக்கவும் கொடியோரை அழிக்கவும் தருமத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்'' என்பது, பகவான் பகவத்கீதையிலே கூறியதோர் கூற்று. அவதாரம் என்பது கீழிறங்கல் எனப் பொருள்படும். உயிர்கள் மீது கொண்ட பேரருள் காரணமாக விட்டுணு உலகிலே அவதரிக்கிறான் என்பது வைணவரின் உறுதியான நம்பிக்கை. அவனின் அவதாரங்கள் எல்லாமாகப் பத்து என்பதும் அவற்றுள் ஒன்பது அவதாரங்கள் நிகழ்ந்து முடிந்தன என்பதும் இறுதி அவதாரம் நிகழவுள்ளது என்பதும் வைணவர் கொண்ட கருத்தாகும். மச்சம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நரசிம்மம் (உடல் மனிதஉரு, தலை சிங்கஉரு), வாமனன் (குள்ளன்), பரசுராமன், பலராமன், இராமன், கிருஷ்ணன் என்பன இதுவரை விட்டுணு எடுத்த அவதாரங்களாகும். ''கல்கி'' என்னும் அவதாரம் இனி எடுக்கவுள்ள அவதாரம். நீர்வாழ் உயிரியிலிருந்து தொடங்கிப் படிப்படியான வளர்ச்சி நிலையில் தெய்வநிலைவரை இந்த அவதாரங்கள் பரிணாமம் அடைந்து செல்வது குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வோர் அவதாரமும் தேவர்கள் மானிடர் ஆகியோரின் இடர்களைப் போக்கவே எழுந்தவை எனப் புலப்படுத்த வரலாறுகளும் உள்ளன. இவற்றுள் இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமுமே அடியார்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தவையாகும். ஆலயங்களில் இவ்விரு அவதாரத் திருமேனிகளும் முதன்மை பெற்று வழிபாட்டிற்கு உரியன வாய் விளங்குவதோடு இராமாயணம், பாரதம் ஆகிய பேரிதிகாசங்களும் தோன்ற வழிவகுத்தன. பல்லாயிரக்கணக்கான தோத்திரப் பாசுரங்களும் பாடல்களும் இராமனையும் கிருஷ்ணனையும் துதிப்பன வாக, இந்தியாவின் எல்லா மொழிகளிலும் தோன்றியுள்ளதும் தோன்றிக் கொண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கன.

இங்கு அவதாரங்கள் பத்து எனக்குறிக்கப்பட்ட போதிலும் புராண மரபுப்படி அவை கணக்கில் அடங்காத பல என்ற கருத்தும் நிலவுகின்றது. இருடிகள், மனுக்கள், தேவர்கள், மனுவின் புத்திரர்கள் யாவரும் விட்டுணுவின் அம்சங்களே என்று கொள்ளும் பொழுது அவதாரங்கள் அளவிறந்தனவாகின்றன.

இவ்வகையில் அவதாரங்களை மூவகையாகப் பிரித்தும் நோக்கலாம். அவதாரம், ஆவேசம், அம்சம் என்பனவே அவை. கடவுளின் முழுவல்லமையுடனும் தோற்றுவன அவதாரங்களாகும். தற்காலிகமாகத் தன் சத்தியினை இறைவன் ஓர் உருவிலே புகுத்தி நோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்ததும் மீட்டுக்கொள்வது ஆவேசமாகும். நரசிம்மம், வாமனன் முதலியன் ஆவேசத்துள் அடங்கும். கடவுளின் கருவிகளாய் உள்ளதும் அவ்வப்போது தோன்றித் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனம் செய்வதும் அம்சமாகும். சங்கு, சக்கரம் என்பவற்றின் தோற்றமே ''அம்சம்'' எனப்படும்,

**விட்டுணுவின்**

தமிழகத்தில் விட்டுணுவின் ஆலயங்களுக்குப் பொதுப் பெயக ''விண்ணகரங்கள்'' என்பது. சமயகுரவர்கள் பாடியதாலே ''பாடல் பெற்ற தலங்கள்'' எனப் மோற்றப்படும் சிவாலயங்கள் போல, ஆழ்வார்கள் பன்னிருவராலும் பாடப்பட்ட விட்டுணுத் தலங்கள் எழுப தாகும். இவற்றை ''மங்களா சாசனம் பெற்ற பதிகள்'' என அழைப்பது வைணவமரபு. சோழநாட்டில் நாற்பதும், பாண்டிநாட்டில் பதினெட்டும், சேரநாட்டில் பதின்மூன்றும், தொண்டைநாட்டில் பதினான்கும் வடநாட்டில் பன்னிரண்டும் நடுநாட்டில் இரண்டுமார் அமைந்துள்ள நூற்றெட்டு வைணவத் தலங்களிலே முப்பத்தெட்டே மங்களாசாசனம் பெறாதவை.

இலங்கையிலே வைணவர் என்று குறித்துச் சொல்லக்கூடிய நிலை இல்லாவிடினும், வைணவம், சைவம் போன்று தனித்ததோர் சமயமாகக் கடைப்பிடிக்கப்படாவிடினும் விட்டுணு ஆலயங்கள் சில இருப்பதும் சைவர்களும் அங்குச் சென்று வழிபடுவதும் சிறப்பித்துச் சொல்ல வேண்டியனவாகும் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையிலுள்ள ஸ்ரீவேங்கடேசவர தராசப் பெருமாள்கோயில், வல்லிபுரத்தில் அமைந்த வல்லிபுர ஆழ்வார் கோயில், பொன்னாலையிலே திகழ்கின்ற வரதராசப் பெருமாள் கோயில் என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிடக் கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் விட்டுணு ஆலயங்கள் உள்ளன. சில சிவாலயங்களிலும் சில முருகனாலயங்களிலும் விட்டுணு பரிவார தெய்வமாக எழுந்தருளியிருப்பதும் இலங்கையிலே காணத்தக்கது. இங்குச் சைவ வைணவ வேறுபாடு கவனத்திற்குள்ளாவதில்லை. பௌத்தர்களும் 'விட்டுணு தெய்யோவை வழிபடுவதுண்டு.

**வைணவபத்தி இயக்கம்**

திருமாலின் பத்தியிலே ஆழ்பவர்களை ஆழ்வார்கள் என்ற சிறப்புப் பெயரால் தமிழில் அழைப்பதும் பகவான்மீது பத்திப் பித்துக் கொண்டு பாடித்திரியும் தொண்டர்களைப் 'பாகவதர்கள்' என்று வடமொழியில் குறிப்பதும் வழக்கம். திருமாலின் மீது பத்தியானது வெள்ளமாகப் பெருகி ஓடிய காலம் பல்லவர்காலமாகும். சங்ககாலத்திலேயே (கி.பி 100-300) திருமாலை மாயோன் என்ற பெயரில் வழிபட்டமையை முன்னர்க் கண்டோம். சங்கமருவிய காலத்தின் (கி.பி 300-600) இறுதிப்பகுதியில் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், ஆகிய மூவமழ்வார்கள் தோன்றித் திருமால்மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாதியாகிய பிரபந்தம் பாடி அவன்மீது பத்தி கொள்ளத் தமிழ் மக்களைத் தூண்டிவிட்டனர். இத்தூண்டுதலின் உச்சகட்டத்தினை நாம் பல்லவர் காலத்திலே (கி. பி. 600 - 900) தெளிவாகக் காண்கின்றோம். பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய ஒன்பதின்மர் தோன்றித் தமது பத்திப்பாசுரங்களின் உணர்ச்சிப் பிரவாகத்திலே தமிழ்நாட்டின் வைணவ மக்களைத் திளைக்கவைத்தனர்; சைவசமய குரவர்கள் போலவே பரசமய கண்டனம் வாயிலாகவும் ஆலயவழிபாடு, அடியார் வழிபாடு வாயிலாகவும் வைணவபத்தி நெறியைப் பத்தி இயக்கமாக வளர்த்தனர்; தமிழுக்கு வளத்தையும் தமிழிசைக்கு வனப்பையும், தமிழ்க் கலைகளுக்கு உயிரையும் ஊட்டினர். தமிழின் பத்தி இலக்கியத்திற்கு ஆழ்வார்களின் பங்களிப்பு சமானியமானதன்று. நம்பியாண்டார்நம்பி தேவார திருவாசகங்கள் முதலியவற்றைத் திருமுறைகளாகத் தொகுத்துத் தந்ததுபோல. நாதமுனிகள் என்ற வைணவப் பெரியார் ஆழ்வார்களின் பாசுரங்களை 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்ற பெயரில் தொகுத்துத் தந்துள்ளார்.

விசிட்டாத்துவித தத்துவத்தை உருவாக்கிய ஸ்ரீராமானுஜர். வடநாடு சென்று தம் தத்துவத்தோடு பத்தி நெறியையும் அங்குப் பரப்பித் தம் வழியிலே ஒரு பாகவத பரம்பரையினை உருவாக்கிய காலத்திலிருந்து, வடநாட்டிலே பத்தி இயக்கம் வீறுகொண்டு எழுவதாயிற்று. இராமாநந்தர், கபீர்தாசர், சைதன்னியர், ஜெயதேவர் துளசிதாசர். துக்காராம், மீராபாய் முதலான பரமபாகவதர்கள் வடநாட்டின் பல பகுதிகளிலும் தோன்றிச் சமஸ்கிருதத்திலும். தமது தாய்மொழிகளிலும் விட்டுணுமீது பத்திப் பாடல்களைப் பெருந்தொகையாய் இயற்றியும் பத்தி மார்க்கத்தை மக்களிடையே தமது தூய அன்பு வாழ்க்கை முறையினால் பரப்பியும் பெரும்பணி புரிந்தனர். இதனை விபுலாநந்த அடிகள் 'தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டிற் பரவிய வரள்முறை' என்ற தமது கட்டுரையிலே மிக விரிவாக விளக்கியுள்ளார். வடநாட்டுப் பத்தி இயக்கத்தைப் பாகவத இயக்கம் எனவும் இவ்வியக்கத்தின் முன்னணியில் நின்றோரின் பாடல்களைப் பாகவத இலக்கியம் எனவும் அழைப்பது மரபு.

இவ்வாறு பழமையும், தத்துவச் செழுமையும். பத்திப் பிரவாகமும் கவர்ச்சியும் பொருந்தி இந்து சமயத்தின் உயிர்த்துடிப்பு வாய்ந்த கூறுகளுள் ஒன்றாக வைணவம் நிலைத்து வாழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌமாரம்

## முருக வழிபாட்டு வரலாறு

அறுவகைச் சமயங்களுள் இடம்பெறும் கௌமாரம் குமரக் கடவுளை முழுமுதற் கடவுளாகக் கொள்வதாகும். இப்பெருமான் பழந்தமிழிலக்கியங்களிலே முருகன், முருகு எனவும், செய்யோன் செவ்வேள் எனவும் அழைக்கப்படுவன். முருகன் என்ற சொல்வழக்கிற்குச் சில சான்றுகள் பின்வருவன.

கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
(புறநானூறு 23)

சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
(அகநானூறு 53)

முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்
(பொருநராற்றுப்படை)

முருகென மொழியும் வேலன்
(ஐங்குறுநூறு 249)

முருகொத் தீயே முன்னிய முடித்தலின்
(புறநானூறு 59)

'செவ்வேள்' என்ற தலைப்புடன் பரிபாடலில் 5, 8, 9, 14, 17, 18, 19, 21 பாடல்கள் வந்துள்ளன. செவ்வேள் என்ற பெயர் ஆட்சி பெற்றமைக்குச் சான்றுகள் வருமாறு.

ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
(பரிபாடல் - மதுரை)

அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
(சிலப்பதிகாரம்)

செய்யோன் (புறம் 59), விறல்வேள் (ஐங்குறுநூறு 250, பதிற்றுப் பத்து 2 ஆம் பத்து), வேல்வேள் (பரிபாடல் 18) என்ற பெயர்களும் முருகனுக்கு அக்காலத்திலே வழங்கியுள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்து அகத்திணையியலில்,

சேயோன் மேய மைவரை உலகமும்

என வருவதிலிருந்து சேயோன் என்ற பெயர் வழக்கையும் காண்கின்றோம். இவற்றிலிருந்து முருகன் சிவந்த நிறமும், (சேயோன் - சிவந்த நிறமுடையவன்) விருப்பத்தைச் செய்யும் இயல்பும் (வேள் - விருப்பத்தைச் செய்வோன்) சினமிகுதியும், சூரனை ஆணவம் தொலைக்கலும், வேலினைத் தனது ஆயுதமாய்க் கொள்ளலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தவை முடித்தலும் (முன்னிய-நினைத்தவை), சிறந்த உருவுடைமையும் (உருகெழு - உருவாற் சிறந்த), தலைமைப்பாடும் (குரிசில் - தலைவன்) பொருந்திய கடவுளாகக் கொள்ளப்பட்டு வழிபடப்பட்டான் என்பது புலனாகின்றது. திருமுருகாற்றுப்படை,

'இழையணி சிறப்பிற் பழையோள் குழவி'

என்று கூறியுள்ளதை நோக்குகையில் அவன் பழந்தமிழரது பெண் தெய்வமாகிய கொற்றவையின் மகன் என்ற உண்மையும் போதரும்

முருகவழிபாடு மிகவும் தொன்மையானது. சில காலத்திற்கு முன்பு தமிழகத்தில் திருநெல்வேலி, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களிலே புதைபொருளாராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட பொழுது, ஈமத்தாழிகள் சில கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றிலிருந்து கி.மு 2000 ஆண்டுக்குரிய பெருங்கற்பண்பாடு இங்கெல்லாம் நிலவியிருக்கலாம் என்ற உண்மை பெறப்பட்டது. இவற்றோடு சேவற்சிலை, காவடிச் செதில்கள், வேல் என்பனவும் கிடைத்தன. இவை கொண்டு முருகவழிபாடு இவ்விடங்களிலே அந்தத் தொன்மைக் காலத்திலேயே நிலவியிருத்தல் வேண்டும் என்று புதைபொருளாய்வாளர் முடிவு செய்தனர். பெருங்கற்பண்பாடு தமிழருக்குரியதென்பர். எனவே மிகப்பழமையான முருக வணக்கத்திற்குரியவர் தமிழர் என்ற உண்மையும் பெறப்படும். 'முருகன் அல்லது அழகு' என்ற நூலின் ஆசிரியரான திரு. வி. கலியாணசுந்தரனார் முருகு, முருகன் ஆகிய சொற்களின் தொன்மையையும் அவற்றின் பொருட்சிறப்புக்களையும் நன்கு விளக்கியுள்ளமையும் இவ்வுண்மையை நிறுவ உதவுவதாகும்.

''முருகு அல்லது முருகன் என்னும் சொல்வழக்கு மிகத் தொன்மையானது. அச்சொல் வழக்கு இத்தகையது என்று எவராலும் வரையறுத்துக் கூறல் இயலாது. முருகின் தொன்மை காரணச் சிறப்பாக ஈண்டு இரண்டு குறிப்புக்கள் பொறிக்கலாம். ஒன்று முருகன் தமிழ்க் கடவுள் என்பது; மற்றொன்று முருகன் மலைநிலக்கடவுள் என்பது. இவ்விரண்டாலும் முருகன் தொன்மை நனி விளங்கும். 'தமிழன்' 'தமிழ்ப்பெருமான்' 'தமிழ்இறை' 'முத்தமிழோன்' எனவும் 'குறிஞ்சிக்கிழவோன்', 'மலைகிழவோன்' எனவும் தமிழ்ப்பெரியோர் முருகனை அழைத்திருத்தல் காண்க.''

''இயற்கை மணமும் மாறா இளமையும் உடைய ஒன்று எவ்வித மாறுதலும் எய்தாது. அஃது என்றும் ஒரு பெற்றியதாயிலங்கும். மாறுபாடின்றி என்றும் ஒரு பெற்றியதாயிருப்பது கடவுளியல்பாகும். தோற்றம், ஒடுக்கமென்னும் மாறுதல் தத்துவத்துக்குண்டு. மாறுதலில்லாக் கடவுள், தத்துவங்கடந்த தனிப்பொருளென்று அறிவு நூல்கள் முழங்குகின்றன. இதுவே சுந்தழி என்பது இயற்கை மண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுதலில்லாக் கடவுளுக்கேயுண்டு. அழியா அழகில் இயற்கை மணமும், மாறா இளமையும் இருத்தல் போலக் கடவுட்டன்மையுமிருத்தல் காண்க. இவையெலாமுடைய ஒன்றை முருகன் என்று நம்முன்னோர் கொண்டனர்.''

முருகு என்ற சொல்லுக்குக் கழகத்தமிழ் அகராதி பதினெட்டுப் பொருள்களைத் தந்துள்ளது. அவற்றுள் முருகனுக்குப் பொருந்துவன, ''அழகு, இளமை, எழுச்சி, குமரன், திருவிழா, வாசனை வெறியாட்டு (சங்க இலக்கியங்களில் வேலன் என்னும் பூசாரி வெறியாடி முருகனை வேண்டி வழிபடுதல் கூறப்படும்) தெய்வம், வேள்வி'' என்பனவாம்.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (இவரை முருகனின் திருஅவதாரம் என்பர்) முருகனைக் 'கந்தன்' என்ற திருநாமத்தால் அழைத்து அவனைச் சிவனாரின் திருக்குமாரனாகக் கொள்வர்.

'பெற்றும் உகந்தது கந்தனையே'

என்பது அவர் திருவாக்கு.

முருகன் குறிஞ்சி நிலக் கடவுள். குறிஞ்சி நிளத்தவரான வேட்டுவருக்கு அவன் குலதெய்வம். சேக்கிழார் பெரிய புராணத்தின் கண்ணப்ப நாயனார் புராணத்திலே வேடர் தலைவனாகிய நாகன் முருகப் பெருமானை வேண்டி வழிபட்டுத் திண்ணனாரை (கண்ணப்பரை)த் தன் புதல்வராய்ப் பெறுதலாகிய பேறடைந்தான் என்பர்.

பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவருங் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கற் செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பாராய்க்கடன் நெறியில் நிற்பார்.

வாரணச் சேவலோடும் வரிமயிர்க் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாட்டிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை.

வேடர்கள் முருகப்பெருமானுக்குச் கோழிச்சேவல்களையும் மயிற்குழாங்களையும் நேர்த்திக்கடனாய் விடுதல், தோரணங்களாக மணிகளைத் தூக்குதல், கதம்பமாலைகளைத் தூக்குதல், குரவையிட்டு அவன் புகழ்பாடல், பெருவிழா எடுத்தல் அக்கால வழிபாட்டுமுறைகள் என்பது தெரிய வருகிறது.

சங்க நூல்களிலே பத்துப்பாட்டில் முதலாவதாக இடம்பெறுவது திருமுருகாற்றுப்படை. இதன் சிறப்புக் கருதிப் பதினோராந் திருமுறையுள் இது அடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இது சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குப் பிற்பட்டது எனக் கொள்ளப்பட்டாலும், முருகனை வழிபடுவதாகிய பழைய மரபுமுறைகளை இந்நூலிலும் விரிவாகக் காணலாம். சிறுதினையை மலரோடு பரவி, ஆட்டுக்கடாவை அறுத்துப் பலியிட்டு, சேவற்கொடியும் வேலும் நாட்டிப் பெருவிழா எடுத்தல் பற்றித் திருமுருகாற்றுப்படையிலே செய்தியுள்ளது.

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு அயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவிலும்.

பரிபாடல் சங்கநூல்களிலே காலத்தாற் பிற்பட்டது என்பதற்கு அதில் வரும் புராணச் செய்திகளே சான்று பகரும் என்பர். பரிபாடலின் 5 ஆவது பாடலிலே செவ்வேளாகிய முருகனின் தோற்றம் பற்றிய செய்தியுள்ளது.

''நான்முகனாகிய பாகன் செலுத்த வேதக்குதிரைகளைப் பூட்டிய பூமியாகிய தேரையூர்ந்து நாகம் நாணாகவும் மலை வில்லாகவும் கொண்டு திரிபுரங்களை ஓர் அழலம்பினால் அழியும்படி எய்தவனும் அமரர்களுடைய வேள்விப்பாகம் உண்டவனும் பசியகண்ணையுடையவனுமாகிய இறைவன், உமாதேவியாரோடு இன்புறுகையில் உண்டான கருவை இந்திரனுடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பலவாகச் சேதித்தருளினான். அக்கருவை முனிவர்கள் எழுவரும் பெற்றுத் தீயை மூட்டி அதன்கண் அவியொடு பெய்தனர் பின்னர், அதனை அருந்ததி யொழிந்த ஏனையவராகிய கார்த்திகை அறுவரும் உண்டு கருப்பங்கொண்டு சரவணப்பொய்கையில் தாமரைப்பூவாகிய பாயற் கண்ணே நின்னைப் பெற்றாரென்பர்.''

(பரிபாடல் 5, மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ.வே சாமிநாதையரின் முகவுரை)

சைவசித்தாந்தக் கருத்துக்கு முரணும் வகையில், முருகன் அவதாரம் செய்ததாகத் கூறப்படும் இச் செய்தி, கந்தபுராண ஆசிரியரான கச்சியப்பராற் கைவிடப்பட்டுச் சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தீச்சுடராய்த் தோற்றி வாயுவாலும். கனலியாலும் சரவணப்பொய்கையிலே விடப்பட்டு ஆறு குழந்தைகளாய் வடிவெடுத்துக் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் அறுமுகச் செவ்வேள் என்பது மிக அழகாகக் கூறப்பட்டுள்ளமை, இவ்விடத்தில் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

'அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதா'கக் கந்தசுவாமியைக் கொண்டு அவனும் சிவனும் வேறல்லர் என்று கச்சியப்பர் உறுதியாகக் கூறியுள்ளமையும் குறிப்பிடத் தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலின் நமது சத்தி அறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் பேறும் போற்றினர்க் கருள வல்லான்.

முருகன் ஆறுமுகக்கடவுளாய்ப் பன்னிரு திருக்கரங்களிலும் பன்னிரு படைக்கலங்களைத் தரித்தருள்வான் என்பர். எனினும் இப் படைக்கலங்களுள்ளே தலைமையானது வேற்படையே. அது அவனுடைய ஞானசத்தி. அதுவும் முருகனும் பிரிவதில்லை. இருவரும் ஒருவரே. (சிவமும் சத்தியும் போல) என்பதும் கச்சியப்பசிவாசாரியாரின் முடிந்த முடிபாகும்.

அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் ணின்றும் வந்த இயற்கையாற் சத்தி யாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்

இவ்வாறு தமிழர் தம் முன்னைப் பரம்பொருளாயும், சைவசித்தாந்திகளின் பின்னைப் பெருமானாயும் விளங்கிடும் முருகனைக் குமரகுருபரசுவாமிகள், அருணகிரிநாதர் தொடக்கம் இன்றுள்ள பத்திப்பாவாணர் பலரும் போற்றிப் பரவி வழிபடுதல் யாவரும் அறிந்த செய்தியே ...

யாஅ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே.

(பரிபாடல் - 5)

''குமார! சிவனின் மைந்த! உள்ளமாகிய குகையில் எழுந்தருளுபவ! தெய்வத்தாயால் நீ ஓருருவாக்கப்பட்டனை. தேவர்களின் சேனாபதி! தேவராசகுமாரியான தேவசேனையின் தலைவ! வேலெனும் ஞானசக்திதரனே! உலகின் பலவேறு வடிவங்களையும் உருவகிக்கும் பன்னிறத் தூவியுடைய மயில்வாகனா! வேட்டுவன் மகளாம் வள்ளிமணாள! என்னை எக்காலமும் காத்திடுவாய். பத்தரின் துயர்களையும் பரமன் நீ அல்லையோ?'' —சுப்ரமணிய புஜங்கம்.

குமரக்கடவுளை முழுமுதற் பரம்பொருளாய் ஏற்று வழிபடும் சமயமே கௌமாரம். வேதங்கள் சிவனைச் 'சதாசிவோம்' என்று ஒரு முறையே அழைக்கும். சுப்பிரமணியக் கடவுளையோ 'சுப்பிரமணியோம், சுப்பிரமணியோம்' சுப்பிரமணியோம்' என்று மூன்று முறைகள் அழைக்கும். இது அப்பெருமானின் பரம்பொருட்டன்மைக்குச் சான்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரக்கடவுளின் திறம் உரைக்கும் முதனூல் குமாரதந்திரமாகும் அவருக்கு உரிய மந்திரம் 'சரவணபவ' என்பது. ஆறு எழுத்துக்களைக் கொண்டுள்ளமையால் இதற்குச் சடாட்சரம் என்ற பெயர் உண்டு. சரம் என்பது ஒருவகைப்புல். வனம் - காடு, அல்லது ஏரி. பவ என்பது 'அவதரித்தவ' என்று பொருள்படும். தத்துவப்பொருளாக நோக்கினால் ச என்பது தெய்விகத்தையும், ர என்பது ஒளியையும், வ என்பது தூய்மையையும் ந என்பது வீரத்தையும், பவ என்பது இவையாவும் சேர்ந்து 'உதித்தவ' என்ற பொருளையும் குறிப்பனவாம்.

குமரக்கடவுளின் திருவுருவங்கள் பதினாறாகும். அவையாவன,

1. ஞான சத்தி தரன் (ஞானசத்தியாகிய வேலைத் தரித்தவர்)
2. கந்தசுவாமி
3. தேவசேனாபதி
4. சுப்பிரமணியன்
5. கஜவாகனன் (யானையை வாகனமாகக் கொண்டவன்)
6. சரவணபவன்
7. கார்த்திகேயன் (கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பட்டோன்)
8. குமரன் (என்றும் இளையன்)
9. சண்முகன் (ஆறுமுகன்)
10. தாரகாந்தன் (தாரகனுக்கு யமனாய் அமைந்தவன்)
11. சேனாபதி
1 . பிரம சாஸ்தா (பிரஹ்மத்தை உணர்ந்தோன்)
13. வள்ளி கல்யாண சுந்தரன்
14. பாலசுப்ரமணியன் (சுப்ரம் - வேல்)
5. கிரவுஞ்ச பேதனன் (கிரவுஞ்ச மலையைக் கூறாக்கியவன்)
16. சிகி வாகனன் (சிகி - மயில்)

சுப்பிரமணியன் என்ற திருநாமத்திற்கும் தத்துவக்கருத்து உண்டு. சு - ஆனந்தம், பிரஹ்ம - பரம்பொருள், நிய - பரம்பொருளை இடமாகக் கொண்டு தோன்றுவன. அதாவது ஆனந்தமும் பரம்பொருட்டன்மையும் கொண்டு யாவும் தன்னிடத்தே தோன்ற இடமாய் உள்ள பெருமான் என்பது.

குமரக்கடவுள் ஞானத்தை வழங்கும் குருவாகவும், பழனியாண்டியாகிய நிலையில் யோகியாகவும், தேவர்களின் சேனைக்குத் தலைமை தாங்கும் சேனாதிபதியாகவும் விளங்கி அருள்பாலிக்கின்றார். ஞானிகள் யாவரும் அவரைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபாடாற்றுகின்றனர். குழந்தைகளுக்கு அவர் குழந்தைவேலன்; அடியார்களுக்குப் பாலசுப்பிரமணியன்; கவிஞர்க்கும் கலைஞர்க்கும் சண்முகன்; வீரர்களுக்குத் தேவசேனாபதி: ஞானத்தை விழைவோர்க்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிநாதன், இல்லறத்தாருக்கு வள்ளி தெய்வயானை சமேத கந்தசுவாமி; ஞானிகளுக்குப் பழனியாண்டவர். இவ்வாறு எவரெவர் எவ்வெவற்றை விரும்புகின்றனரோ அவ்வவருக்கு அவ்வவ்வுருவிற் சென்று அருள் பொழியும் கருணை வள்ளல் இம் முருகப்பெருமானே யாவார்.

தமிழ்நாட்டிலே திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகிய ஆறு தலங்களும் அவனுக்கு ஆறு படைவீடுகள். சூரனை வதைசெய்ய எழுந்தருளிய பொழுது இந்த ஆறு இடங்களிலும் பாசறை அமைத்துத் தம் படைகளோடு முருகன் தங்கினார் என்பர்.

குமரன் ஒருவரே ஆண்மகன். ஏனெனில் மற்றவர் பெண்வயிற்றிலே தோன்ற அவர் ஆணாகிய சிவனது நெற்றிக் கட்பொறியிலிருந்து உதித்தார். மற்றவர்கள் காமச் சேர்க்கையிலே தோன்ற முருகனோ மன்மதனை எரித்த காம அழிவிலிருந்து அவதரித்தார். மாரன் என்பது மன்மதனைக் குறிக்கும். மன்மதனின் அழிவில் தோன்றியவர். காமத்தைக் கடந்தவர் என்ற கருத்துக்களில் அவருக்குக் குமாரன் என்ற திருநாமம் அமைந்துள்ளது.

முருகனுக்கு வேல் ஞானசத்தி, தெய்வயானையம்மை கிரியா சத்தி; வள்ளியம்மை இச்சாசத்தி; ஐம்புலன்களாகிய வேடர்களிடையே வாழ்ந்த வள்ளியென்னும் ஆன்மாவைத் திருவருள் வடிவாகிய குருவாய் எழுந்தருளி முருகன் தம்பாற் சேர்த்துக் கொண்டார் என்று வள்ளி திருமணம் தத்துவக் கருத்துக்கு இடமளிக்கின்றது.

கந்தசஷ்டி, சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை), கார்த்திகை ஆகியன முருகனுக்குரிய விரதங்களாகும். தமிழ் நாட்டில் முருகவழிபாட்டில் நிலைநின்றோரில் நக்கீரர், அருணகிரிநாதர், குமரகுருபர சுவாமிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

இலங்கையில் முருகவழிபாடு:

1955 ஆம் ஆண்டிலே புத்தளம் மாவட்டத்திலே நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாய்த் திருநெல்வேலி, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களிலே கிடைத்த ஈமத்தாழிகளும் சேவற்சிலை முதலியனவும் அங்குக் கண்டெடுக்கப்பட்டன. எனவே பெருங்கற்பண்பாட்டுப்பிரதேசமாய் இலங்கையும் விளங்கியது என்பதும், இங்கு அக்காலத்திலேயே முருகவழிபாடு நிலவியது என்பதும் மறுக்கமுடியாத உண்மைகளாயின. அன்றியும் இத்தகைய சின்னங்கள் பொன்பரிப்பு (மேற்குக்கரையோரம்), வளவகங்கைப் பள்ளத்தாக்கு (தென்கரையோரம் கதிரைவெளி (கீழ்க்கரையோரம்), வல்லிபுரம், வரணி (வடகரையோரம்) மாதோட்டம் ஆகிய இடங்களிலும் காணப்பட்டமை கொண்டு முருகவழிபாடு இலங்கை முழுவதும் மிகத்தொன்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலேயே நிலவியது என்பது தெளிவாகத் தெரியவருகின்றது.

**கதிர்காமமும் இலங்கையின் பண்டைய மன்னரும்:**

இலங்கையின் முதற்சிங்கள மன்னன் விஜயன். இவன் மனைவியான குவேனி என்ற இயக்கி இவனைக் கொலை செய்ய முற்பட்டபொழுது கதிர்காமத்துறை தெய்வமான கந்த குமாரன் விஜயனைக் காப்பாற்றியருளினான் என்ற செய்தி 'இராஜவலிய என்ற இலங்கை வரலாற்றிலக்கிய நூலிலே காணப்படுகின்றது. துட்டகாமினி, தன் பகைவனும் தமிழ் மன்னனுமான எல்லாளனை வென்றால் நிறைவேற்றுவதாகக் குறித்த நேர்த்திக்கடனை எல்லாளனைக் கொன்று வெற்றி பெற்ற பொழுது நிறைவேற்றிக் கதிர்காமத்துக் கந்தனைத் திருப்தி செய்ததாய்க் 'கந்தஉபத' (கந்தனின் தோற்றம்) என்ற சிங்களநூல் கூறுவதும் குறிப்பிடத் தக்கதே.

**முருகனும் வேடரும்:**

முருகனுக்கும் வேட்டுவர்க்கும் எப்பொழுதும் தொடர்பு உண்டு. குறிஞ்சி நிலத்து மக்கள் வேடர்களே. வேடரிடமிருந்து அவன் பெற்ற மனையாட்டியே வள்ளியம்மை, வள்ளி என்பது தூய தமிழ்ப் பெயர். கதிர்காமத்தில் முருகனோடு எழுந்தருளியுள்ள சத்திகளில் ஒருத்தி வள்ளியம்மா என்றே அழைக்கப்படுகின்றாள். ஆக, கதிர்காமத்திற்கும் தமிழர்க்கும் உள்ள பழமையான தொடர்பும் புலனாகிறது. இன்றும் வேட்டுவ பரம்பரையினரான கப்புறாளைகளே கதிர்காமக் கோயிலின் பூசகராயும் அறங்காவலராயும் விளங்குவது. வேடர்க்கும் கதிர்காமத்துக் கந்தனுக்கும் உரிய தொடர்பினை வெளிப்படுத்துகின்றது.

**முருகனை வழிபடும் முறைமைகள் :**

வைதிக மரபு தமிழரிடையே வந்து கலந்த பொழுது முருகன் சுப்பிரமணியனாகி அவன் சிவபெருமானின் திருப்புதல்வனாகவும் கொள்ளப்படலானான். வடமொழிப் புராணக்கதைகள் அவனைப் படிப்படியாக ஆரியத் தெய்வமாக்கி விட்டன. இன்று முருகனைக் கந்தசுவாமி, சுப்பிரமணியன், சரவணபவன், குமாரன் என்ற வடமொழிப் பெயர்களால் அழைக்கும் மரபும் அவனுக்குரிய கோயில் அமைப்பு, பூசைகள் என்பன குமாரதந்திர ஆகமமுறையிலே நிகழ்வதும் வழக்கமாய் விட்டன. ஆகமமரபு வழிப்பட்ட முருகவழிபாடு தமிழகத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்து வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கும் குமாரதந்திர வழிபாட்டு முறை பரவலாய்க் காணட்படுவதொன்றாயினும் இங்குப் பிரசித்தி பெற்றுள்ள முருகவழிபாடு, பழமையான தமிழ் மரபு முறையாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கதிர்காமம், செல்வச் சந்நிதி, மண்டூர், திருக்கோயில் ஆகிய பிரசித்திபெற்ற முருகத் தலங்களெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் வாயைத் துணியாற்கட்டி மௌன பூசை செய்யும் முறையே காணப்படுகிறது. இதனை நோக்கும் பொழுது,

'சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
என்னும் அடிகளும்

'ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் றையிய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்
......................................................
... ...........................................
வேண்டினர் வேவண்டியாங் கெய்தினர் வழிபட'

என்னும் அடிகளும் திருமுருகாற்றுப் படையினின்றும் எமது நினைவிற்கு வராது போகா.

இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது முருகவழிபாடு மக்களிடையே பிரசித்தி பெற்றுள்ளமைக்கு அதன் நெகிழ்ச்சித் தன்மையும் ஒரு காரணம் எனக் கொள்ளலாம். ''செந்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன்'' முருகன் அன்றோ? அன்றியும் இலங்கையில் முருக வழிபாடு எவ்வளவு பழமையானது என்பதனை அறிந்து கொள்ளவும் பழமை வாய்ந்த முருகன் ஆலயங்களில் நிலவும் வழிபாட்டு முறைகள் எமக்குத் தக்க ஆதாரங்களாகின்றன.

காங்கேசன்துறை, கந்தரோடை, கந்தவனக்கடவை, குமாரபுரம் ஆகியன வடக்கிலங்கையில் முருகன் பெயரோடு சார்ந்த பழம்பெரும் ஊர்களாயுள்ளன. கிழக்கிலங்கையிலே மண்டூர், திருக்கோயில், வெருகல் என்பன இத்தகைய பழமை வாய்ந்த முருகத்தலங்களாம். திருக்கோயிலுக்குக் கந்த பாணந்துறை (கந்தனது அம்புத்துறை) என்றதோர் பெயரும் உண்டு என்பர். இவ்விடங்களின் மகிமையை எடுத்தியம்பும் வகையிலும் முருகனது வழிபாட்டினைப் புலப்படுத்தும் வகையிலும் பல கல்வெட்டுக்கள், மான்மியங்கள், பிரபந்தங்கள் என்பன பெறப்பட்டுள்ளன'

**முருகன் ஆலயங்களின் மீது பாடப்பெற்ற பத்திப்பனுவல்கள்**

முருகனின் அருள்பெற்றுக் கடல்மடை திறந்தாற் போலச் சந்த இசைப் பாடல்களாய்த் திருப்புகழை யாத்தருளியவர் அருணகிரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வாழ்ந்த காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு. தமிழகம் எங்கணு முள்ள முருகத்தலங்கள் மீது திருப்புகழ் மாலை பாடிச் சாத்திய இப்பெருந்தகை இலங்கையிலே கதிர்காமக் கந்தன்மீது பதின்மூன்று திருப்பாடல்களும் திருக்கோணமலை முருகன்மீது ஒரு திருப்பாடலும் யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தன் மீது ஒரு திருப்பாடலும் பாடி யுள்ளார். இவை முருக அடியார்களின் பாராயணத்திலே இடம் பெறுவனவாகும். கி.பி. 1478 தொடக்கம் 1515 வரை நல்லூரிலி ருந்து யாழ்ப்பாண ராச்சியத்தினை ஆண்ட பரராசசேகரன் காலத் திலே கதிரமலைப்பள்ளுப் பாடப்பட்டது. பள்ளுப் பிரபந்த வரிசை யிலே இதுவே முதலிலே தோன்றியது என ஆய்வாளர் சிலர் உரைப் பர். இதனைப் பாடிய ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிற் புகழ் வாய்ந்த முருகத் தலங்களான கதிர்காமம், மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி நல்லூர், மண்டூர், வெருகல், திருக்கோயில் ஆகியவற்றில் எழுந்தருளி யுள்ள பெருமான்மீது எண்ணுக் கணக்கற்ற பிரபந்தங்களும் தனிப் பாடல்களும் புலவர்களாலே பாடப்பட்டுள்ளன. இன்றும் இப்பத்திப் பாடல் மரபு தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. மேற்குறிந்த ஆல யங்களில் நிகழும் மகோற்சவங்களையொட்டிச் செய்திப் பத்திரிகைகள் சிறப்பிதழ் வெளியிடுவதும் அவ்விதழ்களிலே இவ்வாலய மகிமைகள் பற்றிய கட்டுரைகளும் கவிதைகளும் வெளியாவதும் வழக்கமாயிருந்து வருகின்றன. இவை தவிர்ந்த சிறிய முருகனாலயங்களுக்கும் பிரபந் தங்களும் பத்திப்பாடல்களும் உள.

கந்தபுராண கலாசாரம்:

இலங்கையிலே சிறப்பாக யாழ்ப்பாணத்திலே கந்தபுராணம் சைவ மக்களிடையே பெரும்பிரசித்தி அடைந்துள்ளது. முருகனாலயங்களிலே மட்டுமன்றிச் சிவாலயங்களிலும் கந்தபுராணம் கந்தசஷ்டி விரதகா லங்களிலும், பிறவிரதகாலங்களிலும் படிக்கப்பட்டுப் பொருள் கூறும் வழக்கமும் நிலவி வருகின்றது. இவ்வாறு படித்துப் பொருள் கூறு வதைப் புராணபடனம் என்பர். இந்நாட்டிற்கே உரியதான இம்மு றைமை பற்றி இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது கட்டுரை ஒன்றிலே பின்வருமாறு கூறுகிறார்கள்.

''சந்நிதி விரோதமின்றி ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன் சொல்லுகின்ற இந்த முறை, யாழ்ப்பாணத்துக்கே உரியதொரு சிறப்பு முறை. இந்தமுறை யார் எப்பொழுது வகுத்தமைத்தது என்பது ஆராயத்தக்கது.''

''கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் கந்தபுராணம் பாடியகாலத்திலே தானே, கந்தபுராண படனம் யாழ்ப்பாணத்தில் தொடங்கி விட்டது. அப்பொழுதுதானே தனிச்சிறப்பு முறையான புராணபடன முறையும் இங்கே அமைந்து விட்டது போலும் என்று எண்ண இடமுண்டு''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று திருத்தொண்டர் பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியனவும் புராணபடனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற போதிலும், புராணபடனம் என்றவுடனே கந்தபுராணமே சைவர்கள் நினைவில் வரும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அவர்தம் மருகர் வித்துவ சிரோமணி, ந. ச. பொன்னம்பலப்பிள்ளை முதலியோர் கந்தபுராண படனத்தை அத்துணை மகிமைப்படுத்தி விட்டனர். இப்புராணபடனங் காரணமாகப் படித்தறியா மிக ஏழைப்பாமரருக்கும் முருகனின் மகிமையை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கந்தபுராணத்தைப் பதிப்பித்தார். அவர் வசன உருவிலே கந்தபுராணத்தை எழுதத் தொடங்கி, அஃது அவரின் மாணாக்கரும் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் முகாமையாளருமாயிருந்த ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்களாலே முற்றுவிக்கப்பட்டு நூலாய் வெளிவந்தது. அண்மையில் இதன் இரண்டாம் பதிப்பு ஆறுமுகநாவலர் சபையினாலே வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. நாவலர் அவர்களின் நன்மாணாக்கரான காசிவாசி செந்திநாதையர் அவர்கள் கந்தபுராணசாரத்தைத் திரட்டிக் 'கந்தபுராண நவநீதம்' என்றதோர் நூல் எழுதினார்கள். பின்வந்த சைவப்பெரியார் ச. சிவபாதசுந்தரனார் அவர்களும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களும் கந்தபுராண உட்பொருளை விளக்கி நூல்கள் யாத்துள்ளார்கள். தென்புலோலியூர் மகாவித்துவான் கதிரைவேற்பிள்ளை எழுதிய 'சுப்பிரமணிய பராக்கிரமம்' என்ற நூலும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நூல்கள் யாழ்ப்பாணத்திற் கந்தபுராணம் பெற்றுள்ள முதன்மையைப் புலப்படுத்துகின்றன.

கந்தபுராணம் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளை உருவகவாயிலாக எடுத்தியம்பும் அதிமதுரத் திவ்விய நூல் என்பதால், அதனைக்கற்று அது காட்டும் நெறிமுறையை அணுவும் பிசகாது ஒழுகும் சான்றோர்கள் பலரை யாழ்ப்பாணம் உடைத்தாதலின், இங்கு நிலவுவது 'கந்தபுராண கலாசாரமே' என்று பண்டிதமணி அவர்கள் விதந்துரைத்துள்ளார்கள்.

**முருகவழிபாட்டில் இடம்பெறும் சில முக்கிய அம்சங்கள்:**

எத்தலங்களிலும் இல்லாத அளவு சிறப்பாக இலங்கையிலே, முருகத்தலங்களிலே மகோற்சவங்கள் நிகழ்வது வழக்கம். பல்லாயிரக் கணக்கான முருகனடியார்கள் அக்காலங்களிலே குறித்த ஆலயத்திற்கு வந்து பத்திபரவசராய் முருகப்பெருமானை வள்ளி தெய்வானை சமேதராய் வழிபட்டு உய்வர். தமிழ்ச் சைவர் மட்டுமன்றிப் பௌத்தர்களான சிங்கள மக்களும் இவ்விழாக்களிற் கலந்து வழிபாடு ஆற்றுவது உண்டு. (கதிர்காமம் இலங்கையர்க்கு மட்டுமன்றித் தமிழகத்துச் சைவருக்கும் யாத்திரைத்தலம்). மகோற்சவத்திற்குரிய தலத்தின் சூழல்எங்கும் செப, தவ, விரதாதிகளின் புனிதம் புலப்பட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேயிருக்கும். சுவாமி திருவுலா வருகையில், பஜனைக் குழுக் கள் பின்தொடர்ந்து கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுறைகளை ஓதிச் செல்லும். அங்கப் பிரதட்சணம், அடியழித்து வணங்கல், காவடி எடுத்து ஆடல், கர்ப்பூரச் சட்டி சுமந்து செல்லல், கலைகொண்டு ஆடல் ஆகிய வழிபாடுகளை அடியார்கள் நிகழ்த்துவர். தீக்குளிப்பும் கதிர்காமம் முதலிய தலங்களில் நிகழ்வதுண்டு. செதில் குத்திக்காவடி, ஆட்டக்காவடி, பாட்டுக்காவடி. என்பவற்றோடு தூக்குக்காவடி, துலாக்காவடி, பறவைக்காவடி, முதலான பயங்கர நேர்த்திக்கடன் களை நிறைவேற்றும் வன்றொண்டர்களுக்கும் குறைவிராது. ஆல யங்களின் சூழல்களில் மட்டுமன்றித் தொலை தூரங்களிலும் தண் ணீர்ப்பந்தல் வைத்து வருகின்ற அடியார்களுக்கு நீர்த்தானம், அன்ன தானம் ஆகியனவும் இடம்பெறும். மதுமாமிச பட்சணம் இக்காலத் திற் பலரால் கைவிடப்பட்டு விரதம் அனுட்டிக்கப்படுவதும் குறிப் பிடத்தக்கதே. ''முருகா முருகா'' என்ற கோஷம் இடைவிடாது ஆலய வீதிகளிலே ஒலிப்பது பத்திக்கனிவினையூட்டும் நிகழ்ச்சியாகும்.

முருகனுக்குரிய கார்த்திகை நட்சத்திரங்களின்போது மாவிளக் கிட்டு வழிபாடு நிகழ்த்துவர். கந்தசஷ்டி ஆறுதினங்களிலும் சங்கற்பம் செய்துகொண்டு முருகனாலயங்களிலேயே தங்கியிருந்து உபவாசம் மேற்கொண்டு தமது ஆன்மாவைப் புனிதஞ் செய்வோரும், இட்ட பூர்த்தியை எதிர்நோக்குவோரும் இலங்கையிலே எண்ணிலர். கலியுக வரதனாகிய முருகனையே சரணாகதியடைந்து நலந்தீங்கில் அவனை மறவாதிருக்கும் சைவமக்களே இந்நாட்டிற் பெரும்பான்மையினர் என்று கூறின் அது மிகையன்று.

முருகன் திருநாமங்கள் பெறும் இடம்:

இன்று பெரும்பாலான மக்கள் கருத்துணர்வோ குறிக்கோளோ இன்றி ஓசைச்சிறப்பினை மட்டுமே நோக்கித் தம் பிள்ளைகளுக்குப் பெயர்கள் வைப்பதை நாம் பரவலாகக் காண்கிறோம். இவர்களை ''நீங்கள் வைத்துள்ள பெயரின் பொருள் உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டால் அநேகமாகப் பொருள் தெரியாது விழிப்பதும் அநு பவ உண்மையாகும்.

ஆனால் எம்முன்னோர், தம் பிள்ளைகளுக்கு இறைவன், இறைவி யோடு தொடர்புள்ள திருநாமங்களையே சூட்டி வந்தனர். இவ்வாறு சூட்டுவதற்கு உளவியல் ரீதியான காரணமும் இருந்தது. பெற்றோரும் மற்றோரும் பிள்ளையின் பெயரைச் சுட்டி அழைப்பதால் அடிக்கடி இறைநாமத்தைக் கூறும் புண்ணியம் அவர்களுக்குக் கிட்டுகிறது. பெயர் சூட்டப்பட்டவரும் தமது பெயரை எழுதும்போது அந்தப் புண்ணி யத்தைப் பெறுகிறார். பெயருக்கேற்ற உத்தமராய் வாழ முயல்வதும் நிகழல் கூடும். அன்றியும், தம் பெயர் மூலம் தமது சமயத்திலே ஈடுபாடும் குறித்த தெய்வத்திலே பத்தியும் வளரவும் வாய்ப்பு உண் டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலே சைவமக்கள் சூட்டிக் கொண்டுள்ள பெயர்களை ஆராய்கையில் இப்பெயர்களிற் பெரும்பாலன, முருகனைச் சார்ந்தவையாகவோ அவனோடு தொடர்புடையனவற்றைச் சார்ந்தவையாகவோ விளங்கல் காணலாம். இங்கு இத்தகைய பெயர்கள் சிலவற்றை வகை செய்து காட்டுகின்றோம். (இது முழுமையான பட்டியல் அன்று என்பதையும் சுட்டிக்காட்ட விழைகின்றோம்.)

முருகனின் திருநாமங்கள் பெயர்களாய் அமைந்துள்ளவகை:

ஆண்கள்

முற்காலம்;

1. சுப்பிரமணியம், கந்தப்பிள்ளை, கந்தப்பு, கந்தையா, முருகையா, முத்தையா, முத்துவேற்பிள்ளை, சுப்பையா, ஆறுமுகம், சண்முகம், வேலாயுதம், வேலாயுதபிள்ளை, முத்துச்சாமி, குமாரசாமி முத்துக்குமாரசாமி, கந்தசாமி, பழனிச்சாமி, வேலுச்சாமி, சரவணமுத்து, சிவகுரு, குமரகுரு, கார்த்திகேசு, கதிர்காமு, கதிர்காமத்தம்பி, மயில்வாகனம், சூரசங்காரம் இன்ன பிற.

இக்காலகட்டத்தில் முருகன், வேலன், கந்தன் முதலான திருநாமங்களைத் தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கப்பட்டிருந்த மக்களே தமக்குரிய பெயர்களாகக் கொண்டிருந்தமையையும் உயர்சாதியார் எனத் தம்மைக் கருதியோரின் பெயர்கள் பெரும்பாலும் அஃறிணை முடிவு கொண்டுள்ளமையையும் அவதானிக்கலாம்.

இடைக்காலம்:

2. இக்காலத்தில் அஃறிணை முடிவுகளுக்குப் பதில் 'அன்' ஈறு பெறப் பெயர்கள் மாற்றப்படுகின்றன. சண்முகம், ஆறுமுகம் என்பவற்றோடு ராசா, சாமி, நாதன் முதலான விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. உ-ம்: குருநாதன், சிவகுருநாதன், சண்முகராசா (ராசன்) ஆறுமுகராசா, சண்முகநாதன், ஆறுமுகநாதன், மயில்வாகனன், ஆறுமுகன், வேலாயுதன், கதிர்காமநாதன், கதிரைமலைநாதன், செந்தில்நாதன், அருணகிரிநாதன், சிவகுருநாதன், குகநாதன், குகதாசன், மயூரநாதன், குருபரன், வடிவேல், முத்துவேல், சித்திரவேல் (வேல் என்பது வேலு எனவும் அமையும்), சூரசங்காரன், நல்லைநாதன், திருச்செந்தூரன், கார்த்திகேயன், கதிரேசன் இன்ன பிற.

இக்காலம்:

3. (அ) சிறிய சுருக்கமான பெயர்களே இக்கால நாகரிகம். இந்நாகரிகத்தினிடையேயும் முருகனின் பெயர்களே பிரசித்தி பெற்றிருத்தல் காணலாம். உ-ம்: குகன், குமரன், கந்தன், சரவணன், முருகன், ஸ்ரீ முருகன், செந்தூரன், விசாகன், மயூரன் இன்ன பிற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால நீண்ட பெயர்கள்.

(ஆ) சரவணபவன், செந்தில்நாதன் செந்திற்குமரன், சேவற் கொடியோன், திருமால் மருகன், சிவகுமாரன் (இப்பெயர் விநாயகரையும் குறிக்கும்) செந்தூர்ச்செல்வன், செந்திற் குமரன், நல்லைக் குமரன் இன்ன பிற,

பெண்கள்

முற்காலம்

வள்ளிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, வள்ளி, தெய்வி .

இடைக்காலம்:

வள்ளிநாயகி, தேவநாயகி, தெய்வநாயகி,

இக்காலம்:

ஸ்ரீவள்ளி, ஸ்ரீதெய்வி, வள்ளி, தெய்வி.

இவற்றிலிருந்து இந்நாட்டில் முருகபத்தியின் சிறப்பினை ஓரளவு அறிந்து கொள்ளலாம். அன்றியும்,

''காலம் என்பது கறங்குபோற் கழன்று

கீழது மேலாய் மேலது கீழாய்

மாறிடுந் தோற்றம் என்பது மறந்தனை''

என்ற மனோன்மணிய அடிகளின் உண்மையையும் உணர்ந்து கொள்ளலாம்.

இதுவரை கூறியவற்றிலிருந்து இலங்கைச் சைவமக்களிடையே பெரும்பாலும் முருக வழிபாடே நிகழ்ந்து வருகின்றது, என்பதற்கு ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌரம்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

(சிலப்பதிகாரம் - மங்கல வாழ்த்துப்பாடல்)

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு

(திருமுருகாற்றுப்படை 1-2)

செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத்
தேர்கின்றோம் - அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக
என்பதோர் - நல்ல
மங்களம் வாய்ந்த சுருதி மொழி.

(- பாரதி)

சூரியன் உலக உயிர்களுக்கு வேண்டிய உணவுகளை ஆக்கியும் உண்பித்தும் ஒளிதந்தும் அருள்புரிவோன். அவனை முழுமுதற் றெய்வமாக வழிபடும் சமயமே சௌரம். சூரியவழிபாடு மிகவும் தொன்மையானது, இந்தியா, இலங்கை முதலாம் நாடுகளிலே வாழும் சைவ மக்கள் மட்டுமன்றி, உலகநாடுகள் பலவற்றிலும் பண்டிருந்தே இவ்வழிபாடு நிலவி வருகிறது என்று ஆராய்ச்சியாளர் உரைப்பர்.

சூரியவழிபாடு முதன் முதலிலே பாரசீகத்திற் இன்றைய ஈரான்) தொடங்கியது என்பதும், பாரசீகர் சூரியனை 'ஒளிக்கடவுள்' என்னும் பொருள் பயக்கும் 'மித்ர' (ன்) என்ற பெயரால் அழைத்தனர் என்றும் அறிகின்றோம். கி.மு. முதலாம் நூற்றாண்டளவில், உரோம நாட்டில் சூரியவழிபாடு தொடங்கி, கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை அங்குச் செல்வாக்குப் பெற்றது என்பது அறிஞர் முடிபு. உரோமாபுரியிற் சூரியனுக்குக் கட்டப்பட்ட கோயில் ஒன்று 1954 இல் இலண்டன் மாநகரில் நிகழ்ந்த அகழ்வாராய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட[illegible]லாய்வாளர் நடனகாசிநாதன் கூறுகின்றார். கோயிலில் [illegible]ச் சிலையும் கண்டெடுக்கப்பட்டது. [illegible] கிறிஸ்து நாதரின் பிறந்தநாள் விழாக் கொண்டாடப்படுமுன் [illegible] சூரிய விழாவே கொண்டாடப்பட்டு வந்த[illegible] பிட்டுள்ளார். யப்பானின் அரசுச் சின்னம் சூரிய[illegible]

மத்திய ஆசிய நாடுகளிற் கிடைத்துள்ள, புத்தசமயம் சார்ந்த [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. ஹூணர் எனப்படும் அரச பரம்பரையினர் தமக்குச் சூரியனும் சந்திரனும் ஆற்றலை வழங்குவதாக நம்பினர். கி.பி. 8ஆம் 9ஆம் நூற்றாண்டுகளில் மத்திய ஆசியாவில் ஆட்சிபுரிந்த 'மணிசேயன்' (Manichacon) என்ற அரசகுலத்தினரும் தங்கள் ஆட்சி வலிமைக்குச் சூரிய, சந்திரர்களே காரணர் என்று நம்பினர்.

இன்றும் பொண்டுகிஸ்தான் பௌத்த ஆலயச்சுவர்களிற் சூரியனை ஆணாகவும் சந்திரனைப் பெண்ணாகவும் வரைந்த அழகிய ஓவியங்கள் காணப்படுகின்றன என்பர். இவை கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குரியவை. கும்துராவுக்கு அண்மையிலுள்ள மிக் ஒய்ங் குகையில், சூரியன் இரண்டு சக்கரத் தேரில் பவனி வரும் காட்சி வரையப்பட்டுள்ளதாகவும் நடனகாசிநாதன் குறிப்பிடுகின்றார். இவை யாவும் சூரியவழிபாட்டின் உலகளாவிய இயல்புக்குச் சான்றுகள்.

இந்தியாவைப் பொறுத்தவரையிற் சூரியன் வேதங்களிலே குறிப்பிடத்தக்க தெய்வங்களுள் ஒருவனாகக் கொள்ளப்பட்டுள்ளான். வளங்களை அளிப்பவளும், தெய்வங்கள் யாவிற்கும் தாயாகக் கொள்ளப்படுபவளும் அதிதி என்ற பெண்தெய்வமாவாள். இவளுக்கு மக்கள் பன்னிருவர் எனக் கூறப்படுகிறது. அதிதியின் மக்கள் என்பதால் இவர்கள் ஆதித்தியர் எனப்பட்டனர். தாத்ரி, மித்ரா, ஆர்யமன், (உருத்திரன், வருணன், சூரியன், பர்கா, சிவஸ்வான், பூஷண், சவித்ரி திவஷ்ட்ரி, விஷ்ணு என்போர் அதிதியின் மக்கள். எனினும் ஆதித்தியன் என்பது சூரியனுக்கே சிறப்புப் பெயராய் வழங்கி வருகின்றது, குஷாண அரசனான வீமகட்பீசஸ் தொடக்கம் இந்திய மன்னர்கள் பலரும் தம்முடைய காசுகளிலே சூரியனின் உருவினைப் பொறித்துள்ளனர்என்று நடனகாசிநாதன்கூறுகிறார்.இராமபிரான்சூரியகுலத்தினன் என வான்மீகி இராமாயாணம் உரைக்கும். சோழமன்னர் சூரியகுலத்தினர் எனத் தம்மை அழைத்தனர்.

வேதகாலத்தில் தெய்வங்களை மூவகையாகப் பிரித்தனர். விண்ணில் உறைபவை, இடைவெளியில் வாழ்பவை, மண்ணில் விளங்குபவை என்பனவே அந்த மூன்றுவகைத் தெய்வங்கள். விண்ணுறை தெய்வத்திற்கு உதாரணம் சூரியன். இடைவெளிவாழ் தெய்வத்திற்கு உதாரணம் வாயு. மண்ணில்வாழ் தெய்வத்திற்கு உதாரணம் அக்கினி. (அக்கினி) தெய்வங்களுக்கான அவிர்ப்பாகங்களை அவ்வத்தெய்வங்களுக்குக் கொண்டு சென்று வழங்கும் தெய்வம் என்பதால் அது விண்ணுக்கும் செல்ல வல்லது.) விண்ணுறை தெய்வக் கூட்டத்திற்குச் சூரியனே தலைவன் என்று வேதங்கள் கொண்டன. இருக்குவேதத்திற் சூரியனைத் தோத்திரிக்கும் பாடல்கள் பல உள்ளன.

சூரியன் புற இருளை மட்டும் அழிப்பவன் அல்லன். அகவிருளான அறியாமை, கவலை ஆகியவற்றையும் மாய்த்திட வல்லவன் என்று வேதகாலத்தவர் நம்பினர்.

8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சூரியபகவானே உனது ஒளி உலகம் யாவிற்கும் பயன்படுகின்றது. உதித்து மேலெழுந்து சுவர்க்கத்தையும் நிறைத்திடும உனது ஒளியினால் என்னுடைய உள்ளக் கவலைகளையும் உடற்றளர்வுகளையும் போக்குவாயாக'' என்றும் ''சவித்ருவே எல்லாத் தீமைகளையும் அழித்து நன்மைகள் யாவும் அருள்வாயாக'' என்றும் இருக்குவேதப் பாசுரங்களில் சூரியன் வேண்டப்படுகிறான்.

பிருகதாரணியக உபநிடதத்திலே உயிர்ச்சுவாசத்திலே சூரியன் உதித்துப் பிராணனில் மறைகின்றான் என்றும் அவன் ஒளியாகிய தேனைச் சுவைபட அளிப்போன் என்றும் பல செய்திகள் வருகின்றன. சாந்தோக்கிய உபநிடதத்தில் சூரியனாகிய புருஷனின் உரோமம் தொடக்கம் உடலின் ஒவ்வோருறுப்பும் - விரல்நுனிவரை - தங்கத் தாலானதே என்று கூறப்படுகின்றது. காயத்திரி மந்திரங்களிற் சூரியன் இடம் பெறுவது குறிப்பிடத் தக்கது.

மெய்யியற் கோட்பாட்டில் இருவழிகள் கூறப்படும். ஒன்று தேவவழி. மற்றது பிதுருவழி. தேவவழி தேவாயனம் என்றும் பிதுருவழி பிதுராயனம் என்றும் கொள்ளலாம். இவற்றுள் தேவவழி ஒளி நிறைந்தது, முத்தியை அருள்வது. இந்த வழியினைக் காட்ட வல்லவன் சூரியனே என்பது அறிவாளர் கொண்ட முடிபு.

சூரியனைப் பரம்பொருளாக ஏற்றுக்கொண்டு அவன் பெருமை பேசும் உபநிடதங்கள் இரண்டு என்று கலாநிதி வி. இராகவன் கூறுவர். அவை சவித்திரி உபநிடதம், சூரியதபினி உபநிடதம் என்பன. இவை வெளியிடப்படாத உபநிடதங்கள் என்கிறார் இராகவன். சவித்திரி உபநிடதத்திற் சூரியனைப் போற்றி வழிபடும் காயத்திரி உபாசனை பற்றிப் பேசப்படுவதாகவும், சூரியதபினி உபநிடதத்தில் சூரியமந்திரமாகிய அட்டாட்சரம், சூரியபூசை முறைகள், சூரியனுக்குரிய யந்திரம், பன்னிரு ஆதித்தியர்கள் பற்றிய செய்திகள் விரிவாகத் தரப்படுவதாகவும் அவர் விளக்குகின்றார்.

சூரியனுடைய திருவுருவ அமைப்புப் பற்றி, 'விசுவகர்மசில்ப' என்ற சிற்பசாஸ்திர நூலிலே தரப்பட்டுள்ள செய்தியாக நடனகாசிநாதன் கூறுவன இவை.

''சூரியன் ஒற்றைச் சக்கர இரதத்தில், ஏழு குதிரைகள் இழுத்துச் செல்லும் நிலையில், இருகைகளிலும் தாமரை ஏந்தியவராய், போர் ஆடை அணிந்து, ஒளிவட்டம் தமக்குப் பின்புறத்தில் மிளிர, மின்னும் பொன்னாபரணங்களோடு, வலதுபக்கம் நிக்ஷுபாவையையும், இடது பக்கம் ராஜ்ஜியையும் கொண்டு பவனி வருகிறார். அவருடைய ரதம் 'மகரத்வஜா' என அழைக்கப்படுகின்றது. தண்டா, மற்றும் ஸ்கந்தர் ரதத்தின் முன்புறம் நிற்கின்றனர். வார்ச்சா என்பவர் தாமரை மலராசனத்தில் ஒரு குதிரைமீது அமர்ந்துள்ளார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனுடைய இரதசாரதி அருணன் என்று கூறுவர். அருணன் என்ற பெயர் சூரியனுக்கும் வழங்கும். உஷா, சாயா என்ற இருவரும் சூரியனுடைய பாரியர் என்பர். சிவபெருமானுடைய முக்கண்களாகச் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களும் விளங்குகின்றன எனச் சைவசமயிகள் கொள்வர். விநாயகரின் அரைஞாணாக வாசுகி என்ற பாம்பும், அதன் நடுவிலே பதித்த வைரமணியாகச் சூரியனும் விளங்குவதாகக் கொள்வதுண்டு.

சூரியவழிபாடு தோன்றிய வகைபற்றிச் சைவ அறிஞர் சிலர் கூறுவது பின்வருமாறு:

" ... சிவன் விஸ்வரூபவடிவம் எடுத்துக் காலருத்திரராக உலகையழிப்பதும் தோற்றுவிப்பதுமான செயல் நடைபெறும் இடைவெளியில், உலக அழிவுக்கு உதவும் காலாக்கினியாகவும் உலகம் தோன்றியபின் உயிர்களைக் காப்பதற்கு உதவும் உயிர்ச்சக்தியாகவும் எண்ணிச் சூரியனை வழிபட்டிருக்கலாம்". சிவபெருமானையும் விட்டுணுவையும் முறையே சிவசூரியமூர்த்தி என்றும் சூரியநாரயணமூர்த்தி என்றும் அழைப்பதிலிருந்து சூரியனின் மகிமை புலனாகிறது.

சிவாலயங்களில் நவக்கிரகவழிபாடு இடம் பெறுகின்றது. நவக்கிரகங்களில் முதன்மையான கிரகம் சூரியன். சூரியனுக்கென அமைந்த தனிக்கோயில்களிலே, கிழக்கில் சந்திரன், தென்கிழக்கில் பௌமா, தெற்கில் பிரஜாபதி, தென்மேற்கில் இராகு, மேற்கில் சுக்கிரன், வடமேற்கில் கேது, வடக்கில் புதன், வடகிழக்கில் சனி என்பன பரிவார தெய்வங்களாகப் பிரதிட்டை செய்யப்படல் வேண்டும் என்பர். பனிஷ்யபுராணம், சாம்பபுராணம் என்பன சூரியனின் மகிமைகளையும் திருவிளையாடல்களையும் எடுத்தியம்புவன. சூரியனுக்குத் தனிக்கோயில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. அது அமைந்த ஊர் சூரியனார் கோயிலென்றே வழங்கும். மூலவராகச் சூரியனும் மேற்குறித்த முறையில் கிரகங்களும் இக்கோயிலிலே பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. வடஇந்தியாவில் கோணாறக் என்ற இடத்திற் சூரியனுக்குக் கோயில் உண்டு.

பழந்தமிழிலக்கணமாகிய தொல்காப்பியம் குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்கு மாயோனையும் (திருமாலையும்) நெய்தலுக்கு வருணனையும், மருதத்துக்கு இந்திரனையும் தெய்வங்களாகக் குறிப்பிடல் காணலாம். ஆனால் பாலைக்குத் தெய்வம் யார் என்று அந்நூலிலே செய்தி இல்லை. ஆனால் அதன் உரையாசிரியருள் ஒருவரான நச்சினார்க்கினியர், கொற்றவையையும், சிலபோதுசூரியனையும் அந்நிலத்தோர் வழிபட்டதாகக் குறித்து, இலக்கியச் சான்றும் காட்டுவர். கலித்தொகையில்,

'கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ"

என்ற அடி சூரியவணக்கம் சங்ககாலத்திலேயே தமிழரிடையே நிலவியமைக்குச் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றிணைக்காப்புச் செய்யுளில் திருமாலின் கண்களாகச் சூரிய னும் சந்திரனும் விளங்குவதாகக் கூறப்படுகின்றது.

'பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக'

என்பது அந்தப் பாட்டடி. சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப்பாடலில் சூரியனைப் போற்றும் பகுதி முதலிலேயே எடுத்துக்காட்டப்பட்டது. காவிரிப்பூம் பட்டினத்திற் சூரியனுக்குத் தனிக்கோயில் இருந்தமைக்கு 'உச்சிக்கிழான் கோட்டம்' எடுத்துக்காட்டாகும். (சிலப்பதிகாரம்)

சூரியனுக்குரிய சிறப்புவிரதநாள் ஆவணி ஞாயிறு எனக் கொள்வர். தெட்சணாயணச் செலவைச்சூரியன் முடித்து உத்தராயணச் செலவினைமேற்கொள்ளும் நாளாகக் கருதித் தைமாதத்து முதல் நாளினைச் சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும் புனிதநாளாகக் கொண்டு தமிழர் கொண்டாடி வருகின்றனர். நன்றி மறவாது போற்றும் தமிழரின் உயரிய பண்புக்குத் தைப்பொங்கற்றிருநாள் சிறந்த எடுத்துக்காட்டாகும். இன்று தமிழர் எம்மதத்தவராயினும் தைப்பொங்கல் பொங்குவதைத் தமது இன்றியமையாக் கடனாய்க் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதே. சூரிய வழிபாடென்பது சமயங்கடந்த ஒன்றென்பது இதனால் நன்கு புலனாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபெரும் தத்துவங்கள்:

## வேதாந்தம்

வேதாந்தம் என்ற சொற்றொடர் வேதங்களின் இறுதிப்பகுதி, அவற்றின் சாரம் என்னும் இருபொருள்களில் உபநிடதங்களுக்கு வழங்கிவந்தது. பின்னர் உண்மைப்பொருள் பற்றி ஆராய்ந்து நிறுவப்பட்ட தத்துவக் கோட்பாடுகளின் பொதுப்பெயராக அது நிலவியது, நிலவுகின்றது. இக்கட்டுரையிலே வேதாந்த தத்துவக் கோட்பாடுகளின் தோற்றம், உள்ளடக்கம் என்பன பற்றிச் சிறிது நோக்குவோம்.

உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பன 'பிரஸ்தானத்திரயம்' எனப்படும். வேதாந்தக் கோட்பாட்டிற்கான மூலக்கருத்துக்கள் யாவற்றையும் வேதாந்திகள் இம்மூன்றிலுமிருந்தே பெற்றனர் என்பர். அன்றியும் இவர்களிற் பெரும்பாலானோர் இவற்றிற்கு உரை வகுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதே.

பாதராயனர் என்பார் உபநிடதங்களிலிருந்தும் தங்காலத்துக்கு முன்பும் தங்காலத்திலும் வாழ்ந்த வேதாந்திகளின் கருத்துக்களிலிருந்தும் தொகுத்துக்கொண்டவற்றைப் 'பிரம சூத்திரம்' என்னும் நூலாக ஆக்கியளித்தார். இவரின் சீடரான கௌடபாதர் இந்நூலையும், உபநிடதங்களையும், அடிப்படையாகக் கொண்டு 'அத்துவித வேதாந்தம்' என்னும் தத்துவக் கோட்பாட்டை ஒழுங்குபடுத்தித் தந்தார். சங்கரர் முதலாக அவர்பின் வந்த வேதாந்திகள் அக்கோட்பாட்டினைத் தத்தம் நோக்கில் ஆராய்ந்து வெவ்வேறு வகையில் நிறுவினர்.

### கௌடபாதரின் மாண்டூக்கியக் காரிகை

மாண்டூக்கியக் காரிகை என்றும் கௌடபாதக் காரிகை என்றும் பெயர்பெறும் நூலே அத்துவித வேதாந்தத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துக்களது முதல்நூல் எனலாம். எனவே இது வேதாந்திகளால் 'ஆகம சாத்திரம்' எனப் போற்றப்படுகின்றது. இதனை எழுதியவரே கௌடபாதர். வேதாந்திகளிடையே மிகப் புகழும் முதன்மையும் பெற்று விளங்கும் சங்கராச்சாரியரே "எனது வணக்கத்திற்குரிய குரவருடைய வணக்கத்திற்குரிய குரவர்'' என்று இவரைப் பெரிதும் போற்றுகின்றார் எனில், வேதாந்த உலகில் இவருக்குள்ள மதிப்புச் சொல்லாமலே விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டூக்கியக் காரிகையின் தத்துவக் கருத்துக்கள் பொதுவாக உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டவை எனவும் சிறப்பாக மாண்டூக்கியம், பிருஹதாரணியகம், சாந்தோக்கியம் ஆகியவற்றிலிருந்து பெற்று வளர்க்கப்பட்டவை எனவும் கூறப்படுகின்றன. இவற்றோடு பிரமசூத்திரமும் பகவத்கீதையும் இந்நூலாக்கத்திற் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெரியவருகிறது. அன்றியும் மகாயான பௌத்தத்தின் பிரிவுகளான சூனியவாதம், விஞ்ஞானவாதம் ஆகியவற்றின் செல்வாக்குக்கு மாண்டூக்கியக் காரிகையின் ஆசிரியர் உட்பட்டுள்ளார் என்பதும் ஒன்று.

கௌடபாதரின் தத்துவக்கோட்பாட்டின் அடிப்படையாய் அமைந்தது, எதுவும் படைக்கப்படுவதில்லை. யாவும் தோற்றமே, என்பதாகும். இது அஜாதிவாதம் எனப்படும்.

அஜாதிவாதம்:

உலகப் படைப்புப் பற்றிக் கௌடபாதர் காலத்திற் பல்வேறு கருத்துக்கள் நிலவின. அவற்றுட் சில வருமாறு:

(i) படைப்பு என்பது இறைவனிலிருந்து விரிவடைதல் (விபூதி)

(ii) அது ஒரு கனவு, மாயை

(iii) கடவுளின் இச்சையால் நிகழ்தல்

(iv) காலத்திலிருந்து தோற்றல்

(v) கடவுளின் போகஅநுபவம், பொழுதுபோக்கு

(vi) அவரின் திருவிளையாடல் (கிரீடை)

கௌடபாதரைப் பொறுத்தவரை இவை யாவும் பிழையான முடிபுகள். பற்றற்ற பரமனுக்குப் படைத்தல் வேண்டும் என்ற பற்று உண்டாகுமா? அவ்வாறாயின் படைப்பு, உலகத்தோற்றம் என்பனவெல்லாம் என்ன? என்ற வினா எழுகின்றது. இவ்வினாவிற்குக் கௌடபாதர் தரும் விடை ''படைப்பு என்பது இறைவனுக்கேயுரிய அவனோடிணைந்த இயல்பாகும். இவ்வியல்பு வெளிப்படுகையில் அது படைத்தல் ஆகின்றது. ஆனால், படைப்பு என்பது உண்மையானதன்று. அது உள்ளது போலத் தோற்றுகின்றது. அவ்வளவே''

''உலகம் பலவாகத் தோற்றுகின்றது. பலவாகத் தோற்றும் எதுவும் நிலைபேறு உடையதன்று. அது ஒருகால் அழிந்துபடும். அழிவதனை உண்மைப் பொருள் எனலாமா? எனவே பலவற்ற, இரண்டற்ற ஒன்றே நிலையானதும் உண்மையானதுமாகும். வேதாந்தத்தில் ஆழ்ந்த புலமைபடைத்தவர்கள் இந்த உலகினைக் கனவாக, மாயையாக, ஆகாயக் கோட்டையாகவே கொள்வர். சரியான நோக்கில் பிறப்பு என்பதோ இறப்பு என்பதோ தளை என்பதோ விடுதலை என்பதோ, விடுதலை விருப்பம் என்பதோ, விடுதலைமுயற்சி என்பதோ எவையும் இல்லை. வீடு பெற்றார், பெறமுயல்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவெல்லாம் பொய்யானவை. இந்த முடிவே மிக்குயர்ந்த உண்மையாகும். உலகம் என்பது பலவற்றின் கூட்டு என்று கருதல் கூடாது. அது ஒன்றும் அன்று. பலவும் அன்று. ஞானிகள் இதனை உணர்வர்'' எனக் கௌடபாதர் தமது மாண்டூக்கியக் காரிகையில் அறுதியிட்டுக் கூறுவர். இவர் கூற்றுக்கான ஆதாரங்கள் சில வருமாறு;

(i) 'இங்குப் பன்மை என்பது இல்லை' (பிருஹதாரணியகம் iv, 4, 19, கடோ 11·1)

(ii) 'இறைவன் (பிரமம்) தனது பேராற்றலாற் பலவாகத் தோன்றுகின்றான்.' பிருஹ. 11,5,9)

(iii) பிறப்பிலி பல பிறப்புடையதாகக் காட்சி தருகின்றது. (பிருஹ. 11 5 9)

(iv) படைப்பு, உருவாக்கல் என்பவற்றோடு தம்மை இணைத்துக் கொள்வோர் இருளிடத்தே நுழைபவராகின்றனர். (ஈசாவாஸ்ய உபநிடதம் )

(v) பிறப்பிலி மீண்டும் பிறக்காத பொழுது அதனைத் தோற்றுவிக்க வல்லார் யாவர்? (பிருஹ iii, 9, 28)

மேற்குறித்த சுருதி வாக்கியங்களால் மட்டுமன்றிக் காரணகாரிய ஆய்வின் மூலமும் இவ்வுண்மையை நிலைநாட்டலாம் என்பது கௌடபாதரின் கருத்தாகும். ஏற்கெனவே உள்ளதொன்று மீண்டும் பிறக்கிறது எனக்கூறுவது மடைமை. இல்லாத ஒன்று பிறப்பெடுக்கின்றது என்பதும் பேதைமை. மலடிக்கு மகன் பிறந்தான் என்பது எத்துணை அபத்தமோ அத்துணை அபத்தம் இல்லாததொன்று உண்டாகின்றது என்பதுமாகும். ஆகவே, எதுவும் படைக்கப்படுவதில்லை என்னும் அஜாதவாதமே உணமையானது.

பிறப்பிலியும் பூரணத்துவமானதுமான ஒன்றைத் தவிர அதற்கு வெளியில் உள்பொருளாகவோ, உண்டாக்கப்பட்டதாகவோ எதுவுமில்லை. என்ற கௌடபாதரின் முடிவு. மகாயான பௌத்தத்தின் விஞ்ஞானவாதப் பிரிவோடு ஒத்துச் செல்கிறது என்பர். உண்மையான உள்ளுணர் ஞானந்தவிர அதற்குப் புறத்தே தோற்றுவன யாவும் பொய் என்பது விஞ்ஞானவாத சாரம். மகாயானத்தின் மற்றொரு பிரிவினரான சூனியவாதிகளோ விஞ்ஞானவாதக் கருத்தையுங் கடந்து சென்று ''ஒன்றும் இல்லை யாவுஞ் சூனியம்'' என வாதிடுவர். (வேதாந்திகளைப் ''பிரசன்ன பௌத்தர்'' எனக்கேலியாய் உரைப்பவரும் உண்டு.)

**அஸ்பர்ஷ யோகம்:**

பிருஹதாரணியகம், சாந்தோக்கியம், மாண்டூக்கியம் ஆகிய உபநிடதங்களில் ஆன்மா என்றும் பிரமம் என்றும் பேசப்படுவதோடு கௌடபாதர், 'பிறப்பிலி, பூரணம்' என்னும் தமது தத்துவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து அடையாளம் காண முற்படுகின்றார். பிரமம் வெளிப் பட்டுத் தோன்றும் வகை பற்றிய விளக்கமும் கௌடபாதரின் தத்துவ ஆய்விற் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுவதாகும். இது அஸ்பர்ஷ யோகம் என்றும் வைஷாராட்யம் என்றும் அமனீபாவம் என்றும் முப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பிரமமானது விழிப்பு நிலையில் (சாக்கிரம்) உலகமாகத் விசுவம் தோன்றும். கனவு நிலையில் (சொப்பனம்) ஒளியாகத் (தஜ்ஜஸ்) திகழும். ஆழ்துயில் நிலையில் (சுஷுப்தி அல்லது சுளுத்தி) விவேக மாக (பிரக்ஞை) வெளிப்படும். அஃதாவது விழிப்புநிலையில் உலக விவகாரங்களில் தோய்ந்திடும் போகியாகவும் கனவு நிலையிற் பொறிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட உணர்வினதாகவும் ஆழ் துயில் நிலையில் ஆனந்தத்தை அநுபவிப்பதாகவும் அது தோற்று கின்றது. ஒருவகையில் முன்னிரண்டு நிலைகளிலும் மூன்றாவது நிலை உயர்ந்ததுதான். விஸ்வ, தஜ்ஜச நிலைகள் காரணகாரியத் தொடர்பால் பிணைப்புண்டவை. பிரக்ஞையோ காரணம் மட்டுமே, எனினும், இம்மூன்றையும் கடந்ததோர் நிலையும் உள்ளது. அது காரணகாரியத்துக்கும் அப்பாலனது. இது துரியம் எனப்படும். இதனை அறிதுயில் நிலை எனலாம். இந்நிலையிற் கட்டுக்களற்று, தனக்குத் தானே தலைவன் என்ற நிலை உண்டாகின்றது. இந்நிலையில் பிரமம் ஈசானன் என்றோ பிரபு என்றோ தேவன் என்றோ பெயர் பெறுகின்றது. எல்லா ஆற்றலையும் தன்னுள் அடக்கியதும் எல்லாக் கவலைகளுக்கும் அப்பாலானதும் எல்லாவற்றுக்கும் தலைமைதாங்கு வதும், மாற்றமற்றதும் இரண்டென்னும் தன்மையற்றதும் ஒளிமய மானதும் இத்துரிய நிலையேயாகும். விடயி சம்பந்தமற்றதாதலின் இந்நிலையிற் பிரமத்தை விடயம் எனலும் ஆகாது. ''விழிப்புநிலை யும் கனவு நிலையும் பொய்யானவற்றை மெய்யெனக் கொள்ளும் பிழையான அறிவுடன் தொடர்புகொண்டவை, துயில் நிலையோ அறி வுடன் கூடாத நிலை, துரியமோ துயிலும் கனவும் அற்றநிலை, கனவிற் காண்பவை போலிகள். துயிலில் உண்மை வெளிப்படாது. விழிப்புநிலை யும் ஒருவகையிலே கனவுதான். துயிலில் அறிவின் மறைவும் விழிப்பிலும் கனவிலும் பிழையறிவும் காணப்படுவதால் நான்காம் நிலையாகிய அறிதுயில் (துரியம்) நிலையிலேயே பிரமம் அடையப்படுவதா கின்றது. 'என மாண்டூக்கியக் காரிகை ஆசிரியர் விளக்கம் தருகின்றார். ''விழிப்புநிலை, துயில்நிலை, கனவுநிலை ஆகிய மூன் றையும் கடந்த துரியநிலை அளவுள் அடங்காத (அமாத்திரை ஒன்றாகும். ஓங்காரம் என்னும் பிரணவமே இதற்குக் குறியீடாகும். பிரணவமே பிரமம். அதுவே அடைதற்குரிய இறுதி இலக்கு. அதுவே காரணமும் காரியமுமாகும். அதுவே நிர்க்குணமானதும், சகுணமா னதுமாய் இலங்கும். (நிர்க்குணம் - குணங்களற்றது. சகுணம் - குணங் களோடு கூடியது) அதுவே ஒளிரும் அகமாகித் தன்னுள்ளே தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயம்பிரகாசமாய் இலங்குகின்றது. ''பிரமம் என்னும் பரமான்மா பரவெளியாய் நிற்கச் சீவான்மாக்கள் பானையுள் அடங்கிய வெளிகளாய் விளங்குகின்றன. பானை உடைந்ததும் கட்டுண்டிருந்த வெளி பரவெளியிற் கலக்க எல்லாமே பரவெளியாகி ஒன்றாகி, பிரமமாகி இரண்டில்லா ஏகத்துவத்தை எய்தும்.'' இதுவே அஸ்பர்ஷ யோகம். உபநிடதங்களின் அடிப்படையில் இதனைக் கௌடபாதர் வகுத்துக் கொண்டாராயினும் இந்தப் பதமும் விளக்கமும் கௌடபாதருக்கே உரியன என்பது குறிப்பிடத் தக்கதாகும். ''யாவிலும் மேலான சத்தியமும், பிறப்பிலியும் பேதமற்றதும், இருமை, பன்மை, என்ற பாகுபாடுகளுக்கு அப்பாலானதுமாகிய அதனை (பிரமத்தை) எமது மிக்குயர்ந்த ஆற்றல் கொண்டு வணங்குவோமாக''.

கௌடபாதர்

**சங்கராச்சாரியர்**

கௌடபாதரின் சீடர் கோவிந்தபாதர். கோவிந்தபாதரின் சீடர் வேதாந்த உலகிலே 'சங்கர பகவத் பாதர்' எனப் பெரிதும் போற்றப் படும் சங்கராச்சாரியர். கேரளத்திலே காலடி என்னும் இடத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இவர் தோன்றினார் என்பர். இவரைக் கி.பி ஆறாம் நூற்றாண்டினர் என்பதும் உண்டு. ஆனால் கி.பி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைத் தமது தோத்திரப்பாடல் ஒன்றிலே இவர் குறிப்பிடுவதாலும் (திராவிடசிசு), சமய குரவர்களில் முதல் மூவர் இவர் பற்றியோ இவரது தத்துவம் பற்றியோ கருத்துந் தெரிவிக்காததாலும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினரான மாணிக்கவாசகசுவாமிகளே இவர் தத்துவத்தினை 'மிண்டியமாயாவாதம்' என எடுத்துரைப்பதாலும் இவர் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்று கொள்வதே பொருத்தமானது.

''இவரது (சங்கராச்சாரியரது) தத்துவம் முழுமையானது. அதன் தொடக்கத்திலோ முடிவிலோ ஓர் எழுத்தினைக்கூடச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டாத அளவு முழுமையானது. நாம் இவரது தத்துவத்தினை ஏற்கலாம், அல்லது மறுக்கலாம். ஆனால் இவரது பேரறிவுச்சுடரின் வீச்சானது எம்மை விடாது எம்முள்ளே ஊடுருவிச் செல்வதை மட்டும் எம்மால் தடுத்தல் இயலாது'' என்பது சங்கராச்சாரியர் பற்றிய பேரறிஞர் இராதா கிருஷ்ணனது மதிப்பீடாகும்.

முப்பத்திரண்டு ஆண்டுகளே வாழ்ந்த இப்பெருஞானி சாதித்த சாதனைகளோ மூன்று நூற்றாண்டுகளிலே கூடச் சாதிக்க இயலாதவை. சிருங்கேரி, துவாரகை, பூரி, காஞ்சி ஆகிய இடங்களிலே நான்கு மடங்களைத் தாபித்துத் தமது தத்துவக் கோட்பாடுகளையும், வேதாந்த நெறியினையும் நிலையான தளத்தில் உறுதியாக நிறுவியதோடு, பிரமசூத்திரத்திற்கு மாபாடியம், உபநிடதங்கள் பத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை, சௌந்தரியலகரி, கனகதாரா முதலாம் தோத்திர நூல்களை இயற்றியும் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய சண்மதங்களையும் ஒழுங்குபடுத்திப் பிரதித்தாபகம் செய்தும் இவர் ஆற்றிய தொண்டுகள் மகத்தானவை. இவை யாவிற்கும் சிகரம் போன்று தமது மாபாடியம் வாயிலாக இவர் நிறுவிய 'கேவாலத்துவிதம்' வன்னும் வேதாந்த தத்துவக் கோட்பாடானது இந்தியதத்துவஞான உலகிலே இவருக்குத் தலைசிறந்ததொரு தானத்தை வழங்கியுள்ளது.

**சங்கர வேதாந்தம்**

சங்கராச்சாரியரின் கருத்துப்படி உண்மையில் உள்ள பொருள் ஒன்றுதான். உபநிடதங்களில் ஆன்மா என்றும் பிரமம் என்றுஞ் சுட்டப்படுவது எதுவோ அதுவே உள்பொருள். அது பூரணஞானமே சொரூபமானது (ஞானசொரூபம்). வேறுவகையிலே சொல்வதாயின் அதன் சுவரூபம் ஞானம் ஆகும். (சொரூபஞானம்). அது குணங்களற்றது (நிர்க்குணம்). அதற்கு விசேட இயல்புகள் எவையும் இல்லை (நிர்விசேடம்). பிரமம் மாயையாகிய தனது சத்தியோடு இணைந்துள்ளது. மாயையை மூலவித்தை எனவும் குறிக்கலாம். நிர்க்குணப் பிரமம், மாயை காரணமாகக் குணங்கள் உடையதாகத் (சகுணப்பிரமம்) தோற்றுகின்றது. இந்நிலையில் பிரமம் சகுணப்பிரமம், சவிசேடப்பிரமம், அபரப்பிரமம், என்ற பெயர்களால் வழங்குகிறன்து. அதனை ஈசுவரன் எனவும் குறிப்பர். ஈசுவரனே படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய தொழில்களை நிகழ்த்துவன். உலகம் எள்பது ஈசுவரனின் தோற்றமே.

சீவன் என்பது விடயம், விடயி ஆகிய இரண்டுடனும் சம்பந்தம் உடையது. அதன் விடய நிலையில் (பௌதிகச் சார்பற்ற நிலையில்) அது ஞானவடிவினதாய்ச் சாட்சியாய் விளங்கும். அதன் விடயி நிலை என்பது கருவி கரணங்களோடு கூடிய நிலையாகும். அஃதாவது பொறிகளோடிணைந்து வினைகளைப் புரியும் நிலை. ஆழ்துயிலில் சீவன் நிலைக்கின்ற பொழுதுகள் தவிர்ந்த மற்றைய பொழுதுகளிலெல்லாம் அது செயற்பட்ட வண்ணமே இருக்கும். அந்தக்கரணங்களுக்கு மூலாதாரமாயுள்ளது அவித்தை (அறியாமை). அது ஆன்மாவாகிய பூரணத்தைக் கூறுடையதாகத் தனித்தனி ஆன்மாக்களாகத் தோற்றுவிக்கின்றது. புலக்காட்சியின் பொழுது அந்தக்கரணங்கள் குறித்த பொறியோடிணைந்து புறப்பொருளோடு தொடர்புறுங் காலத்தில் அப்பொருளைத் தனித்த வடிவம் உடையதொன்றாய்க் காட்டுவதும் அவித்தையே. விழிப்புநிலையில் (சாக்கிரம்) அந்தக்கரணம் பொறிகளால் நெறிப்படுத்தப்படுகின்றது. துயில் நிலையில் அந்தக் கரணம் மட்டுமே செயற்படுகின்றது. ஆழ்துயில் நிலையில் அந்தக் கரணம் அவித்தையினுள் மறைந்து நிற்கின்றது. ஆழ்துயில் நிலையிலும் ஆன்மா, தான் தனித்தன்மையுடையது என்ற உணர்வினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பதில்லை. காரணம் சாட்சியான அது அவித்தையுடன் கூடுவதே. அவித்தையினை அழித்து அதன் கட்டினின்றும் ஆன்மா விடுபடுகையில் ஆன்மா தான் தனியான்மா அன்று, பரமான்மாவே என்ற ஞானத்தை அடைகின்றது.

மாயை என்பது மாயமானதன்று. அது அறிவற்றது மட்டுமன்று, பிழையான அறிவைத் தருவதும் அதுவே. உண்மைக்கும் பொய்ம்மைக்கும் இடையில் குறுக்கிட்டு நிற்பது மாயையின் இயல்பு. அது விளக்க ஒண்ணாதது. உள்ளதும் அன்று, இல்லதும் அன்று. உள்ளதும் இல்லாததுமாகிய இரண்டியல்பும் கொண்டதும் அன்று.

(1) மாயை உள்பொருளன்று. ஏனெனில் உள்பொருள் பிரமம் மட்டுமே.
(2) அது இல் பொருளுமன்று. ஏனெனில் பிரமம் உலகாகத் தோற்றுவதற்குப் பொறுப்பாய் உள்ளது அதுவே.
(3) அது உள்ளது, அது இல்லாதது என்று கூறுவதும் தவறே.

ஏனெனில் அந்தக் கூற்று முரணுடையதாகும்.

ஃ அது உள்ளது இல்லதாகிய இரு இயல்புகளுக்கும் அப்பாலான 'சதசத் விலட்சணத்'தை உடையதாகும்.

மாயை பொய்யானது என்பதால் மித்யை எனலாம். ஆனால் அது குதிரைக் கொம்பு போன்று உலகினில் இலாப் பொருள் எனலும் தவறே. அது பாவரூபமானது, அஃது ஒரு சத்தி, சிப்பியில் ஒளிரும் வெள்ளி உண்மையற்றதாயினும் உண்மையானதாய்த் தோற்றுதல் போல மாயையும் தோற்றும் இயல்புடையது.

உண்மை ஞானம் தோன்றுகையில் மாயை ஆகிய பிரமை, பிராந்தி மறைந்தொழியும். சிப்பியில் வெள்ளி ஒளி வேறு வேறாக அடையாளம் காணப்படவோ பிரித்துணரவோ கூடாதது போல மாயையும் உலகிலிருந்து பிரித்தடையாளம் காணவோ, பிரித்து உணரவோ முடியாத தொடர்பினை உலகோடு கொண்டுள்ளது. இத்தொடர்பு தாதாத்மியம் எனப்படும். பிரமத்தை ஆதாரமாகக் கொண்டு மாயையினூடாகத் தோற்றுகின்ற உலகமானது மாயையும் அவித்தையும் அழிந்து பூரண ஞானம் வெளிப்படுகையில் இல்லாது ஒழியும் என்பது சங்கரர் கருத்து.

சங்கரரைப் பொறுத்தவரை தோற்றமாத்திரையில் உலகம் உண்மையானதே. அது மாயம் அன்று. எதார்த்த உண்மை. அவர் கனவுநிலை (சொப்பனாவஸ்தை) யிலிருந்து விழிப்புநிலையை (சாக்கிராவஸ்தையை) வேறுபடுத்துகின்றார். கனவு நிகழ்ச்சி நடந்து முடியும் வரையில் பொய்யானதன்று. விழித்த பின்னரே அந் நிகழ்ச்சியின் பொய்ம்மையை நாம் உணர்கின்றோம். இதுபோன்றே உண்மை ஞானம் வெளிப்படும்வரை இவ்வுலகம் உண்மையானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் நிகழும் நிகழ்வுகளும் சீவன்களின் இயக்கங்களும் செயற்பாடு களும் உண்மையானவையே. இதுவரையில் கனவுநிலையும். விழிப்பு நிலையும் ஒற்றுமைத்தன்மை உடையனவே. ஆனால் கனவு தனிப் பட்டது. அது சீவனால் உருவாக்கப்படுவது. உலகமோ பொதுவானது. அது ஈசுவரனது படைப்பு. சீவனோ பொதுவுக்கும் தனிப்பட்டதற் கும் அடையாளம் காணமுடியாத அறியாமையில் மூழ்கிக் கிடக்கி றது. அதற்கு வேறுபாடு ஒன்றே தோற்றுகின்றது. (கனவு பொய், நனவு உண்மை என்ற வேறுபாடு) அவித்தையே இல்லாதவற்றைத் தோற்றுவிப்பதும், மறைப்பதும் ஆகிய செயல்களை (ஆவரணம், விக்ஷேபம்) நிகழ்த்திச் சீவனைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கின்றது, என்ற உண்மை சீவன்களுக்குப் புலனாவதில்லை. ஈசுவரன் உலகுக்கும் தனக்குமிடையேயுள்ள இணைப்பிலிருந்து எக்காலத்தும் விடுபடாத வன். ஆனால் மாயையின் மறைக்கும் இயல்பினால் அவன் உலகமாக வேறுபட்டுத் தோற்றுகின்றான். சீவன்கள் இவ்வுண்மையை உணர் ந்து நிர்க்குணமாகிய பரப்பிரமமே உண்மையானது, என்று அறிவ தாகிய ஞானத்தைப் பெறல் வேண்டும். அந்த ஞானம் பெற்றோரே சீவன் முத்தர்கள். (இவ்வுடலுடன் கூடியிருந்த வண்ணமே தமது ஞானத்தினால் முத்தி நிலைக்குத் தகுதி பெற்றோர்.) இச்சீவன் முத் தர்கள் தமது இறப்பின் பின் விதேக (தேகம் அற்ற) முத்தியை அடைவர். இதுவே சங்கரரது (கேவலாத்துவித) வேதாந்த சாரம்.

**சங்கராச்சாரியரின் மறுப்புக்களும் நிறுவல்களும்;**

தமது குருவின் குருவான கௌடபாதரைப் போலவே சங்கராச் சாரியரும் ஒருமைவாதி. மேலே காட்டிய அவரின் வேதாந்ததத்து வத்தின் மூலம், ''பிரமம் ஒன்றே உள்பொருள், மற்றவை யாவும் தோற்றங்கள். தோற்றங்களுக்குக் காரணம் மாயையும் அவித்தை யும், இவை, உண்மை ஞானத்தினால் மறைந்து போக நிர்க்குணப் பிரமம் ஒன்றே எஞ்சும். அதுவேயாதலே முத்தி'' என்ற உண்மை யினை அவர் பெறவைந்துள்ளார். இவ்வாறு தம் கோட்பாட்டினை நிறுவ முற்படுகையில் தமது சமகாலத்திலும் முன்னரும் நிலவிய தத் துவக் கோட்பாடுகள் பலவற்றைத் தருக்கரீதியாக மறுத்துத் தங் கோள் நிறுத்தலும் அவரின் இன்றியமையாக் கடமையாகும். அக் கடமையினை அவர் எவ்வாறு நிறைவேற்றியுள்ளார் என்பதைச் சிறிது நோக்குவோம்.

(i) சாங்கிய தரிசனம் பிரபஞ்சத்தின் இசைவிற்கும் ஒழுங்கிற்கும் மூலகாரணமாக உள்ளது பிரகிருதி என்கிறது. பிரகிருதி என்பது அறி வற்ற பொருள், அசேதனமானது. அறிவற்றதாகிய அதிலிருந்து உல கமும் அறிவு சார்ந்த உலக ஒழுங்கும் தோன்றமுடியாது என்பது சங்கரரது கருத்து. கல்லும், சீமெந்தும், சேர்ந்து சுவராக முடியாது. சுவரைக் கட்டுவோன் அறிவும் செயற்றிறமும் உடையவனாய் அவற் றின் துணையாலே சுவரைக் கட்டலாமேயன்றிச் சடப்பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து சுவராய் அமைவது நிகழாத காரியம். அதுபோலவே உலக மும் அசேதனமான பிரகிருதியிலிருந்து தோன்றல் இயலாது என்பது அவரின் வாதம்.

ஆகவே பிரமமே தனது சத்தியாகிய மாயையுடன் கூடி உல கப் படைப்பு, காப்பு, அழிப்பு என்பவற்றை நிகழ்த்துகின்றது என் பது சங்கரர் கொண்ட முடிபு. இதே போன்று புருஷனின் சந்நிதி யிலே அவன் பார்வையிலே பிரகிருதி செயற்படுகிறது என்பதும் அபத்தமென்றே சங்கரர் கொள்வர். தன்னிலிருந்து முற்றிலும் வேறானதும், தன்னோடு தொடர்பு கொள்ளாததுமான பிரகிருதியி லிருந்து புருஷனின் உணர்ச்சியும் ஆற்றலும் வெளிப்படுவது எங்ஙனம் என்பது அவரின் வினா, (பிரகிருதி புல் என்றும், புருஷன் பசு என்றும். புல்லிலிருந்து பால் உண்டாவது போலப் பிரகிருதியிலிருந்து புருஷன் துணையுடன் யாவும் வெளியாகின்றன என்றும் சாங்கியர் கூறும் உவமைக்குச் சங்கரர் கேட்பது, ''பசு புல்லைத் தின்னாமல் அதிலிருந்து பால் சுரக்குமா?'')

(ii) சற்காரியவாதம் என்பது காரணத்திலிருந்து காரியம் தோன்றும் என்பது, சங்கரர் சற்காரணவாதி. அவர் ஒரு விளை வுக்கான காரணத்தை மட்டும் ஏற்பர். காரணத்திலிருந்து தோன் றும் காரியம் என்பது அவர் வரையிலே வெறும் தோற்றமேயன்றி உண்மையானதன்று சாங்கியரின் சற்காரியவாதமும் சங்கரரால் மறுக்கப்பட்டதாகும். காரணத்தின் முன்னரும் காரியம் இருக் கும் என்பதும் காரியம் உண்டானபின் காரணம் அழியும் என்பதும் தவறானவை என்பது சங்கரரின் முடிபு.

சங்கரரின் காரணவாதம் விவர்த்தவாதம் எனவும் வழங்கும். விவர்த்தவாதம் என்பது, ஒன்று பிறிதொன்றாய்த் தோற்றுதல். (உ:ம் கயிறு பாம்பாகத் தோற்றுதல். பிரமம் உலகு யாகத் தோற்றுதல்)

(iii) வைசேடிகர் ஆன்மா என்பது அறிவற்றது என்றும் அது மனத்தோடு கூடும் பொழுது அறிவுடையதாகின்றது என்றும் உரைப்பர். நிர்க்குண, நிர்விசேட ஆன்மா தனக்குப் புறமான ஒன்றோடு கூடியே அறிவு பெறுகின்றது என்பது தருங்க ரீதியாக ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று எனச் சங்கரர் வாதிப்பார். இவ்வாறு ஆன்மா மனத்தோடு சேர்வதால் நிலையில்லாத துன்ப இன்பங்களோடு தொடர்புற நேரும். இதனால் ஆன்மாவும் நிலை யற்ற தன்மையை அடைய நேருமன்றோ? அன்றியும் நிலையான ஆன்மாவுடன் இணைவதால் துன்ப இன்ப உணர்வுகளும் நிலை பேறடையலாமன்றோ? இவ்விரண்டும் அசாத்தியமாகையால் ஆன்மா மனத்துடன் சேர்ந்து அறிவு பெறுகின்றது என்பது தவறான முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) யோகதரிசனகாரர் சிலர் உலகிற்கு நிமித்த காரணராக இறைவன் விளங்கி அரசர்போல உயிர்களை ஆண்டு வருகின்றார் என்பதையும் சங்கரர் மறுப்பார். ''கடவுள் அரசராகித் தம் விருப்பம் போல ஒரு சிலரைச் செல்வராகவும் வேறு சிரை ஏழைகளாலகவும் சிலரை வலிபடைத்தோராகவும், மற்றுஞ் சிலரை வலியில் நிலைமையராகவும் ஆக்குவாரானால் அவர் நீதியாளர் அல்லர் ஆவாரன்றோ? அத்தகைய கடவுளுக்கும் சாதாரணமான எமக்கும் வேறுபாடு யாதோ?''

(v) பிரமமே உலகமாகப் பரிணமிக்கின்றது (வெளிப்பாடுகின்றது) என்று வாதிடுவோர் பிரமபரிணாம வாதிகள் எனப்படுவர் ''பிரமம் உலகமாக வெளிப்படுவதாயின் உலகப்படைப்பனைத்தும் பூரணமும் பேரறிவும் உடையனவாகவன்றோ காணப்படல் வேண்டும், என்பது சங்கார் வினா. அவ்வாறில்லாமையால் இவர்களது வாதங்களும் ஏற்புடையனவல்ல என்பதே சங்கரர் முடிபு. முதலிற் குறித்தது போலப் பிரமமும் அதன் சத்தியாகிய மாயையும் இணைந்து மாயையினூடாகப் பிரமம் உலகமாகத் தோன்றுகின்றது என்பதே சங்கரர் கருத்து.

இவ்வாறே அவைதிக மதங்களான சமணம், பௌத்தம் தரும் முடிபுகளையும் மறுத்துச் சங்கரர் தங்கோள் நிறுவுவர். சில இடங்களில் பௌத்தரின் சில பிரிவுகளின் சில கருத்துக்களை மறைமுகமாக ஏற்றதும் உண்டு.

**சங்கரர் நோக்கில் மாயை**

மாயைக்கு வேதாந்திகள் சிறப்பாகச் சங்கரர் கொடுக்கும் அழுத்தத்தினால் அவர்களின் தத்துவக் கோட்பாட்டினைக் குறைகூறவோரும் கண்டிப்போரும் 'மாயாவதம்' என்றே அதனை வழங்குவதுண்டு. சங்கரவேதாந்தம் என்ற தலைப்பின் கீழ் மாயை பற்றிய கருத்துக்கள் முன்னரே ஓரளவு தரப்பட்டிருப்பினும் அது பற்றி மேலும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதால் வேறு சிலவும் இங்குத் தரப்படுகின்றன.

(i) சாங்கியரின் பிரகிருதிபோல மாயையும் அசேதனமானதும் சட இயல்பு வாய்ந்ததுமாகும். இவ்வகையில் மாயை பிரமத்துக்கு நேர் மாறானது.

(ii) மாயை சுதந்திரமற்றது

(iii) அது பிரமத்தின் சத்தியாய் அதனோடு பின்னமற்று நிற்பது. பிரமத்தோடு அநன்யபாவமுடையது, தாதான்மியமானது.

(iv) இருமையற்ற பிரமத்தை ஈசுவரன் (சகுணப்பிரமம்) - உலகம் என இருமைப்படுத்தித் தோற்றுவிப்பது மாயை

(v) மாயை அநாதியானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) அது பாவருபமானது அதற்கு ரரியல்புகள் உஅளன. ஒன்று இவ்லதை உள்ளதாககக் காட்டும் ஆவரண இயவ்பு. மற்றது இருப்பதை இல்லாததுபோல மறைத்துக் காட்டும் விக்ஷேப இயல்பு

vii) பொய்யறிவையும் பிழை அறிவையும் தருவதும் மாயையின் தொழிற்பாடே.

(viii) விவரிக்கவோ வரைவிலக்கணம் செய்யவோ முடியாததும் உளதோ இலதோ என்ற கூறமுடியாததுமான மாயையை 'சத சத்நிர்வசனீயம், என அழைப்பர்.

(ix) மாயை உண்மையன்று. ஏனெனிற் பிரமமின்றி அது இல்லை. அது பொய்யன்று. ஏனெனில் அது உலகைத் தன்னூடாகப் பிரமத்திலிருந்து தோற்றுவிக்கின்றது.

(x) விவர்த்தவாதமாகிய தோற்றப்பாடொன்றே மாயைக்கு உரியது.

(xi) உண்மைஞானம் ஒன்றே மாயையை அகற்ற வழி.

(xii) பிரமத்தை விடயமாகவும் ஆசிரயமாகவும் கொண்டபோதும் பிரமத்தை மாயையாலே தீண்டவும் முடியாது; நிறமற்ற ஆகாயத்தை நிறமுடையதாக்குவது முடியாதது போலப் பிரமத்தைத் தீண்டுவதும் மாயைக்கு இயலாததாகும்.

### மாயையும் அவித்தையும்

இவ்விருபதங்களும் வேதாந்த உலகிலே பல சந்தர்ப்பங்களில் ஒரே பொருள் கொண்டனவாகக் கையாளப்படுவதுண்டு. ஆனால் இவற்றுக்கிடையிலே வேறுபாடு உண்டு. மாயை - மயக்கம். அவித்தை அறியாமை. இந்திய தத்துவ ஞானம் என்ற தமது நூலிலே திரு.கி. லக்ஷ்மணன் அவர்கள், இவ்விரண்டிற்கும் வித்தியாரணியர், சங்கரர் ஆகியோர் கூறும் ஒற்றுமை மேற்றுமைகள் எனக் காட்டியுள்ளவை இவை;

(i) இரண்டும் பிரமத்தியிலேயே தோன்றுவள, தோன்றிப் பிரமத்தையே மறைப்பன.

(ii) மாயை சுத்த சத்துவ குணத்தால் (சாத்துவிகம்) ஆனது. அவித்தை இராஜச, தாமச, குணங்குளால் ஆனது.

(iii) மாயை ஈசுவரன் தோன்றக் காரணம். அவித்தை சீவர்கள் தோன்றக் காரணம்.

(iv) மாயை ஈசுவரனைப் பாதிப்பதில்லை. அவித்தையொ சீவர்களைப் பாதிக்கிறது.

(v) தொகுதி நிலையில் மாயை எனப்படுவது பிரிந்து ஒவ்வொரு சீவனையும் பாதிக்கும் பொழுது அவித்தையாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமமும் ஈசுவரனும்

"நிர்க்குண நிர்விசேடப் பிரமம் மாயை காரணமாகச் சகுண விசேடப் பிரமமாகின்றது. இந்நிலையில் அது ஈசுவரன் எனப்படு கிறது. இவ்வாறு தாழ்வது பிரமத்துக்கு இழுக்கு" என்று, ஈசுவர நிலையினைக் குறைத்து மதிப்பிடுபவரும் உள்ளனர் ஆனால் உண்மை அதுவன்று. மாயை பிரமத்தை மறைப்பதில்லை. ஏனெனில் மாயை யின் தலைவனும் பிரமமே. பிரமத்தின் சத்திதான் மாயை, முடிவி லாற்றலோடு உயிரின் உயிராய் அதனுள் நிற்கும் அந்தர்யாமியே ஈசுவரன், உலகாகத் தோற்றும் நிலையிலும் உலகைக் கடந்தவனா கவும் படைத்தல் முதலாம் தொழில்களுக்கு அதிகாரியாகவும் வழி பாட்டிற்கு உரியோனாகவும், சச்சிதானந்தனாகவும் அவன் விளங் குகின்றான். ஒழுக்க நெறியினைத் தூண்டி வழிநடத்துபவனும் அவனே. சுருங்கச் சொல்லின் சங்கராச்சாரியர் குறிக்கும் ஈசுவரன் பற்றிய கருதுகோள் இராமானுசரால் விரிவாக்கம் பெற்றுள்ளது என்பதும், பிரமத்தின் தாழ்ந்தநிலை ஈசுவரன் என்று சங்கராச் சாரியர் கொள்ளவில்லை என்பதும் அறிஞர்கள் கொண்ட முடி பாகும்.

பிரமமும் சீவனும்

சகுணப் பிரமம் ஈசுவரன் என்று கண்டோம். வெளித்தோற்றத் திற் சீவனுக்கும் ஈசுவரனுக்கும் வேறுபாடுண்டு. சீவன் புறத்திலுள்ள பொருள்களை அநுபவிப்பதாகவும், அந்த அநுபவத்தால் துன்ப இன் பங்களுக்கு உள்ளாவதாகவும், குறையும் நிறையும் கொண்டதாகவும் உள்ளது. ஈசுவரனோ இவை எவற்றாலும் பாதிப்படையாதவனாயும் தீண்டப்படாதவனாயும் விளங்குகின்றான்.

"ஒரு பறவை மரத்தில் (பிரபஞ்சத்தில்) உள்ள இனிய கனியைச் சுவைக்கின்றது. மற்றொரு பறவை அக்கனியைப் பார்ப்பதோடு நின்று விடுகிறது. மாண்டூக்கியம் iii, i, i ) இவ்வுருவகத்தில் உள்ள முதற்பறவை சீவன், இரண்டாம் பறவை ஈசுவரன் என்பது தெளிவு இதே உருவகம் கடோபநிடதத்திலும் வருகின்றது. (கடோ 1, 3, 1, 3, 3;) ஆனால், அவ்வுருவகத்தில் இரு பறவைகளும் சுவைப்ப தாகக் கூறப்படுகின்றது. சீவன் மாயா சம்பந்தத்தினால் உலக அநுபவங்களைத் துறவாமலும், இருமை என்ற உணர்வோடும் விளங்கப் பிரமமாகிய ஈசுவரன் மாயையைத் தன் சத்தியாய் அடிப் படுத்தி அதிலே தோயாது ஒருமை என்ற நிலை மாறாது விளங்கு கின்றான். மாயாபந்தம் நீங்கி ஞானம் கிட்டும்பொழுது சீவனுக் கும் உரிமையுணர்வேற்பட்டு உலக மாயாபந்தங்களிலிருந்து விடுபட்டுப் பிரமமாகும் நிலை உண்டாகும். அதாவது பிரமம் வேறு தான் வேறு என்ற அறியாமை நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானமும் கன்மமும்**

பூரணத்தை - பிரமத்தை - ஞானம் என்ற ஒன்றின் வாயிலாக மட்டுமே அறியலாம். கன்மமும், உபாசனையும் பிரமத்தை அறிய வேண்டும் என்ற நாட்டத்தினை உண்டாக்கும் அளவே துணைபுரியும். ஞானத்தை அடையத் தகுதியுடையனவாக உள்ளங்களை ஆயத்தம் செய்யவும் அவை உதவலாம் ஆனால், அறியாமையை ஒழிப்பதற்கு ஞானத்தைத் தவிர வேறு எவையும் உதவமாட்டா, என்பது சங்கரரின் உறுதியான முடிபாகும் பிரபஞ்சத்தின் மூலம் இன்னது என்றும் அந்த மூலத்தினை நாடித்தேடி அடைதலே வீடுபேற்றுக்கு வழி என்றும் ஞானம் ஒன்றினாலேயே உணர்த்துதல் கூடும். ஞானம் மேலோங்க இதுநாள்வரை தன்னையே நோக்கச் செய்த கன்மங்களின் அர்த்தமின்மையினை ஆன்மா உணர்ந்து செயலிற் பற்றின்றி உலகின் மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கத் தொடங்குகிறது.

**வீடுபேறு**

சமயக் கிரியைகளை நிகழ்த்துதலும், சாத்திரங்களில் விதித்தவற்றைச் செய்தலும், விலக்கியவற்றைத் தவிர்த்தலும் ஞானம் என்று கொள்ளப்படமாட்டா. அவை இம்மைக்குரிய சில நன்மைகளை மட்டுமே வழங்கி அதன்பின் எவ்வித பயன்களையும் தரமாட்டா. பிரம ஞானம் என்பது ஆன்மாவின் பரிபக்குவ நிலையில் உடன் தோன்றுவதாகும். அது உதித்தவுடனேயே அறியாமையிருளானது ஆன்மாவை விட்டு நீங்கி விடுகின்றது. அதன் தளைகள் யாவற்றையும் ஞானமானது அறுத்து அழித்தொழித்து விடுகின்றது, ஆக வீடுபேறென்பது உலகம் பற்றிக் கொண்டுள்ள அறியாமையை முற்றாகக் களைந்து, பிரமம் பற்றிய உண்மையை முற்றாக உணர்ந்து கொள்ளலே. இவ்வுணர்வு மேலோங்கிய ஞானி இவ்வுலகிலேயே வீடுபேற்றுக்குத் தகுதியான பாத்திரமாக, சீவன்முத்தனாக ஆகிவிடுகின்றான். எறும்புப் புற்றின்மேற் கிடக்கும் பாம்புச்சட்டை (தோல்) போல அவன் இவ்வுலகிலிருந்தும் இவ்வுலகோடு தோய்வற்று விளங்குகின்றான். இவனது உடல் இன்னும் விழாத ஒன்றினாலேயே விதேகமுத்தி தாமதமாகின்றது என்பதும் 'பிரமத்தை அறிந்தவன் பிரமமே ஆகின்றான்' என்பதும் சுருதி கண்ட முடிபாகும். அந்த இரண்டற்ற நிலையே வீடுபேறாகும்.

**இராமானுச வேதாந்தம்**

ஆதி சங்கரரது வேதாந்த தத்துவத்தை ஏற்று அதனை மேலும் விளக்க முற்பட்ட அவர் சீடரான சுரேசுவரருக்கும் எதிர்த்துத் தங் கோள் நாட்ட முற்பட்டோருக்குமிடையே கருத்துப் போராட்டமானது தோன்றிச் சிலகாலம் தொடர்ந்தது. இத்தொடர்ச்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக அத்துவித வேதாந்த உலகிலே வாசஸ்பதி என்பாரின் 'பாமதி' என்பதும் பிரகாஷாத்மனுடைய 'விவரணம்' என்பதும் இருவேறு சிந்தனைக் குழுக்களாக (schools) வளர்ந்தன. ஆன்மா பற்றியும் பிரமம் பற்றியும் ஞானத்தைப் பெறும் வாயில்கள் பற்றியும் ஒன்றுக்கொன்று நேர்முரணான கருத்துக்கள் வேதாந்தத் துறையில் நிலவ இவை வழிவகுத்தன. எனினும் சங்கரரிலிருந்து குறிப்பிடத் தக்க அளவு வேறானவையும் எதிரானவையுமான கருத்துக்களைப் புகுத்தி 'விசிஷ்டாத்துவிதம்' என்ற புதியதொரு வேதாந்த தத்துவக் கோட்பாட்டினை நிறுவியவர் இராமனுசரேயாவர் (1017-1137

நூறாண்டுகளுக்கு மேல் வாழும் வாய்ப்புப் பெற்ற இந்தத் தவ ஞானி வேதாந்த தத்துவ உலகில் மட்டுமன்றி வைணவ சமய உலகிலும் அரும்பணியாற்றிப் பெரும்புகழ் படைத்தவராவர். முதலில் யாதவாச்சாரியார் என்ற வேதாந்தியிடத்தும் பின்பு அவரோடு முரண்பட்டு அவரால் விலக்கப்பட்டுத் தம் மாமனாரான பெரிய நம்பியின் வழிகாட்டலில் யமுனாச்சாரியாரிடத்தும் வேதங்களை, சிறப்பாக உபநிடதங்களைக் கற்று, யமுனாச்சாரியாரின் இறுதிக்கால விருப்பத்தினை நிறைவேற்றுமுகமாகப் பிரமசூத்திரத்துக்குப் பேருரை (மாபாடியம்) வகுத்தார். இவரது பேருரை ஸ்ரீபாடியம் என வழங்கும். "நாமே பூரணமான பேருண்மையாவோம். பரமசத்தியாகிய 'ஸ்ரீ' எம் உடைமையாகும். பேதங்களினூடாக எம்மை அடையாளம் காணலாம். எம்மை முற்றாகச் சரணடைவதே முத்திக்கு உரிய ஒரே வழியாகும். வேறு தனி முயற்சிகள் எவையும் வேண்டியதில்லை. மரணத்தின் பின்னரே முத்தி கிட்டும். மகாபுராணமே ஞான குரவர்களிலும் தலைசிறந்ததாகும்" என்று ஒருநாள் பரம்பொருளான விட்டுணு அசரீரியாகக் கூறியதைத் தொடர்ந்து, இராமனுசர், மகாபுராணத்தை ஆதாரமாகக் கொண்டு தமது வேதாந்த தத்துவத்தை வகுத்துக் கொண்டார் என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீபாடியம் மட்டுமன்றி, கீதைக்கும் இவர் பாடியம் செய்துள்ளார். வேதாந்தசாரம், பவதாந்ததீபம், கத்தியத்திரவியம், வேதாந்த சங்கிரகம் ஆகிய நூல்களையும் இவர் யாத்துள்ளார். சங்கரர் மடங்களை நிறுவியது போன்று இவர் பல விட்டுணு ஆலயங்களை நிறுவியதோடு பலரை மதமாற்றம் செய்து வைணவர் ஆக்கினார் எனவும் உரைப்பர். துறவிகளின் வேந்தர் (யதிராசர்) என வைணவ உலகு போற்றும் இராமானுசர், சுதர்சனசூரி, வேங்கடநாதர், மேகநாதாரி, ஸ்ரீநிவாசர் முதலான சீடர் பரம்பரை ஒன்றையும் உருவாக்கியவர். இவர்கள் இராமானுசரது தத்துவக் கோட்பாட்டினைத் தாம் எழுதிய நூல்களூடாக வைணவ உலகிற் பரப்பி நிலைபெறுத்தினர் எனத் தெரிய வருகின்றது. இவர் மறைந்த இரு நூற்றாண்டுகளுக்குப் பின் வைணவ சமயநெறி, வடகலை எனவும் தென்கலை எனவும் இவரது சீடர் பரம்பரையினாலேயே இரு பிரிவுகளை உடையதாய் மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமானுசரின் ஆதார நூல்கள்

இராமனுசருடைய கருத்துக்களும் முடிவுகளும் ஆழ்வார்களது பாசுரங்களாலும் ஆசாரியர்களது உபதேசங்கள். நூல்களாலும் பெருமளவு நெறிப்படுத்தப்பட்டன. மற்றும் நாதமுனிகள், யமுனாச்சாரியார், யாதவாச்சாரியார் (இவரின் குரவர்கள்) பாஸ்கரர், போதாயனர், திரமிடர், முதலான பேதாபேதவாதிகளின் (பிரமம்-சீவன்-உலகு-இவற்றிடையே பேதமும் அப்பேதத்தில் பேதமின்மையும் உண்டு என நிறுவும் வாதம். இவ்வாதமானது சங்கரர் நிறுவிய அபேத வாதத்தினின்றும் வேறுபட்டது. அபேதவாதம் - ''பிரமம்' உலகம் என்று பேதம் கூறுவது அறியாமை. பிரமம் ஒன்றைத் தவிர வேறு இல்லாதபோது பேதம் கூறுவது எவற்றிற்கு?'' என்பது சங்கரரின் வாதம்,) செல்வாக்கும் இவரின் தத்துவக் கோட்பாட்டில் இடம் பெறுகின்றது. வீடுபேறடையப் 'பிரமம் ஒன்றே உள்பொருள்' என்ற ஞானமே வழிவகுக்கும் என்ற சங்கரரின் கோட்பாட்டிலிருந்து இராமானுசர் வேறுபட்டு ஈசுவரனாகிய பிரமத்தை உபாயமாகவும் (வழி) உபேயமாகவும் (அடையும் இலக்கு) கொண்டு சர்வ சமர்ப்பணம் செய்யும் பத்தி நெறியே வீடுபேற்றிற்கு மார்க்கமாகக் கொள்வர். வைணவ ஆகமமாகிய பாஞ்சராத்திரத்தின் வழி நின்றும் இவர் தமது தத்துவக் கோட்பாட்டினை நிறுவ முற்பட்டதன் விளைவே இது. ஆக,சுருதிகளாகிய உபநிடதங்களையும் பிரமசூத்திரத்தையும் மாத்திரமே பிரமாணங்களாகக் கொள்ளாது புராண, ஆகமங்களையும் ஆழ்வார் பாசுரங்களையும் ஆசாரியர்களின் முடிபுகளையும் ஏற்றுச் சங்கரரிலிருந்து வேறுபட்டதோர் முடிவினை இராமானுசர் அடைந்தார் எனலாம். தென்னாட்டிலே பெருகி ஓடிய பத்திவெள்ளத்தினை வடநாட்டிலும் ஓட வைத்தவர் இராமானுசரே என்று கொள்வதும் குறிப்பிடத்தக்கதே.

### அறிவினைப் பெறும் மூன்று வாயில்கள்

காட்சி (பிரத்தியட்சம்), கருதல் (அனுமானம்), நூல் (சுருதி அல்லது ஆகமம்) என்ற மூன்றையும் வாயில்களாகக் கொண்டு அறிவை அடையலாம என்பது இராமானுசரது முடிபு.

காட்சி: மெய், வாய், கண், மூக்கு, செவி ஆசியவை ஐம்பொறிகள் எனப்படும். இப்பொறிகள் ஒவ்வொன்றும் மனத்தோடு தொடர்பு கொண்டு ஒரு பொருளை ஆன்மா அறிகையில் காட்சியும், காட்சியினால் உண்டாகும் அறிவும் ஏற்படுகின்றன. இக் காட்சியினைப் புலக்காட்சி (perception) என்பர்.

காட்சி இரண்டு வகைப்படும். காணும்பொருள் இன்ன சாதியை அல்லது இன்ன வகுப்பைச் சேர்ந்தது. இன்ன இன்ன உறுப்புக்களால் ஆனது என்று பிரித்துணராது முழுமையாகக் காண்பது ஒரு வகை. இது நிர்விகற்பக் காட்சி எனலாம். முதன் முறையில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளைக் காண்கையில் ஏற்படும் காட்சி நிர்விகற்பக் காட்சியாகும். (Indeterminate Perception)

அதே பொருளை இரண்டாவது மூன்றாவது சந்தர்ப்பங்களிற் காண்கையில் முற்குறித்த விபரங்களையும் அறிந்துகொண்டு காணும் காட்சி சவிகற்பக் காட்சியாகும். (Determinate Perception)

நியாயம் என்னும் தரிசனகாரர் இவ்வாறே காட்சியை இரு வகைகளாகப் பிரித்து உணர்த்துவர். இப்பிரிவினை ஏற்றாலும் இராமானுசர் நிர்விகற்பக் காட்சியின்போது நாம் வெளிப்படப் பிரித்துணராதவையும் அவற்றின் உள்ளீடாக உள்ளவையே எனக் கொள்வதில் நையாயிகரினின்றும் வேறுபடுகின்றார். பொருள்களிடையே பேதங்கள் அடிப்படையில் உள்ளன என்ற முடிபுடையவராதலின் இராமானுசர் இவ்வாறு கொள்கின்றார். "பிரித்துக் காண்பது அறியாமை. பூரணமாகக் காண்பதே ஞானம்" என்னும் சங்கர வேதாந்தத்தினின்றும் இவர் முரண்படுவது இவ்வகையிலேயே. மற்றும் கருதல் என்பதில் இவருக்கும் நையாயிகர் வைசேடிகர் முதலியோருக்கும் ஒற்றுமை உள்ளது. நூற்பிரமாணமாகிய சுருதியைப் பொறுத்த வரையில் சங்கரரைப் போலன்றி இராமானுசர் வேதங்களின் கன்ம, ஞான காண்டங்களையும் வைணவ ஆகமமாகிய பாஞ்சராத்திரத்தையும் பிரமாணங்களாகக் கொள்வது முன்னரும் குறிப்பிடப்பட்டது.

## அறிவும் பிழை அறிவும்

அறிவின், சகல அமிசங்களும் பிரித்தறிதலிலேயே தங்கியுள்ளன என்பதும் பிரித்துணரமுடியாத எப்பொருளும் இல்லை என்பதும் இராமானுசரின் முடிந்த முடிபு. "எவ்வகை அறிவையும் அதன் தொடர்புடைப் பொருள் ஒன்று வெளியில் இருக்கும் பொழுதே அறிதல் சாத்தியமாகும். மனம் படைக்கக்கூடிய பொருள் என எதுவும் இல்லை" என்னும் கருத்துடைய நையாயிகரோடு இராமானுசர் கருத்தொற்றுமை உடையவர். ஒரு பொருளானது பதார்த்தமாகவும் (Substance) அதேவேளையில் பதார்த்தப்பண்பாகவும் (attribute) உள்ளது. உதாரணமாக, விளக்கு என்னும் பதார்த்தத்திற்கு ஒளி என்பது பண்பாக உள்ளது. அதே ஒளியானது பதார்த்தமாகும்பொழுது கதிர்கள் பண்புகளாகின்றன. இதே போன்று கடவுளாகிய பதார்த்தத்தின் பண்பாக உலகம் உள்ளது. அதே சமயம் உலகமானது தான் பதார்த்தமாகவும் சீவன்கள் சடப்பொருள்கள் என்பவற்றைப் பண்பாகவும் கொண்டுள்ளது. இவ்வாறே சீவன்களும், சடங்களும் பதார்த்தங்களாகவும் பண்புகளாகவும் உள்ளன. அறிவும் அத்தகையதே. அது ஒடுங்குதல், விரிதல் உடையதாதலின் பதார்த்தமாகவும் சீவனுக்கோ, இறைவனுக்கோ உடைமையாதலின் பண்பாகவும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதார்த்தங்களை இராமானுசர் இருவகையினவாகப் பிரிப்பர். அறிவுடையன (சேதனம்) ஒருவகை. அறிவற்றவை (சடம்) இன்னொருவகை. இவற்றிலிருந்து அறிவு வேறானதாகும். அது சடமன்று. ஏனெனில் அறிவுடையது. அது ஆன்மாவும் அன்று. ஏனெனில் அது தானாக அறிவதன்று. ஆன்மாவிற்கு அறிவை ஏற்படுத்தும் அளவிலேயே அதன் பயன்பாடு. அஃதாவது அறிவு தனக்கு எவ்வகையிலும் பயன்படாது சீவன்களுக்கே பயன்படுகின்றது. அது தன்னையும் தன்னோடு தொடர்புபடும் பொருளையும் வெளிப்படுத்த வல்லதாகும் (வெளிச்சம் தன்னையும் பானையையும் புலப்படுத்துவது போல்). ஆன்மாவோ தன்னையும் பொருளையும் அறியுமேயன்றிப் பொருளைப் புலப்படுத்த ஆற்றல் அற்றது. தன்னை மட்டுமே புலப்படுத்தும்.

சங்கரர், 'ஆன்மாவானது ஞானசொரூபமாக உள்ளது, என்று கொண்ட கருத்தை இராமானுசர் மறுக்கின்றார். மாயையால் மறைப்புண்ட சீவனில் மாயை நீங்க ஞானம் சுயமாகவே வெளிப்பட்டுத் தோன்றும் என்பதும் இதனால் மறுக்கப்படுகின்றது.

**ஈசுவரன்**

அறிவுபற்றிய இராமானுசரின் முடிவை அடிப்படையாகக் கொண்டு அவர் பிரமம் அல்லது ஈசுவரன் என்பதற்குக் கூறும் வரையறைகள் பின்வருவன:

1. பிரமம் என்பது நிர்க்குணம் உள்ளதன்று. நிர்விசேடம் கொண்டதும் அன்று. அதற்குக் குணங்கள் உள்ளன. உபநிடதங்கள் பிரமத்தை நிர்க்குணத்தது என உரைத்ததன் பொருள், அது எவ்வித துர்க்குணங்களும் (தீயகுணங்களும்) அற்றது என்பதே. பிரமம் சகல உத்தம குணங்களும் பொருந்தியது. எல்லாவித பூரணத்துவத்தையும் தன்னுள் அடக்கியது. ஞானம்; நன்மை, அழகு, ஒளி, அன்பு, ஆற்றல் முதலானவை பிரமத்துக்கு உரிய குணங்களாகும்.

2. பிரமம் உருவுடையது. சடமாகிய உலகும் சத்தாகிய சீவன்களும் அதன் உடல். பிரமம் அவற்றின் உயிராய் உள்நின்று இயக்குகின்றது. எனினும், அது இவற்றையெல்லாம் கடந்ததுமாகும்.

3. பிரமம் போலவே உலகும் உயிரும் உள்பொருள்கள்; உண்மைப் பொருள்கள்; உருவுடையவை.

இக்கூற்றுக்களுக்கு ஆதாரங்கள் உபநிடதங்களிலேயே உள்ளன. எடுத்துக்காட்டுகள் வருமாறு:

(1) முப்பொருள்கள் அநாதியாக உள்ளன. எல்லாம் அறியும் அறிவும் உல்லாவற்றையும் இயற்றவல்ல ஆற்றலும் பொருந்திய இறைவன், அநாதியானவையும் ஆற்றலற்றவையுமான சீவன்கள், அநாதியான சடவஸ்து (பிரபஞ்சம்) என்பனவே அம்மூன்றுமாம்.

— (சுவேதாசுவதரம் 1-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இது ஒன்றே அறியவேண்டியது. வேறொன்றுமன்று. அநுப விப்போன் (போக்தா), அநுபவம் (போகம்), இயக்குவோன் (பிரேரிதம்) இம்மூன்றையும் பிரமம் தன்னுள் அடக்கியுள்ளது. இம்மூன்றையும் அறிந்தோன் பிரமத்தை அறிந்தவனாவான்.

— (சுவேதாசுவதரம் 1-9)

(3) ஒரே பரம்பொருளே அனைத்தையும் இயக்குகின்றது. எல்லாம் தன்னுள்ளே அடங்கி நிற்க, அவற்றைக் கட்டுப்படுத்துவது அதுவே. அதுவே யாவிலும் உயர்ந்தது. அதனிலும் உயர்ந்தது எதுவும் இல்லை. அதற்கு வெளியில் ஒன்றும் இல்லை. அதுவே பிரபஞ்சம் அனைத்திலும் நிறைந்தது.

— (சுவேதாசுவதரம் 1 - 12)

(4) யாவும் பிரமத்திலேயே தோன்றி, பிரமத்தில் வாழ்ந்து பிரமத்துள் மீண்டும் செல்கின்றன.

— (நைத்திரீயம் 3- )

இறைவனும் (பிரமமும்) சீவர்களும் (ஆன்மாக்களும்) உலகமும் (பிரபஞ்சமும்) பிரிக்கொணாதவாறு ஒன்றாகி நிற்கும் நிலையை 'அப்பிரதக்சித்தி' என்ற சொற்றொடர் கொண்டு இராமானுசர் குறிப்பர்.

ஈசுவரனுக்கும் சீவன்கள், உலகம் என்பவற்றுக்குமிடையேயுள்ள பேதத்தினை உலகிலுள்ள மூவகைப் பேதங்களைக் காட்டி அவற்றுள் ஒரு பேதமாக இராமானுசர் காட்டுவர். அவை வருமாறு:

(1) விஜாயாதிபேதம்: இருவேறு சாதிகளுக்கிடையே காணப்படும் பேதம்.

உ+ம்: பசுவுக்கும் குதிரைக்கும் உள்ள பேதம்.

(2) சுஜாதியபேதம்: ஒரே சாதியினுள் காணப்படும் பேதம்.

உ + ம்: பசுவுக்கும் பசுவுக்கும் உள்ள வேறுபாடு.

(3) சுவகதபேதம்: முதற்பொருளுக்கும் அதன் பகுதிகள் அல்லது உறுப்புக்களுக்குமிடையே காணப்படும் பேதம்.

உ + ம்: மரத்திற்கும் அதன் தண்டு, கிளை, இலைகளுக்கும் இடையே காணப்படும் பேதம்.

இவற்றுள் மூன்றாவதாகிய சுவகதபேதமே இறைவனுக்கும் உலகம், உயிர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடாகும். இதற்குரிய மேலதிக விளக்கத்தினை கி. லக்ஷ்மணன் அவர்களுடைய இந்திய தத்துவஞானம் என்ற நூலிலே காணலாம். (மேற்படி நூல் பக்கம் - 336. இரண்டாம் பதிப்பு) அநாதியானவனும், சீவன்களுள்ளே அந்தர்யாமியாய் நின்று அவற்றை இயக்குபவனும் உயிருள் உயிராய் உறைபவனும் ஈசுவரனே என்பது இராமானுசர் கொண்ட முடிபாகும். (இதன் விளக்கம் விசிட்டாத்துவிதம் என்ற உபதலையங்கத்தின் கீழ்த் தரப்படும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஞ்சராத்திர ஆகமத்தை ஆதாரமாகக் கொண்டு ஈசுவரனின் பல்வேறு பண்புகளையும் இராமானுசர் மேலும் விளக்குவர்.

(1) யாவையும் கடந்த பிரமம் தமக்கெனத் தெய்வத் திருமேனியினைக் (அப்ராக்கிருத தேக விசிட்டம்) கொண்டுள்ளார். எவ்வித குறைகளுமற்ற நிறைவே கொண்ட அவர் பிரபஞ்சத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் முதலாகிய தொழில்களைப் புரிகின்றார். அவரின் சத்தியே இலட்சுமி. அவர் நாராயணன், வாசுதேவன் ஆகிய திருநாமங்கள் கொண்டு அழைக்கப்படுகின்றார். சுத்த சத்துவமாகிய உண்மை ஞானம் கொண்டு அமைந்த வைகுந்தமே அவர் இருந்தருளும் இடம். இது நித்திய விபூதி எனப்படும். அவர் அறிவிலிகளுக்கு அறிவாயும், ஆற்றலற்றோருக்கு ஆற்றலாயும், குற்றவாளிகளுக்கு மன்னிப்பாயும், துன்புற்றோருக்கு அருளாயும் தூய்மையற்றோருக்குத் தூய்மையாகவும் வெளிப்பட்டு அருள் புரிவார்.

(2) ஈசுவரன் வியாப்பிய நிலையில் (உள்நின்றொளிரும் நிலை) அந்தர்யாமி, யாவையும் கடந்த நிலையில் நாராயணன், பரவாசுதேவன், இதனைப் பரம் எனவும் குறிப்பர். படைத்தலின் போது வாசுதேவனாகவும் (பரவாசுதேவனில் வேறானது) காத்தாள்கையில் அநிருத்தன் எனவும், அழித்தலின் போது சங்கர்ஷணன் எனவும் அவர் பெயர் பெறுவர். இவை வியூகம் என்ற பிரிவுள் அடங்கும். உலகிடை மனிதன், விலங்கு போன்ற உருவந் தாங்கித் தோன்றும் நிலையில், இராமன், கிருஷ்ணன், நரசிம்மம், மச்சம், கூர்மம் என்ற பல நாமங்ளைத் தாங்குவார். இவை அவதாரத் திருமேனிகளாகும். அடியார்களுக்கு ஆலயங்களில் விக்கிரகங்களை ஊடகமாகக் கொண்டு அருள் பாலிப்பது அர்ச்சத் திருமேனி எனப்படும்.

இவ்வாறு சங்கரருக்கு நேர்மாறாகப் பிரமம் ஊர், உரு, குணம், குறி யாவும் கொண்ட சகுணப்பிரமமாகத் தோன்றுவதே உயர்ந்த நிலை என்றும், அதுவே பிரமமாகிய ஈசுவரனுக்கு உரியது என்றும் இராமனுசர் நிறுவ முற்படுகின்றார்.

ஆன்மா அல்லது அகம் (Self)

சீவான்மா என்றும் சீவன் என்றும் ஆன்மா என்றும் அகம் என்றும் சிறுச்சிறு கருத்து வேறுபாடுகளுடன் தத்துவ உலகிலே கையாளப்படும் உயிர்கள் இராமானுசரைப் பொறுத்தவரையில் ஈசுவரனின் சரீரமாகும். அஃதாவது ஈசுவரனின் பதார்த்தமாக (பிரகாரமாக) அவை விளங்குகின்றன. இருப்பினும் அவை தம்மளவில் ஆன்மிகம் ஆகிய பதார்த்தமும், அறிவாகிய பண்பும் கொண்டனவே, அவை அநாதியானவை, உண்மையானவை. ஞான ஒளி பூண்டவை. இவை படைக்கவோ அழிக்கவோ முடியாத இயல்புகள் கொண்டவை. ஆனால், இஞ்ஞான ஒளி அவற்றின் கன்மப் பயன்களுக்கேற்ப மறைப்பு நிலையை அடையப் பிரளயத்தின்பின் நிகழும் மீள்படைப்பின் போது உலகிடை வந்து உடல்களைத் தாங்கிச் செயலாற்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்குகின்றன. கன்மமும், சீவனும் தொடர்பு கொண்ட காலத்தைக் குறித்தல் இயலாது. அது அநாதியானது. ஆனால், சீவன் முத்திப் பேறடையும் பொழுது கன்மம் அதனை விட்டு நிரந்தரமாக நீங்கிவிடுகின்றது.

அநாதியானதாயினும், ஞான ஒளி பூண்டதாயினும் அது தனித்ததாயும், அடிக்கடி பிறப்பெடுப்பதாயும் கடவுளின் மிகச்சிறியதொரு கூறாயும் விளங்குகின்றது, (அதன் அளவு அணுப்பிரமாணமானதாகும்) பிறப்பிறப்புக்களால் அதன் அடிப்படைப் பண்பாகிய ஞான ஒளி மாறுவதில்லை. மறைக்கப்படுகின்றது. அவ்வளவே. எத்தனை பிறப்பெடுத்தாலும் இந்நிலையே தொடரும். ஆன்மா அல்லது சீவன் உடலிலும் வேறானது என்பதும் உணரத்தக்கதே.

எண்ணுக்கணக்கற்ற கோடிக்கணக்கில் சீவன்கள் உள. அவை அறிவோன் (ஞாதன்), செய்வோன் (கர்த்தா), அநுபவிப்போன் (போக்தா) ஆகிய மூன்றம்சங்களை உள்ளடக்கியவை. இவை துயில் நிலை, விழிப்புநிலை, முத்திநிலை ஆகிய மூன்று நிலைகளின் போதும் அவற்றின் பதார்த்தங்களாகவும் பண்புகளாகவும் இருந்துவருகின்றன. ஆனால், இவற்றின் இயற்கையான ஞான ஒளி கன்மத்தினாலும். பிறப்பினாலும் மறைக்கப்பட்டுள்ளது. இம் மறைப்புக்கள் நீங்க, ஞான ஒளி உண்மையான பொருளை அவற்றிற்குக் காட்ட, அவை அதன் பாதத்தில் சரணடையும். இச்சரணாகதியே வீடுபேறாகும்.

இராமனுசர் பலவாகிய ஆன்மாக்களை முப்பிரிவுகள் கொண்டவையாக வகுப்பர்.

1. நித்திய மூத்தர்: எக்காலத்தும் விடுதலையடைந்தவராய், கட்டின்றிப் பிறப்பிறப்பின்றி இறைவனுக்கு நிலையான தொண்டு பூண்டவர். இவர்கள் வைணவ பத்தியுலகில் நித்திய சூரிகள் எனவும் பெயர் பெறுவர்.

2, முத்தர்: ஒருகால் கன்மத் தளையுள் கட்டுண்டு கிடந்து தமது முயற்சியினால் அதனின்று விடுபட்டு முத்திக்குத் தகுதியானோர்

8. பத்தர்: அல்லது பெத்தர்: சம்சார பந்தத்திற் கட்டுண்டு கன்மங்களைச் செய்து பிறப்பிறப்புக்கு உள்ளாகும் கீழ்நிலைச் சீவாத்துமாக்கள். சீவன்களை அதிமானுடம், மானுடம் விலங்கு, அசைவிலி (அசரம்) என மேலும் நான்கு பிரிவுகளாக வகுப்பதுண்டு.

### தளையும் விடுதலையும்

அறியாமையும் கன்மமுமே சீவன்களைக் கட்டிவைக்கின்ற தளைகளாகும். ஞானத்திற் சுயமாகவே ஒளிர்ந்த சித்தாகிய ஆன்மா கன்மத்தாற் கட்டுண்டது எவ்வாறு? இராமனுசர் சமணரைப் போலக் கன்மம் தொடக்கமற்ற அநாதி வஸ்து என்று கொள்வர். கன்மத்திற்கேற்ற உடல், கரணங்கள் முதலியன சீவனுக்குக் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சம்சாரம் என்ற கடலிலே கிடந்து இன்பதுன்பங்களில் அழுந்தி ஆன்மா பிறவிகளை மாறி மாறி எடுக்கின்றது. ஆகவே தன்னைச் சூழ்ந்து கிடக்கும் சம்சார பந்தத்திலிருந்து சீவன் விடுதலை பெறல் வேண்டும். இதற்குக் கன்மம், ஞானம் என்பவற்றின் ஒத்திசைவு (Harmony) அவசியம். இந்த ஒத்திசைவு, ஞான கன்ம சமுச்சயம் எனப்படும். இவ்விடத்தில் வேதத்தில் கன்ம காண்டப் பகுதி (பூர்வமீமாம்சை)யிற் சொல்லப்பட்ட வேள்வி முதலியவற்றைத் தவறாது இயற்றல் வேண்டும். உத்தரமீமாம்சை (வேதாந்தம்)யைக் கற்பதற்கு முதற்படி பூர்வ மீமாம்சையிற் கூறியவற்றை இயற்றுதலாகும். இவ்வாறு இயற்றுகையிற் சொந்த உலகியற் பயன்களைக் குறிக்கொள்ளாது இறைவனைப் பிரீதி செய்தலையே நோக்கமாகக் கொண்டு செயல் புரிவது இன்றியமையாததாகும். அப்பர் சுவாமிகள் உரைத்தருளிய ''தங்கடன் அடியேனையும் தாங்குதல், என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற திருவாக்கும், பகவத்கீதை குறிக்கும் நிஷ்காமியகர்மமும் (பயனில் பற்றின்றிச் செயல் புரிதல்) இராமானுசரது கடவுளைப் பிரீதி செய்யும் தன்னலம் கருதாத் தொண்டுடன் ஒப்புநோக்கத்தக்கன.

**வீடுபேறு என்னும் விசிட்டாதுவிதம்:**

இறைவன் சரீரி. உலகும், உயிர்களும் அவனுக்குச் சரீரம். அதாவது இம்மூன்றற்கும் உள்ள தொடர்பு சரீரி - சரீர அல்லது சரீர சரீரி சம்பந்தமாகும். வேறுவகையிற் சொல்வதானால் உயிரும் உலகும் இறைவனுக்கு விசேடணம். இறைவன் இவற்றின் விசேடியம், இம்மூன்றும் இணைந்துள்ள நிலை விசிட்டமாகும். வெவ்வேறியல்புடையனவாயினும் இவை ஒன்றிலிருந்து ஒன்று பிரித்து இரண்டு என்று உணரமுடியாத ஒருமை என்னும் அத்துவிதநிலை உடையவை. (இரண்டல்ல ஒன்றே. அது பிரமமே என்பது சங்கரர் கண்ட அத்துவிதம். அது கேவலாத்துவிதம் எனப்படும். கேவலம் இரண்டில்லா ஒன்று) இந்நிலைக்கு விசிட்டாத்துவிதம் என்பது பெயர். இயல்பால் பேதமுடையனவாயினும் சேர்க்கையால் அபேதமாக இவை இருக்கின்றன என்று இராமானுசர் வாதிப்பதால் இவரது வாதம் பேதாபேத வாதம் எனப்படும்.

வீடுபேறு என்பது சீவான்மாக்கள் பரமான்மாவுடன் கூடுவதன்று. பரமான்மாவின் உறுப்புக்களே தாம் என்ற ஞானத்தை அடைந்து அந்த ஞானத்தின்வழியில் இறைவனது பாதாரவிந்தங்களிலே அமர்ந்து சேவை புரிதலாகிய நித்தியானந்தப் பேறே இராமானுசர் குறிக்கும் வீடு பேறாகும்.

இந்தப் பேற்றிற்குப் பரம்பொருளையே சரணாகதியடையும் பிரபத்தி மார்க்கமே உகந்தது என்பது இராமனுசரின் முடிந்த முடிபு. பிரபத்தியின் ஆறுபடிகள் பின்வருவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கடவுளைப் பிரீதிப்படுத்தலையே நினைத்தலும் செய்தலும்.
2. கடவுளுக்குப் பிரீதியற்றவற்றை நினையாமையும் செய்யாமையும்.
3. கடவுள் காத்தருள்வார் என்று நம்புதல்.
4. காத்தருளுமாறு கடவுளுக்கு விண்ணப்பிததல்.
5. கடவுளுக்கே முழுமையாக ஆன்மாவைச் சமர்ப்பித்தல்.
6. கடவுளையன்றி வேறு ஆதாரம் இல்லை என்று யாவிற்கும் அவரிலேயே தங்கியித்தல்.

இவ்வாறு சரணாகதியடைந்தால், சீவனின் பொறுப்புக்கள் யாவும் நீங்கி இறைவனே அதனைக் காத்தருளும் பொறுப்பினை முற்றாக ஏற்றருள்வார் என்பது இராமானுசர் காட்டும் வழியாகும்.

**சங்கரர் குறிக்கும் அவித்தைக்கு**
**இராமானுசரின் மறுப்பு**

1. அவித்தை எதனைத் தன் வாழிடமாகக் கொண்டுள்ளது? பிரமத்தையே அது வாழிடமாகக் கொண்டதென்றால் பிரமத்தின் நிர்க்குண இயல்புக்கு அது முரணான முடிபாகும். பேரறிவும் பூரணத்துவமும் நிலைபேறுடைமையும் உடைய தூய பிரமத்தில் அறியாமையும் மாறும் இயல்பும் உடையதான அழுக்கு நிறைந்த அவித்தை எவ்வாறு தோற்றும்? பூரண ஞனத்தில் அறியாமையாகிய அவித்தைக்கு இடம் ஏது? காரணமாகிய பிரமம் தன் வெளிப்பாட்டுக்குக் காரியமாகிய அவித்தையயிலே தங்கியிருக்கிறது என்பது பொருந்துமா? ஆக, அவித்தை என்பது இல்பொருள். சங்கர வேதாந்திகளின் கற்பனை.

2, சுயம்பிரகாசமான பிரமத்தை இருளான அவித்தை மூடுவது என்பது அபத்தம். ஞான தீபமான பிரமத்தை அந்தகாரமான அவித்தை திரையிட்டு மறைப்பது நடக்கக்கூடிய காரியமா? பகல்மீது இருள் திரையாகக் கவிதல் இயலுமா?

3. அவித்தையின் இயற்கை எத்தகையது? அது இலதா? உளதா? அல்லது இரண்டுமா? இரண்டும் அற்றதா? அவித்தை என்பது அறிவினின்றும் விடுபட்டது. அறிவில்லாதது எனில் அது உண்டு என்பதன் பயன் யாது? அது உளதும் இலதும் ஆனது என்பது முரணுரையாகும். அது உளது என்று கொண்டால் உள்ளது அழியாது என்ற சித்தாந்தப்படி அதற்கு அழிவே இல்லை என்று ஆகிவிடுமன்றோ? இல்பொருள், உள்பொருளை மறைப்பது என்பதும் நடக்கக்கூடியதன்று.

4. அவித்தை வரைவிலக்கணம் செய்ய முடியாததும் விளக்க முடியாததுமாகுமெனில் இதுவும் ஒரு முரணுரையே. சங்கர வேதாந்திகள் அது உளதோ, இலதோ என்பதையே வரைவிலக்கணம் செய்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமை, விளக்கமுடியாமை என்று கொள்வார்களாயின் அதுவும் முரணுரையே. ஆக, இக்கூற்று வெறும் வார்த்தை சாலமேயன்றி வேறன்று. உளது, இலது என்பதற்கு நடுப்பதமாக 'உளதிலது' என்று ஒன்றில்லை. இதனை மறுப்பது சிந்தனையையே மறுப்பதற்குச் சமானமாகும்.

5. அவித்தை என்பதைக் காட்சி, கருதல், நூல் என்ற மூல வைகைப் பிரமாணங்களில் எதனைக் கொண்டும் நிறுவுதல் இயலாது.

(6) அவித்தையை ஞானம் ஒன்றே போக்கும் என்பதும் ஏற்கக் கூடியதன்று. பதார்த்தம், பண்பு என்ற இரண்டுமற்ற, இரண்டைப் பற்றியும் அறிய இடமளிக்காத, உளதோ, இலதோ என்று தீர்மானிக்க முடியாத ஒன்றினைத் தூயஞானம் போக்கும் என்பது பொருந்தாது.

(7) பாவரூபமானது (தனக்கென இருப்புடைய) அவித்தை என்றால் அதனை ஞானத்தினால் போக்குவது இயலாத காரியம்.

(இங்கு அவித்தை எனப்படுவது மாயையையும் குறிப்பதாகக் கொள்ளல் வேண்டும்.)

## இராமனுசரின் தத்துவக் கோட்பாடு பற்றிய மதிப்பீடு

''சங்கரரின் தத்துவக் கோட்பாட்டினை இறுக்கமானதும் இயக்கமற்றதுமாய் எம்மை முறைத்துப்பார்த்து அச்சுறுத்துகின்றது'' என்றும் ''முழுமையான இருள்மீது அளவுகடந்த ஒளிவெள்ளப் பாய்ச்சல்'' என்றும், ''பாண்டித்தியக் குற்றத்தின் திருத்தமான அமைப்புக்கு நல்லதோர் உதாரணம்'' என்றும் குறை கூறுவது போன்றே இராமானுசரின் தத்துவக் கோட்பாட்டிலும் அறிஞர் பல குறைபாடுகளை எடுத்துக் காட்டுவர். அவற்றுள் பிரதானமானது அவர் பிரமத்துக்கும் பிரபஞ்சத்துக்கும் (உயிர் உலகம்) உள்ள இணைவினையும் உறவு முறையையும் தெளிவாகக் காட்டத் தவறிவிட்டார் என்பதாகும். சடம் (உலகு), சீவன், இறை என்ற மூன்று வெவ்வேறு குண இயல்புகள் கொண்டு பூரணப்பரம்பொருள் (Alsolute) அமைந்துள்ளதாகக் கூறுகின்றார். ஆனால் பூரணப்பொருளோடு ஈசுவரனை அவர் அடையாளம் காட்டுவது முரணாகும். பூரணமற்றவையும் சடத்தன்மை வாய்ந்தனவுமான உயிரும் உலகும் ஈசுவரனின் பண்பு எனில் (Attributes) அது இறைவனின் நிறைவுடைமையைக் குறைத்ததாகாதா? ஒரே பொருள் பதார்த்தமாகவும் பண்பாகவும் விளங்குவதாய் அவர் கொண்ட முடிவும் தவறானது; தெளிவற்றது. பதார்த்தங்கள் என்பன தனித்த பண்புடையவை. அவை தம்மளவில் சுதந்திரமானவை என்று வரையறை செய்து கொண்ட இராமானுசர் இவ்விரண்டியல்புமுடைய சீவன்களும் உலகும் ஈசுவரனிலே தங்கியிருப்பதாக முடிவு செய்தது பெரும் முரண்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல்வேறு காரசாரமான விமர்சனங்கள் மூலம் இராமானுசரின் தத்துவக் கோட்பாடு கண்டனத்துக்குள்ளான போதும் வைணவ சமய உலகில் பிரபத்தி மார்க்கம் உறுதியாய் இடம்பெற உகந்த தளத்தை அமைத்த வகையிலும், தத்துவத்தில் சமய, ஒழுக்க நெறிகளைப் புகுத்திய வகையிலும் அவரது வேதாந்தம் பயனுள்ளதொரு பணியினை ஆற்றியுள்ளது என்பதை மறுத்தல் இயலாது.

### மத்துவ வேதாந்தம்

மாதவாச்சாரியார் எனவும் ஆனந்த தீர்த்தர் எனவும் பூரணப் பிரக்ஞர் எனவும்வேறு பெயர்களாலும் அழைக்கப்படும் மத்துவர் 1198 ஆம்ஆண்டு உடுப்பி என்ற இடத்தில் தோன்றினார். இவரை வாயுவின் அவதாரமாக வைணவ உலகு போற்றும் இவர், அச்யுதப்பிரேக்ஷர் என்பவருடைய சீடர். சைவசித்தாந்த ஞானியும் சிவஞானபோத ஆசிரியருமான மெய்கண்டாருக்கு அவர் தந்தையாரின் குருவான அருணந்தி சிவாசாரியாரே சீடரானதுபோல, அச்யுதப்பிரேக்ஷர் ஆரம்பத்தில் மத்துவரின் குருவாக விளங்கிப் பின்னர் இவரின் தத்துவக் கோட்பாட்டினைத் தாம் ஏற்று இவருடைய சீடராய் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும், பிரமசூத்திரத்துக்கு மத்துவர் எழுதி பாடியம் 'மத்துவ பாடியம்' எனப்படும். இதனோடு பகவத்கீதைக்கும் பாடியமும் மேலும் முப்பத்தைந்து நூல்களும் இவரால் எழுதப்பட்டவையாகும். அணுவியாக்கியானம், பாகவத தாற்பரிய நிர்ணயம், மகாபாரத தாற்பரிய நிர்ணயம், விஷ்ணு தத்துவ நிர்ணயம், தத்துவப் பிரகாசிகை உரை என்பன அவற்றுட் சில,

வேதாந்தம் என்ற போர்வையிலே பௌத்தர்களின் சூனியவாதத்தைப் பரப்பியவர்கள் என்றும், ஏமாற்றும் பிசாசுகள் என்றும் ஏகான்மவாதிகளான சங்கரவேதாந்திகளைச் சாடும் மத்துவர், இருமைவாதியாவர். எனவே இவரது தத்துவக்கோட்பாடு துவிதம் அல்லது துவைதம் என வழங்கும்.

### மத்துவர் கூறும் ஐந்துவகைப் பேதங்கள்:

சங்கரர் அபேதவாதி, அஃதாவது பிரமம் ஒன்றே உள் பொருள், மற்றவை யாவும் தோற்றங்கள் என்ற அவர் முடிவில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் இல்லை என்ற கருத்தும் அடங்கியிருக்கின்றது. எனவே, அவர் பேதம் கூறவேண்டிய இரண்டாவது பொருள் இல்லை, என்றாகின்றது. இராமானுசர் பிரமம் உயிர், உலகம் என்ற முப்பொருள்களிடையே பேதமும், அவை பிரிக்கொணாதவை என்பதால் அபேதமும் உடையவை என்றமையால், அவர் பேதாபேதவாதி. மத்துவரோ பிரமம், உயிர், உலகம் என்ற மூன்றினிடையேயும் எக்காலத்தும் பேதம் உண்டு என்று வாதித்தமையால் அவர் பேதவாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த முப்பொருள்களிடையிலும் ஐந்துவகையான பேதங்கள் உள்ளன. அவையாவன:

1. சீவன்களுக்கும் சீவன்களுக்கும் இடையிற் காணப்படும் பேதம். இது சீவபரஸ்பரபேதம் எனப்படும்.

2. சீவன்களுக்கும் ஈசுவரனுக்கும் இடையிலுள்ள பேதம். இது சீவேசுவர பேதம் எனப்படும்.

3. சீவன்களுக்கும் சடப்பொருள்களுக்கும் இடையிலுள்ள பேதம், இது சீவசடபேதமாகும்.

4. சடப்பொருள்களிடையே காணப்படும் பேதம். இது சட பரஸ்பர பேதமாகும்.

5. சடங்களுக்கும் ஈசுவரனுக்குமிடையே காணப்படும் பேதம் சடேசுவரபேதமாகும்.

இராமானுசரும் மத்துவரும் ஒற்றுமைப்படும் இடங்கள்.

1. இராமானுசரைப் போலவே மத்துவரும் அறிவைப் பெறும் வாயில்களாகக் காட்சி, கருதல், நூல் ஆகிய மூன்றையும் கொள்வார். அவரைப் போலவே இவரும் விட்டுணுவையே ஈசுவரனாக ஏற்பார்.

2. மத்துவருடைய வேதாந்தக் கோட்பாட்டிற்கும் இராமானுசருடையது போலவே வேதங்களின் பூர்வ, உத்தர மீமாம்சைகள் இரண்டும் ஆதார நூல்களாகக் கொள்ளப்படும்.

3. இராமானுசரைப் போலவே ஈசுவரன், உலகம், சீவன்கள் ஆகிய மூன்றும் அநாதியான உள்பொருள்கள் என்பதை மத்துவரும் ஏற்பர்.

4. பூரண சுதந்திரம் உடையவர் ஈசுவரனே என்பதிலும் உலகும் சீவன்களும் அவரிலேயே தங்கித் தமக்கெனச் சுதந்திரம் அற்றவையாய் உள்ளன என்பதிலும் இருவருக்கும் ஒற்றுமை உண்டு.

5. ஈசுவரன் எல்லையில்லாத கல்யாண குணங்கள் கொண்டவர் என்பதிலும் இருவருக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

ஈசுவரன்

இருப்பு, ஞானம், ஆனந்தம் என்பன ஈசுவரனுக்குரிய பதார்த்தங்கள் (Essence) ஆகும். பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பவரும் அழிப்பவரும் அவரே. தெய்விகத் திருமேனியுடைய அவர் யாவும் கடந்தவர். அதே வேளையில் சீவன்களின் உள்நின்று அவற்றை இயக்கி ஆள்பவரும் ஈசுவரனே. சிலரைத் தண்டித்தும் பலர்க்கு அருள்பாலித்தும் விளங்குவது அவர் இயல்பு. பூரணத்துவம் வாய்ந்த அவர் கன்மங்களை நெறிப்படுத்தும் தலைவருமாவார். பத்தி ஒன்றினாலேயே அவரைப் பிரீதிப்படுத்தலாம். பல்வகைத் திருமேனிகள் தாங்கினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரம் எடுத்தும் சீவன்களைக் காத்தருளும் ஈசுவரன் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களிலும் எழுந்தருளி அடியார்களின் வழிபாட்டிற்கு உரியவராகின்றார். இலட்சுமி அவருக்குச் சக்தியாவர். அவரைப் போலவே யாவையும் கடந்தும் அநாதியாயும் விளங்கும் இலட்சுமி ஓரளவு ஈசுவரனிலும் தாழ்ந்தவரே.

சீவன்கள்:

சீவன்கள் எண்ணுக்கணக்கற்றவை. அணுப்பிரமாணமான அளவுடையவை. இயல்பாகவே இவை ஞானமும், ஆனந்தமும் பொருந்தியவையாகும். கருவி கரணங்களோடு சம்பந்தப்படுவதால் இவை தமது ஞானத்தையும் இன்பத்தையும் இழக்கின்றன, தமது பூரணத்துவத்தினின்றும் தாழ்ச்சி அடைகின்றன. இவை ஒவ்வொன்றுக்குமிடையே தனித்தனியான வேறுபாடுகள் உண்டு. அதே சமயம் இவற்றை மூன்று தரங்கள் கொண்டனவாகவும் வகுக்கலாம். அவை யாவன:

i- நித்திய முத்தர் — அநாதியே ஞானத்தில் அமர்ந்துள்ளவர்கள்.

ii முத்தர் —பிறவிகள் எடுத்தெடுத்துக் கன்மத்தைப் போக்கிப் போக்கி ஈற்றில் சடசம்பத்திலிருந்து விடுபட்டு முத்தியடைவோர்.

iii பெத்தர் அல்லது பத்தர்:- கன்மத்தளையிலே கட்டுண்டு சம்சார சாகரத்தில் அழுந்திக்கிடப்போர்.

ஈசுவரன் உள்ளிருந்து சீவன்களைக் கட்டுப்படுத்திய போதும் கன்ம கர்த்தாவும் (செய்பவனும்) கன்ம போக்தாவும் (அநுபவிப்பவனும்) சீவனேயாதலின், அது தன் செய்கைக்கு ஏற்ற பயன்களை — இன்பதுன்பங்களை — அநுபவிப்பது தவிர்க்கவியலாததாகின்றது. பேரருளுடைய ஈசுவரனில் நம்பிக்கை வைத்து அவன்மீது பத்தி பண்ணுவதொன்றே சம்சார பந்தத்தினின்றும் நீங்க முதலும் முடிவுமான வழியாகும்.

பிரகிருதி

பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாய் அமைந்த சடப்பொருளே பிரகிருதி, ஈசுவரன் உலகைப் படைக்கவேண்டுமென்று எண்ணுகையில் அது பலவேறு சடப்பொருள்களாகப் பரிணமிக்கின்கிறது. பிரளய காலத்தில் இப்பொருள்கள் யாவும் மீண்டும் பிரகிருதியுள் ஒடுங்கும். அதுவரை இவை ஒவ்வொன்றினிடையேயும் பேதங்கள் தவிர்க்கமுடியாதனவாய் அமைந்திருக்கும். படைப்பு என்பது அருவமாயிருந்த சீவன்கள் தத்தமக்குரிய உடல்களில் இணைக்கப்படுவதே, இவ்வாறு இணைக்கப்படுவதன் நோக்கம். அவை தமது கன்மங்களைச் செய்து தொலைப்பதற்கேயாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுபேறு

சீவன்கள் தத்தம் தரத்திற்கேற்ப நான்குவகையான முத்திகளை அடைகின்றன. அவையாவன:

i. சாலோகம் — ஈசுவரனுக்குரிய உலகில் (வைகுந்தத்தில்) வாழ்தல்.

ii. சாமீபம் - ஈசுவரனுக்கு அண்மையில் வாழ்தல்.

iii. சாருபம் — உருவத்தில் ஈசுவரன் போலாதல்.

iv. சாயுச்சியம் — ஈசுவரனின் திருமேனியுட் புகுந்து அவரது பேரானந்தத்திற் பங்குகொள்ளல்.

(இந்நால்வகை முத்திகள் பற்றிச் சைவசித்தாந்தமும் பேசும். ஆனால், மத்துவரின் 'சாயுச்சியம்' ஈசுவரனோடு கலந்த நிலையிலும் ஈசுவரனிலும் வேறான நிலையிலேயே சீவன் இருக்கும் என்பதில் வேறுபடுகின்றது. ஈசுவரனின் பேரானந்தம் சீவனுக்கு எக்காலத்தும் கிட்டாது என்பது மத்துவர் கொண்ட முடிபு)

இராமானுசரின் கருத்துகளிலிருந்து மத்துவர் மாறுபடும் இடங்கள்

1. இராமானுசர் பன்மைவாதியாயினும் (ஈசுவரன், சீவன் உலகம்) பன்மையில் ஒருமை கண்டவர். அஃதாவது ஈசுவரனிலிருந்து சீவன்களும் உலகும் பிரிக்கமுடியாத ஒருமை பூண்டவை என்பது அவர் கருத்து, ஆனால் மத்துவரோ இருமை வாதி, எந்நிலையிலும் ஈசுவரனும் சீவனும் உலகும் ஒருமையாகக் கொள்ளப்படத்தக்கன அல்ல என்பது இவர் முடிபு. எக்காலத்தும் பேதம் நிலையாய் இருக்கும் என்பதால் இவை இருநிலைகள் கொண்டவையாகவே இருக்கும் என்ற முடிவைக் கைவிடவில்லை. அஃதாவது பண்பு, பதார்த்தம் என்ற இருமைகள் இருந்துகொண்டேயிருக்கும்.

2. மத்துவர் ஈசுவரனுக்கும் சீவன், உலகம் என்பனவற்றுக்கும் சரீர சரீரி சம்பந்தம் உண்டு என்பதை ஏற்கார்.

3. இராமானுசர் பண்படிப்படையில் சீவன்கள் ஓரினம் என்றும் எண்ணிக்கை அடிப்படையில் அவை பலவாகும் என்றும் கொள்வர். மத்துவரோ பலவாகிய சீவன்கள் ஒவ்வொன்றும் தனி வேறுபாடு உடையவை எனக் கொள்வர்.

4. சீவன்கள் தனிவேறுபாடு உடையன என்பதால் அவை அடையும் வீடுபேற்றிலும் தரவேறுபாடு மத்துவரால் காட்டப்படுகின்றது, இராமானுசருக்கு இது உடன்பாடன்று. அவர் இறுதி நிலையில் சீவன்கள் யாவும் ஒரே வகையான வீடுபேற்றையே அடைகின்றன எனக் கொள்வர்.

5. உலகத் தோற்றத்துக்கு நிமித்த காரணராயும் முதற் காரணராயும் இராமானுசர் ஈசுவரனைக் கொள்வர், மத்துவரைப் பொறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவரை ஈசுவரன் உலகின் தோற்றத்துக்கு நிமித்த காரணர் மட்டுமே. பிரகிருதி அதன் துணைக் காரணம்.

6. சீவன்களிற் சில பைசாசங்களாகவும் ஆவிகளாகவும் எக்காலத்தும் அலைந்து கொண்டிருக்கும் என்றும் அவை வீடுபேற்றினை அடையவே மாட்டா என்றும் மத்துவர் கொள்ளும் முடிபு இராமானுசரிலிருந்து மட்டுமன்று; சமணம் தவிர்ந்த இந்திய மதங்கள் எவற்றாலும் கொள்ளப்படாததொரு முடிபாகும். இதுபற்றி இந்திய தத்துவ ஞானம் என்ற தமது நூலிற் கி. லக்ஷ்மணன் அவர்கள் கூறுவதாவது:

'மத்துவரது இக்கொள்கை ('சில சீவன்கள் என்றும் முத்தி அடையமாட்டா' என்ற கொள்கை) போற்றுவதற்குரியதல்ல. ஒரு வேளை மத்துவர் இக் கொள்கையைக் கிறிஸ்தவரிடமிருந்து பெற்றிருக்கக் கூடுமோ எனக் குறிப்பிட்ட ராதாகிருஷ்ணன் அங்ஙனம் கொள்வதற்கு ஆதாரமில்லை என்றும் குறிப்பிடுகின்றார். இறைவனது புத்திரனாகிய வாயுவின் மூலமே அவை இறைவனை அணுகமுடியும் என்பதும் மத்துவர் கொள்கை. மத்துவர் இராமானுசரோடு மாறுபடும் இடங்களுள் இதுவும் ஒன்று. இதுவும் கிறிஸ்தவர்களுடைய கொள்கையை (பரமண்டலத்தின் பிதாவை அவர் சுதனாகிய யேசு கிறிஸ்துவின் மூலமே அடையலாம் என்ற கொள்கையை) நினைவூட்டுகின்றது என்கிறார் ராதாகிருஷ்ணன்.

இவை எவ்வாறெனினும் தனித்த தத்துவ ஞானத் தேடலில் தொடங்கிய வேதாந்த ஆராய்ச்சி படிப்படியாகச் சமயச் சார்பை அதிகம் அதிகமாகப் பெற்றமைக்கு இராமானுசர், மத்துவரது ஆய்வுகள் எடுத்துக் காட்டுக்களாய் உள்ளன என்பது மட்டும் உண்மை.

நிறைவுரை

இராமானுசரது வேதாந்தச் செல்வாக்குக்கு உள்ளான தெலுங்குப் பிராமணரான நிம்பர்க்கரின் துவிதாத்துவிதம், அதே தெலுங்கு நாட்டினரான வல்லபாச்சாரியாரின் சுத்தாத்துவிதம் (சைவசித்தாந்திகளின் வீடுபேற்றுக் கோட்பாடும் சுத்தாத்துவிதம் என வழங்கும்), வங்கத்தவரான சைதன்னியரின் அசந்திய பேதாபேதம். அதே நாட்டவரும் இந்த நூற்றாண்டினருமான அரவிந்தரின் 'தெய்விக வாழ்க்கை' (திவ்விய ஜீவனம்) என்பன வேதாந்த தத்துவக் கோட்பாடு பரந்து சென்று இன்றும் சிந்தனையைத் தூண்டுவதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாய்க் கொள்ளும் சைவத்தின் முடிந்த முடிவான அறிவை (ஞானத்தை)த் தருவது சைவசித்தாந்தம். வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்டசாத்திரங்கள் ஆகியனவற்றின் முடிபாகவும், சாரமாகவும் அது விளங்குகின்றது. சைவசித்தாந்தத்திற்குப் பொதுநூல்களாகக் கொள்ளப்படுவன வேதங்கள. எனவே அது வைதிகமானது. சிவாகமங்கள் அதற்குச் சிறப்பு நூல்கள். எனவே அஃது ஆகமாந்தம்.

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க' என்பர் சேக்கிழார். வேதத்தின் வழிச்சென்று ஆகவங்களின் வழிகாட்டலிற் சைவமாகிய துறையை ஆன்மா அடையச் சைவசித்தாந்தம் அதற்கு உறுதுணையாகும்.

இறைவன் ஒருவனே உள்பொருள். ஆன்மாக்கள் அவன் தோற்றங்கள். தோற்றங்கள் மாயாகாரியமானவை. மாயை விலக இறைவனோடு அவன் தோற்றங்களான சீவான்மாக்கள் ஒடுங்கி ஒன்றாகின்றன. இரண்டில்லையாகி அத்துவிதமாகின்றன. இவ்வாறு ஏகமாகிய ஒன்றையே வலியுறுத்தும் வாதம் ஏகான்மவாதம். சங்கரவேதாந்தம் ஏகான்மவாதம். சங்கரவேதாந்தம் ஏகான்மவாதத்தை நிறுவும்.

இறைவன், ஆன்மா, ஆணவம் ஆகிய மூன்றும் உள்பொருள்கள்; அநாதியானவை; தோற்றுவிக்கப்படாதவை. இறைவனாகிய சிவபெருமான் இயல்பாகவே அறிபவர். ஆன்மாக்கள் அறிவிக்க அறிபவை. அநாதியாகவே அறியாமையை இயல்பாய்க் கொண்டது ஆணவம். ஆணவத்தால் மூடுண்ட ஆன்மாக்களைத் தனது பேரருள் கொண்டு பேதித்துத் தம்மோடு பாலில் நீராய்க் கலந்திட வைப்பவர் சிவபெருமான். இந்தக் கலப்பு ஒன்றும் இரண்டுமற்ற சுத்த அத்துவிதம். எனவே சைவசுத்தாந்தம் அநேகான்மவாதம், பன்மைக் கோட்பாட்டினை முதன்மைக் கோட்பாடாகக் கொண்டது.

ஒரு கோட்பாட்டினை நிறுவுவதற்கு மூவகைப் பிரமாணங்களைச் சைவசித்தாந்தம் வேண்டிநிற்கும். அவை, காண்டல், கருதல், நூல் என்பன. இவற்றைப் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் அல்லது சுருதி என வடமொழியாளர் குறிப்பர்.

எமது கண்களுக்கு முன்பு தோற்றுபவை உள்பொருள் என்று முடிவு செய்வது காட்சி. முன்கண்ட ஒரு பொருளின் செயற்பாட்டினைப் பிறிதொரு பொருளிலே பின்னொருகாற் காண நேரிடின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் அது போன்றதே. ஆதலின் உண்மையானது என்று கொள் வது கருதல். புகையைக் காண்பவன் அஃது உள்ள இடத்திலே நெருப்பு உள்ளது எனக் கருதுவது இதற்கு எடுத்துக்காட்டு.

எமது உள்ளமானது அகம் (Ego), உணர்மனம், ஆழ்மனம் என்ற மூன்று கூறுகளாலானது. நான் என்ற உணர்வுக்குப் புறவுலகோடு தொடர்புபட்டுச் செயற்படுவதற்கு அகமும் உணர்மனமும் உதவுகின் றன. புறஉலகம், அகஉலகம், இவை பற்றிய உள்ளுணர்வு, இந்த உள்ளு ணர்வால் அடையும் ஞானம் என்பன ஆழ்மனத்தினுள்ளே அடங்கிக் கிடக்கின்றன. செபம், தவம், தியானம் முதலாம் முயற்சிகளால் ஆழ்மனத்தையும் அறிந்து அதன் வாயிலாக முழுமையான உண்மை யையும் உணர்ந்து வெளிப்படுத்த வல்லவர்களே ஞானிகளான இருடி கள். 'சத்யம் ஏவ ஜயதே' (உண்மையே வெல்லும்) என்ற கோட்பாட் டில் நிலைத்த இவர்கள் வாயிலாக இறைசித்தம் நூல்வடிவம் பெறு கின்றது. இவ்வாறு தோன்றியனவே வேதங்கள், ஆகமங்கள், மெய் கண்டசாத்திரங்கள் என்பது, சைவசித்தாந்திகளின் உறுதியான நம் பிக்கை. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்கவொண் ணாத பரம்பொருளுண்மையை, அதன் வழிப்பட்டு உய்யவேண்டிய ஆன்மாவின் இயல்புகளை, அதனை மறைத்து நிற்கும் ஆணவத்தின் போக்குக்களை வெளிப்படுத்துவனவே ஆகமங்களும் சுருதிகளும்.

மேற்குறித்த அநுமானப் பிரமாணத்தின் அடிப்படையில் பிர திஞ்ஞை (முடிபு), ஏது (காரணம்), உவமை, உபநயம் (உவமேயம்), நிகமனம் (நிறுவல்) என்ற ஐவகை உறுப்புக்கள் அமைந்த நியாயத் தொடை வாயிலாகவும் இறையுண்மையை நிறுவுவர். அது வருமாறு:

1. இவ்வுலகம் ஒரு கருத்தாவை உடையது — பிரதிஞ்ஞை
2. அவன், அவள், அது என்ற மூன்று செயல்களுக்கும் உள் ளாதலால் — ஏது
3. பானையை இயற்றக் குயவன் போல — உவமை
4. அவன் செயலை ஒத்துக் காரியமான உலகும் ஒரு கருத் தாவை உடையது. — உபநயம்
5. ஆகவே உலகம் ஒரு கருத்தாவை உடையது — நிகமனம்

வேதங்களும் ஆகமங்களும் உரைக்கும் முப்பொருள்களையும் ஏற்று அவற்றின் உண்மைகளை மேற்குறித்த பிரமாணங்கள் வாயிலாகச் சைவசித்தாந்த மெய்யியல் நிறுவுகின்றது.

அநாதியான முப்பொருள்களாவன பதி, பசு, பாசம் என்பன.

அ) பதி

பதி என்பது தலைவர் எனப்பொருள்படும். அனைத்துலகிற்கும் அனைத்துயிர்கட்கும் தலைவராதலாற் சிவபெருமான் பதியாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தமது சிந்தனைக்கும், சொல்லுக்கும் அப்பாலானவர். ஐம்பொறிகளால் அவரை அறிதல் இயலாது. நமது உள்ளத்து உணர்ச்சியாலே அவரைக் கொள்ளுதல் இயலாது. எல்லா நன்மைகளும் அமைந்த அவருக்கு இணை இல்லை. குணங்களைக் கடந்த குணாதீதர் அவர். இந்நிலையில் அவர் நிலை சொரூப நிலையாகும். இதனை நிர்க்குண நிலை எனவும் அழைப்பர்.

மாற்ற மனங்கழிய நின்ற மளறயோனே

என்பது திருவாசகம்.

இத்தகைய ஆதிகுணம் ஒன்றுமிலா அந்தமிலா இறை, உயிர்கள் மீது கொண்ட பெருங்கருணையினாலே அவை, தம்மை அறிந்து வணங்கி உய்யும் பொருட்டுத் திருமேனி கொண்டருளுவார். திருமேனி கொள்வதற்குத் தடத்தநிலை என்பது பெயர். இது சகுண நிலை எனவும் வழங்கும். தடத்த நிலையிலே அவர் கொள்ளுந் திருமேனிகள் அருவம், உருவம், அருவுருவம் என முத்திறப்படும். அருவத் திருமேனிகளாவன சிவம், சத்தி, நாதம், விந்து என்ற நான்கும். உருவத் திருமேனிகளாவன மகேசுரன், மால், அயன், உருத்திரன் என்ற நான்கும். அருவத்திருமேனி சதாசிவம். ஆக, இவை தடத்தத்தின் ஒன்பது பேதங்கள்.

சிவபெருமானுக்கு எண்குணங்களை வகுத்துரைப்பது வழக்கம். தம்வயத்தராதல் தூயஉடம்பினராதல், இயற்கை உணர்வினராதல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, முற்றுமுணர்தல் என்பனவே அந்த எண்குணங்களுமாம். 'ஊரிலான் குணங்குறியிலான்' ஆகிய பெருமானுக்கு ஆன்மாக்களாகிய நாம், ஆசை மீதூரக் கற்பிதஞ் செய்துள்ளனவே இவை. அவர் உலகம் யாவிற்கும் முதலாவதையும் ஆன்மாக்களின் உள்நின்று அவற்றை இயக்குவதையும் அகரமாகிய உயிருக்கு உவமையாகக் குறித்த திருவள்ளுவரும், உமாபதிசிவாசாரியாரும் ஆற்றாமையோடு 'தனக்குவமை இல்லாதான்' என்றும் 'நிகரில் இறை' என்றும் அடுத்துக் குறித்தமை இவ்விடத்தில் உளங்கொள்ளத் தக்கதாகும்.

இத்தகைய எண்குணத்தினர், உயிர்களின் உய்திப்பொருட்டுத் தமது சங்கற்ப மாத்திரையிலே நிமித்த காரணராய் ஐந்தொழில்கள் புரிந்தருள்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவே ஐந்தொழில்களாகும். இவற்றை இவரின் வழிநின்று இவரிலிருந்து என்றும் பிரிவேயில்லாத திருவருட் சத்தி வாயிலாகவே அவர் புரிந்தருளுகிறார். சிவபெருமானும் திருவருட் சத்தியும் சூரியனும் கதிரும் போன்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தல் என்பது உயிர்களுக்கான உடல்கள் (தநு) மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய நாற்கரணங்கள் அவை வாழ்வதற்கான உலகங்கள், இன்பத்துன்பங்களான போகங்கள் ஆகியவற்றைத் தோற்றுவிப்பதே. உயிர்கள் தோன்றுவதுமில்லை, அழிவதுமில்லை: அவை அநாதியானவை. 'உள்ளது போகாது இல்லது வாராது' என்ற உண்மையை நிறுவுவது 'சற்காரியவாதம்' எனப்படும். ஒரு பொருளானது உள்ளதாவது காரியம். அது உண்டாவதற்கு உறுதுணையாவது காரணம். காரணம் இன்றிக் காரியம் இல்லை. அதேபோது காரணத்தினுள்ளேயே காரியமும் நிலையாய் அமைந்துதான் உள்ளது. எள் காரணம். எனினும் காரியமாகிய எண்ணெய் அதனுள் முன்னரே இருந்தது என்பது தான் உண்மை. இந்த அடிப்படையிலே நோக்குவதனால் ஆன்மா என்றும் உள்ள பொருளே என்ற முடிவுக்கே வரல் வேண்டும். இத்தகைய ஆன்மாக்களுக்குத் தமது உடைமைப் பொருளாகிய சுத்தமாயை வாயிலாக முற்குறித்த தனு, கரண, புவன, போகங்கள் சிவபெருமானால் வழங்கப்படுகின்றன.

காத்தலாவது ஆன்மாக்கள் நல்வினை, தீவினைகளை அநுபவித்து இவற்றில் உவர்ப்புண்டாகி இவற்றைச் சமநிலையிலே கண்டு பக்குவம் அடையும் வரை தநு, கரண, புவன, போகங்களை வைத்திருத்தல். இது திதி எனவும்படும். அழித்தலாவது ஆன்மாக்கள் புதிய பிறப்புக்களை எடுக்காது சற்றே ஓய்வளித்தல். இது சங்காரம் எனவும் வழங்கும். மறைத்தலாவது உலகப் பொருள்களின் உண்மையை மறைத்து, மலத்தின் சத்தியை, ஊக்குதல். இதனைத் திரோதானம் என்பர். இம்மறைப்பினை ஏற்படுத்தும் இறைவனின் சத்தி திரோதானசத்தி. இதுவே சுத்தமாயை. மாயை என்பதும் இதுவே.

அருளலாவது ஆன்மாவைத் தளைகளினின்றும் நீக்கித் தமது திருவடிக்கண்ணே பேரானந்த நித்தியப் பெருவாழ்விலே திளைக்க வைத்தல். ஆன்மா ஆணவத்தால் மூடுண்ட நிலையில் அதனின்றும் வேறாகிநின்ற பெருமான், அது உடலெடுத்து நல்வினை தீவினைகளில் அதனோடுஉடனாகி, அது திருவருள் வயப்பட்டுத் தம்மை நாடி வருகையில் அதனோடு ஒன்றாகிநின்றருளுவர். இந்த அருள் பாலிக்கும்நிலையே அநுக்கிரகமாகும். இவ்வைந்தொழில்களில் மறைத்தல், படைத்தலினுள்ளும் அருளல் அழித்தலினுள்ளும் அடக்கப்பட்டு மூன்றுதொழில்களாகவும் கொள்வதுண்டு. இவ்வகையில் ''அழித்தலைச் செய்யும் அரனுருவே முதலுரு எனப்படும்'' என்பர். (சிவஞானபோதம் சூத்திரம் 1)

''அல்லலுறும் ஆன்மாக்களில் தளரா அன்பு இறைவனை எப்பொழுதும் ஆன்மாக்களை இருளிலிருந்து வெளிக்கொணரும் பணியில் ஈடுபடச் செய்கிறது. அவர் ஆன்மாக்களை இன்பத்திலும் பேரொளியிலும் நிலவும்படி செய்கிறார். பிறப்பென்னும் பெரும் பிணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரே மருந்து. எல்லாவற்றையும் இன்புறச் செய்பவர் அவரே. பிற வாழி நீந்த அறவாழி அந்தணன் தாள் சேரவேண்டும். இறைவன் அடி சேராதார் பிறவிக்கடலை நீந்தார்.''

(பேராசிரியர் ர. ராமானுஜாசாரி)

**அ. கடவுள் உளர் என்ற கோட்பாட்டினைச் சைவசித்தாந்தம் நிறுவும் வகை:**

i. அவன், அவள், அது என்று மூவகையாகச் சுட்டப்படுவனவும் செயற்படுவனவுமாகிய பொருள்களின் தோற்றத்திலும் வாழ்வி லும் ஒடுக்கத்திலும் ஓர் ஒழுங்கு உண்டு. இவ்வொழுங்கினை ஏற்படுத்தி நடத்தக் கருத்தா ஒருவர் வேண்டும். அக்கருத்தாவே இறைவன்.

i. மட்பாண்டம் ஒன்றைக் காணும் பொழுது அதனைச் செய்த குயவன் ஒருவன் உளன் என்பதை ஊகித்தறிகிறோம். அது போன்றே கண்ணாற் காணப்படும் உலகிற்குக் கருத்தா ஒருவர் உளர். அவரே இறைவன்.

iii. உலகம் அனைத்தையும் தம் இச்சைப்படி படைத்துக் காத்து அழிக்கின்ற ஒருவர், தாம் அவ்வாறு படைக்கப்படவோ, காக் கப்படவோ இயலாதவராவார். அந்த ஒருவரே இறைவன். ''இறைவன் உண்டு'' என்று சொல்பவர் மட்டுமன்றி ''இல்லை'' என்பவருங்கூட ''அத்தகைய தன்மை உடையவர் ஒருவர்'' என்று கற்பனை செய்தே 'அவர் இல்லை' என்றே முடிவு செய் கின்றார். அவர் 'இல்லை' என்பதிலேயே 'உண்டு' என்ற உண் மையும் உளதாகின்றது.

**ஆ. இறைவனின் வியாபகத்தையும் வியாப்பியத்தையும் நிறுவுதல்:**

i. இறைவன் எல்லா உயிர்களிலும் உலகிலும் வியாபித்து நிற்ப தாலேயே உலகும் உயிர்களும் இயங்குகின்றன. அவர் ஓரிடத் திலிருந்து அருளாட்சி நடத்துகின்றாரெனில் அவருக்கு உடலும், அது தங்குவதற்கு இடமும் உள்ளன என்றாகும். அஃது அவரின் கடந்ததன்மைக்கு (கட — கடந்தும், உள் - உள்ளாகியும் இருப் பவர் - கடவுள்) இழுக்காகும். அவரைச் சிறுமை செய்வதாகும்.

ii. இறைவன் ஓரிடத்திலே இருந்து ஞானிகளைப் போல எல்லாவற் றையும் காண்கின்றார், ஊக்குகின்றார், செயற்படுத்துகின்றார் என்றால் அந்த இயல்புகள் ஞானிகளுக்கும் உண்டு. அவர்கள் இவற்றைத் தமது செபம், தவம், தியானம், என்ற ஏதுக்க ளாலே பெற்றனர். அவ்வாறாயின் இறைவனும் அவ்வேதுக் களால் அந்நிலை அடைந்தவராதல் வேண்டும். இது கடவுளுக்கு மனித இயல்பினை ஏற்றுவதாய் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) எனவே இறைவன் மிகச்சிறிய பொருளிலும் சிறியவராகவும் மிகப்பெரிய பொருளிலும் பெரியவராகவும் எல்லாவற்றிலும் நிறைந்துங் கடந்தும் நிற்பவர்.

எங்கும் எவையும் எரியுறுநீர் போலேகம்
தங்கு மவன்றானே தனி.

திருவருட்பயன்

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே...........

திருவாசகம்

(உ) பசு

பசு என்பது கட்டுண்டது எனப் பொருள்படும். அநாதிகாலந் தொட்டுப் பாசத்தினாலே பிணிக்கப்பட்டுத் தன்னறிவும் தன்னிச்சையுமில்லாததாய் இது உள்ளது. இதுவே ஆன்மா. ஆன்மாவிற்கு மூன்று நிலைகள் உள்ளன. இவை அவத்தைகள் எனப்படும். முதலாவது அவத்தை கேவலாவத்தை. பாசமாகிய ஆணவத்தால் கட்டுண்டு: அதனோடு ஒன்றி நிற்கும் நிலை. இந்நிலையில் இது அசத்தாகும். (அசத்து - அறிவற்றது)

இரண்டாவது சகாலவத்தை. கருணை வள்ளலாகிய இறைவன் ஆன்மாவின் மீது கொண்ட பேரருளினால், அது ஆணவத்தின் வலியைக் கெடுத்தற்குக் கருவிகளான தனு, கரண புவன, போகங்களைச் சுத்தமாயை மூலம் அளிக்க, ஆன்மா இயங்கத்தொடங்கும் நிலை. இந்நிலையில் ஆன்மா சத்தும் அன்று (சத்து- அறிவுள்ளது) அசத்தும் அன்று. சதசததாகும். (சதசத்து - அறிவிக்க அறிவது, சார்ந்ததன் வண்ணமாவது).

ஆன்மா தெய்விகப் பேரருளிலே மூழ்கிப் போய் நிற்கையில் அது சத்தாகி விடுகின்றது. இனி அதற்குப் பிறப்போ வினைகளோ இல்லை. அது பேரானந்தத்தினை அநுபவிக்கத் தொடங்குகின்றது. இதுவே மூன்றாவது அவத்தையாகிய சுத்தநிலை.

எனினும் தன்வயத்தனாய் நிற்கும் இறைவனைப் போல ஆன்மாக்கள் எந்நிலையிலும் தனித்து நிற்கவியாலாது சார்ந்ததன் வண்ணமாகும் சார்புநிலையிலேயேயுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

''கேவல நிலையில் உயிர்க்குச் சார்பாக உள்ளபொருள் அகவிருளாகிய மூலமலம். சகலநிலையில் சார்பாக உள்ள பொருள் மாயை ---------- முதல்வனது பேரருளொளியிலே முழுகி இன்புறும் நிலையே பேரா இயற்கையென்னும் முடிநிலை. இது சுத்தம் எனப்படும். மூலமலமாகிய இயற்கையழுக்கும் மாயா மலமாகிய செயற்கையழுக்கும் நீங்கப் பெற்றுத் திருவருளைச் சார்பாகப் பெறும் நிலையாதலின், சுத்தம் எனப்பட்டது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் எண்ணுக்கணக்கற்றவை. அவற்றின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதாயின் அவை இதுவரை பிறந்த நாள்களையும் இனிப்பிறக்கப் போகும் நாள்களையும் எண்ணிக் கணிப்பதற்குச் சமமாகும் என்பர் உமாபதி சிவாசாரியார். இவை மலபந்தத்தாலும், சுத்தமாயையின் ஊக்குதலாலும் வினைகளைச் செய்து அவற்றின் பயனை அநுபவிக்கப் பல பிறவிகள் எடுக்கின்றன.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்

என்று திருவாசகம், பிறப்புக்களின் தொகையையும் வகையையும் விரித்துரைக்கும். இதனையே 'பிறவிப் பெருங்கடல்' என்பார் திருவள்ளுவர்.

அவை தொகையாற் பலவாயினும் வகையால் மூன்றாகப் பிரிப்பது சைவசித்தாந்த வழக்கு. இம்பிரிப்புக்கள் ஆன்மாக்களின் தரத்தை ஒட்டியவை. விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பனவே இந்த முப்பிரிப்புக்களுமாகும் விஞ்ஞானகலர் தம்மை மயக்குவதாகிய மாயையாலோ, அதனாலே தன்னிச்சைச் செயலின்றி நிகழும் கன்மங்களாலோ பந்திக்கப்படாதவர். பிரளயாகலர் மாயையினின்று நீங்கினாலும் கன்மத்தளையினாலே பிணிக்கப்பட்டிருப்போர். சகலரோ மும்மலங்களாலும் பிணிப்புண்டு, அவை தம்மைப் பிணித்துள்ளது என்பதையும் உணருந்திறன் அற்றவராய் உழல்வோர்.

ஆன்மாக்களின் அறிவு ஊடக அறிவாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை ஊடகமாகக் கொண்டு அறிவதேயன்றித் தாமாக அறியும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. இருளிலே கண் பார்க்கும் திறனையிழந்து குருடுபோலவே தடுமாறும். அவ்வேளையிற் கண்ணுக்குத் தற்காலிக ஒளியை விளக்கு வழங்குவது போல, சுத்தமாயை அதற்குத் தநு, கரண, புவன, போகங்களாலே சிறிது அறிவைத் தரும். ஆனால் ஆன்மாவிற்கு நிரந்தர ஒளியைத் தந்து அறியாமையிருளைப் போக்கித் தலைவனை உணரவைப்பது திருவருளேயாகும்.

இவ்விடத்திலும் சைவசித்தாந்தம் ஆன்மா முத்தியடையத் தகுதி பெற்றுவிட்டது என்று கொள்ளாது. அருள் ஆன்மாவிற்குக் கிடைத்த புதியதொரு கண்தான் (அவனருளாலே கண்ணாக...). அந்தக் கண் கொண்டு வழிபிடித்து இறைவனை ஆன்மா அடைவதே இறுதி இலக்காகும். பத்தியிலே தொடங்கி ஞானத்தில் முதிர்ந்து தன்னை முற்றாக இறைவனுக்கு ஆளாக்கும் வரை ஆன்மாவுக்கு விமோசனங் கிட்டாது என்பது சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபு.

அவனரு ளாலே அவன்தாள் வணங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது திருவாசகம். திருவருளும் பெண். ஆன்மாவும் பெண். பெண்கள் இருவர் கூடி இல்வாழ்வு நடத்தல் இபலாது. தலைவனாகிய இறைவனைப் பெண்ணாகிய ஆன்மா கூடுவதே பேரின்பம் என்பர் உமாபதிசிவாசாரியார். நான் யார் என்ற வினாவிலிருந்தே ஆன்மா பற்றிய தேடல் தொடங்கியதெனலாம். உடலைக் குறித்த தொரு காலத்திற்கு இயங்க உதவி புரியும் பிராணன், மூச்சுக்காற்று என்றெல்லாம் அதனைக் கருதியகாலம் ஒன்று இருந்தது. உடலின் ஒவ்வோருறுப்பிலும் உயிர் உலாவுவதாகவும், கை அறுந்துபோனால் கையில் உலாவிய உயிர் போயிற்று என்பதாகவும், இவ்வாறே உறுப்புக்குறைவுகளோடு அவற்றிற்குரிய உயிர்கள் இறப்பதாகவும் கொண்டதும் உண்டு. உடல் அழிய உயிரும் அழிந்துபோம். அதனோடு அதன் வாழ்வு முடிந்துவிடும் என்றும் கருதப்பட்டது. இந்தக் கருத்துக்களையெல்லாம் கடந்து சென்று 'நான்' என்னும் ஆன்மாவின் நிலைபேற்றையும் அதன் உண்மையையும் சைவசித்தாந்தம் மிகத் தெளிவாக ஆராய்ந்து நிறுவியுள்ளது.

ஆன்மா உண்டு என்பதைச் சைவசித்தாந்தம் நிறுவும் வகை

i. மாயை முதலிய தத்துவங்களாலே ஆக்கப்பட்டுள்ளதாகிய உடம்பிலே ஆன்மா உண்டு. அதனை 'இல்லை' என்று சொல்வதனாலேயே அவ்வாறு சுட்டப்பட்டது ஒன்று இருத்தல் வேண்டும். அதுவே ஆன்மா.

ii. எனது உடல், எனது கை என்று பிரித்துப் பேசுவதால் உடலின் வேறாகிய ஒன்று உண்டு. என்பது புலனாகின்றது. அதுவேஆன்மா. ('' ...... நீ என்பது உயிர். உயிருக்கு ஆன்மா என்று பெயர். நீ என்று குறிப்பதும் ஆன்மா நான் என்று குறிப்பதும் ஆன்மா. நாங்கள் எல்லோமும் ஆன்மாக்களே .... ஆயினும் ''உன்னுடைய ஆன்மா'' என்று சிலர் அறியாமையாற் சொல்லுகிறார்கள். அப்படியானால் நீ ஆன்மா அன்றென ஆகின்றது. ஆன்மாவுக்கு ஆன்மாவாய் இருக்கிற கடவுளை உன்னுடைய ஆன்மா என்று சொல்லலாம்'' சைவபோதம் - இரண்டாம் புத்தகம்.)

iii. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலனுணர்வுகளையும் உணர்ந்து கொள்வதாகிய சூக்குமப் பொருள் ஒன்று உண்டு. அதுவே ஆன்மா.

iv. சாக்கிரம் (நனவுநிலை), சொப்பனம் (கனவுநிலை), சுழுத்தி (அறிதுயில்நிலை), துரியம் (அருளாரும்நிலை), துரியாதீதம்(ஆனந்தமாரும் நிலை) ஆகிய ஐந்து அவத்தைகளையும், அவற்றின் ஒழுங்கு முறையினையும் அறிவதால் ஆன்மா உண்டு.

v. அறிவிக்க அறிவதாலும் ஆன்மா என்ற ஒரு பொருள் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம்

சாசம், தளை, கட்டு என்பன ஒரே பொருளில் அமைந்தவை. ஆன்மாவைத் தளை செய்து அதன் செயற்பாட்டினைத் தனக்கு வசமாக்குவது பாசமாகும. அது ஆணவம், கன்மம், மாயை என முத்திறப்படும். இவற்றை மும்மலங்கள் என்பர்.

ஆணவம்

ஆன்மாவை அணுவாக்குவது ஆணவம். இஃது அநாதியாகவே ஆன்மாவினுள்ளே உறைவதாலும் அறியாமைக்கு மூலமாயுள்ளமையாலும் மூலமலம் எனவும் வழங்கும். இறையருள் வயப்பட்டு ஆன்மா நிற்குங் காலம் வரை இதன் வலிமை குன்றுவதில்லை. நெல்லில் உமிபோலவும் செம்பிற் களிம்புபோலவும் ஆன்மாவைப் பற்றி நிற்பது ஆணவத்தின் இயல்பு. ஆன்மாவோடு என்றும் பிரியாது கூடியிருப்பதால் இதற்குச் சகசமலம் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

ஆணவம் ஆன்மாவின் அறிவைத் தடுக்கும் வல்லமை வாய்ந்தது. அதன் சேர்க்கையால் நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களிலே கிடந்து ஆன்மா உழல நேர்கின்றது. ''நானே பெரியவன் எனக்கு இணை யாரும் இல்லை.'' என்று எண்ணிச் செயற்படுவது அகங்காரம். இதனை அகந்தை எனவும் அகப்பற்று எனவும் கூறுவர். காமம், வெகுளி, மயக்கம், என்ற இவற்றால் தீய கொடிய செயல்களைப் புரிதல் அகங்காரத்தின் வெளிப்பாடுகளே. மமகாரம் என்பது, தனது உடைமைப் பொருளாகத் தான் கருதுவதன் மீது கொள்ளும் இச்சை. இந்த இச்சையை நிறைவுசெய்ய முயலும் முயற்சியிலே பற்றை வளர்த்து அப்பற்றைத் துறக்க முடியாது இடருக்குள்ளாவதே மமகாரத்தின் இயல்பாகும். இதனை மமதை, புறப்பற்று என்ற சொற்களாலும் அழைக்கலாம்.

நான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

என்பது வள்ளுவர் வாய்மொழி.

ஆணவம் இருளிலும் கொடியதென்பர். இருள் தன்னைக் காட்டிப் பிறபொருள்களை மறைக்கும். இந்நிலையில் அப்பொருள்களைத் தேடுவதிலிருந்து விடுபடவோ, எச்சரிக்கையுடன் விளக்கோடு சென்று பொருளைக் காணவோ வாய்ப்புக் கிட்டும். ஆனால் ஆணவமோ, இருளிலும் கொடியது. அது தன்னையும் (இருள்போல) காட்டாது பிற பொருளையும் காட்டாது மறைப்பதால் இருளிடைக் கிடப்பதையே உணராத அவலத்துக்கு ஆன்மா உள்ளாக நேரிடும். ஆணவத்திருகு இருள், ஆசு என்ற வேறு பெயர்களும் உள்ளன.

ஆணவம் அநாதி என்பதைச் சைவசித்தாந்தம் நிறுவும் வகை

1. ஆணவம் தொடக்கம் உடையது என்றால் அது தோன்றுவதற்கு ஒரு காரணம் வேண்டும். அக்காரணம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பொருள் இருந்தபடி இருப்பதற்குக் காரணம் வேண்டுவ. தில்லை. உதாரணம் (1) பலகையின் மேலிருக்கும் புத்தகம் இருந்த படி இருப்பதற்குப் புதிதாகக் காரணம் சொல்ல வேண்டியதில்லை. எந்தெந்தத் தத்துவங்கள் அதை அந்த இடத்தில் முன்நிறுத்தினவோ அவைகளே அதைப் பின்னும் நிறுத்தத்தக்கவை. அந்தப் புத்தகம் அதிலில்லையாயின் அந்த மாறுதலைச் செய்வதற்கு ஒரு புதுக் காரணம் வேண்டும். அந்த இடத்தில் அதை நிறுத்தின தத்துவங் கள் குறைந்தாயினும் கூடியாயினும் இருத்தல் வேண்டும். அந்தப் பலகையைச் சரித்தலாகிய ஒரு தத்துவம் கூடுதலால் அந்தப் புத்தகம் விழக்கூடும். அல்லது அந்தப் பலகையைத் தாங்கி நிற்கும் கால்கள் இரண்டு விலகுவதனால் அந்தப் புத்தகம் விழக்கூடும்.

(2) முன்பு பனிக்கட்டியாயிருந்த பொருள் பின்னும் பனிக்கட்டி யாயிருக்கக் காரணம் தேடவேண்டியதில்லை. பின்பு அது நீரானால் அதற்குக் காரணம் வேண்டும். இப்படியே ஒரு பொருளினது நிலைமை மாறும்போது அந்த மாறுதற்குக் காரணம் வேண்டுமாதலால் ஆண வம் முன் வேறிடத்தில் நின்று பின் ஆன்மாவைச் சேர்ந்ததாயின், அந்த ஆணவத்தின் நிலையை மாற்றி ஆன்மாவோடு சேர்க்க ஒரு காரணம் இருத்தல் வேண்டும. அப்படி அதை ஆன்மாவோடு சேர்க் கத்தக்க பொருள் ஒன்றும் இல்லை. ஏனெனில் ஆன்மாவும் ஆணவமு மல்லாமல் நிற்கும் பொருளாகிய கடவுள் பேரருளுடையவராதலால் ஆன்மாவுக்குத் துன்பத்தை வருவிக்கும் மலத்தை அதனோடு சேர்க்க மாட்டார். ஆன்மாவும் அறிவுடையதாதலால் தனக்குத் தீமையான ஒரு பெருநாளைத் தேடிப்பிடியாது. ஆணவம் அசித்துப் பொருளாத லால் தானாக ஆன்மாவைச் சேரமாட்டாது.

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார்

ஆணவத்தை ஆன்மாவோடு சேர்க்கத்தக்க காரணம் இல்லை. எனவே ஆணவம் அநாதிகாலந்தொட்டு உள்ளது.

(2) ஆணவம் இடையிலே ஆன்மாவைச் சேர்ந்ததும் அன்று. அவ்வாறு அஃது இடையிலே சேர்ந்ததாயின், ஆன்மா முத்திநிலை யிலிருக்கும் போதும் இடையில் வந்து சேரலாமன்றோ?

(3) ஆன்மாவின் இயல்பான குணமே ஆணவமெனில், ஆன்மா வின் உடலோடு அந்தக்குணமும் அழிந்துபோம். ஆனால் ஆணவம் அவ்வாறு அழிவதில்லை.

ஆகவே, எவ்வாறு ஆராய்ந்தாலும் ஆணவம் அநாதியான தென்பதும், அது ஆன்மாவோடு என்றும் உள்ளது என்பதுமே வரக் கூடிய முடிபுகளாகும்.

**கன்மம்**

பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என ஆன்மாக்கள் செய்கின்ற கன்மங்கள் (வினைகள்) மூவகைப்படும். பிராரத்தம் என்பதை ஊழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் கூறலாம். முற்பிறவியிலே செய்த கன்மங்கள் இப்பிறவியிலே செய்யப்படும் நல்வினை தீவினைகளைக் குறிக்கும் சஞ்சிதம் என்பது பிறவிதோறும் செய்யப்பட்டு அவற்றின் பயனை அநுபவிக்காது எஞ்சி நிற்கும்வினை. நல்வினை தீவினைகளுக்கேற்ற இன்பதுன்பங்களாய் விளைவதனையும் சஞ்சிதத்திற்குள் அடக்குவதுண்டு.

கன்மமும் உள்பொருளே. எனவே அதுவும் அநாதியானதாகும். இதனைச் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் பின்வருமாறு விளக்கி நிறுவியுள்ளார்.

''ஒவ்வொரு கன்மமும் புதிதாக உண்டாவது தானே, கன்மம் அநாதியாவதெப்படி?'' என்று கேட்டால் ஒரு கருமத்தின் பலனை அநுபவிக்கும்போது, புதிதாகக் கருமம் தோற்றுகிறது. இப்படியே ஒன்று முடிய ஒன்று தோன்றிச் சங்கிலித்தொடர் போல வருதலால் ஒவ்வொரு கருமமுந் தனியே தொடக்கமுள்ளதாயினும் கருமங்கள் முழுவதையும் நோக்கும் போது அநாதியாகும். இதற்குப் ''பிரவாக அநாதி'' யென்றுபெயர். இஃதன்றித் தொழில் செய்தற்கு மூலகாரண மாயுள்ளது கன்மம் என்னும் அநாதியான பாசம் என்றறிக''

(சைவபோதம் - இரணடாம் புத்தகம்)

இறைவன் என்ற சொல்லுக்கு இறுப்பவன் (சேர்ப்பவன்) எனவும் பொருள் கொள்வர். இதன்படி ஒவ்வோர் ஆன்மாவும் செய்யும் வினை களுக்கான பயன்களை அது அநுபவிக்குமாறு இறுப்பவன் இறை வனேயாவன். வினைகளைச் செய்பவன், (ஆன்மா) அவன் செய்யும் வினைகள், அவற்றின் பலாபலன்கள், அவற்றை அவனிடத்துச் சேர்ப்பவன் (இறைவன்) என்ற நான்கும் உள்ளமையைச் சைவசித் தாந்தம் வலியுறுத்துகின்றது.

கன்ம மலங்கள் விதிப்பிரகாரமாகவே நடந்து வருகின்றன. அவ் வாறாயின் விதியை மாற்றவோ குறைக்கவோ முடியாதா என்ற வினா எழுவது இயல்பே. ''எல்லாம் விதியின்படியே நடப்பன. அதனை வெல்ல முடியுமா? எனவே அதனை அதன் வழியில் விட்டுச் சும்மா இருப்போம்'' என்ற முடிவுக்கு வருவதும் செயலற்று மனமிடிந்திருப் பதும் எம்மிற் பலரிடையே காணும் ஒன்று. இஃது அறியாமை.

உலகப்புகழ் பெற்ற தத்துவ ஞானியாகிய பேராசிரியர் எஸ். இராதாகிருஷ்ணன் இவ்வாறு செயலற்றிராது விதியையும் தமது கன்மத்தைச் செயற்படுத்தும் திறமையினாலே வெல்லலாம் என்பதற்கு ஓர் உதாரணந் தந்து விளக்குவார். கடதாசி விளையாட்டில் துரும் புச் சீட்டே வெற்றிக்கு அடிப்படையானது. ஆனால் அவ்விளையாட் டிலே திறமைபடைத்தவன் எதிராளியிடம் தனது துரும்புகள் கூடு தலாய் இருந்தபோதும், தனது விளையாட்டுத் திறனாலே வெற்றி யைப் பெறுகின்றான். இவனைப் போலவே விதியினால் விளைகின்ற கன்மங்களைத் திறமையாகக் கையாள்வதன் மூலம் அவற்றை வெற்றி கொள்ளலாம் என்றும் இவ்வெற்றிக்கான வழி இறைபத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு, சூழவுள்ள உயிர்களுக்குத் தொண்டாற்றுவதும், சமுதாய நலப்பணியில் ஈடுபடுவதும் என்றும் அவர் விளக்குவார். இவ்வுண்மையையே திருவள்ளுவரும்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

என்பர், உப்பக்கம் காண்பர்-புறங்காண்பர், உஞற்றுபவர்-முயல்வோர்.

கன்மங்களாகிய வினைகளை நல்வினை, தீவினை, என இரண்டாக வகுக்கலாம். தனக்கும் பிறர்க்கும் நலம்பயக்கும் நற்செய்கைகளே நல்வினைகள். இவற்றிற்கு எதிராகத் தீமை பயக்கும் செய்கைகள் தீவினைகள்.

நல்வினைகளைச் செய்கையில் தனக்கு இடர்களோ துயர்களோ நேர்ந்தாலும் மற்றைய உயிர்களுக்கு நலம் விளைக்கும் செயல்களே மிகச்சிறந்தவையாகும். இவற்றைப் பசு நல்வினையென்பர். இவ்வாறு செய்கையில் நான் என்ற அகங்கார முனைப்பின்றி இறைபணி என்ற உறுதியான நோக்குடன் செய்வனவும், இறைதொண்டுகளும் பதி நல்வினைகளாகும். இறைவனை முன்னிட்டுச் செய்வன சிவபுண்ணியங்கள் எனவுங் கொள்ளப்படும்.

பிறசமயங்கள் தீவினைகளைத் தவிர்க்குமாறும் நல்வினைகளைச் செய்யுமாறும் விதிக்கின்றன. நல்வினை சுவர்க்க வாழ்வினையும் தீவினை நரகவாழ்வையும் தரும் என்பது அவைகளின் முடிந்த முடிபு. கன்மத்தால் உண்டாகும் மறுபிறப்புப்பற்றிய கோட்பாடு இல்லாத சமயங்களே இம்முடிவுக்கு வருகின்றன. ஆனால் சைவசித்தாந்தமோ மற்றைய இந்துசமயப் பிரிவுகள், பௌத்த, சமண சமயங்கள் போலவே கன்மத்தின் தன்மைக்கேற்பப் பிறப்புக்கள் பலவும் அமையும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதால். நல்வினைக்கேற்ற நற்பிறப்பு உண்டான போதிலும் அப்பிறப்பிலே தீவினை செய்யவும் நேரலாம், அதனால் அத்தீவினைக்கேற்ப மீண்டும் பிறப்பெடுத்து அழுந்த நேரிடும் என்று கருதி நல்வினையும் பிறவிக்குக் காரணம் என்கின்றது.

பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரைகாண இருவினைகளையும் சமமாக நோக்கி அவற்றில் அழுந்திவிடாது, யாவும் 'இறைசெயலே' என்று கொண்டு செயல் புரிதல் வேண்டும். 'இருள்சேர் இருவினையும்' என்று திருவள்ளுவரும் 'நீடும் இருவினைகள் நேராக நேராதல்' என்று உமாபதிசிவாசாரியாரும் குறிப்பது இவ்வுண்மையைத் தெளிவுறுத்தவேயாகும். சைவசித்தாந்திகள் நல்வினையைப் 'பொன்விலங்கு' என்றும் தீவினையை 'இரும்புவிலங்கு' என்றும் உவமிப்பதும் கருதத்தக்கன.

எனவே இருவினைகளையும் சமமாகக் காண்பதே ஞானத்தின் திறவுகோல். இது ''இருவினையொப்பு'' எனப்படும். இருவினையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பானவையெனக் காண்பவரிலே திருவருட்சக்தி படியும். இது 'சத்திநிபாதம்' எனப்படும். சத்திநிபாதமே இறைவன் தாளை அடைவதற்கான இறுதிப் படி. அந்தப் படியில் நின்று இறைவனாகிய சிவபெருமானைச் சிக்கெனப்பிடித்து 'என்செயலால் ஆவதொன்றில்லை' என்று கிடப்பதே பேரானந்த முத்திப்பேறு.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க ரம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியே னையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

அப்பர் அடிகள்

மாண்பறம் அரன்றன் பாதம் மறந்துசெய் [யறங்களெல்லாம்
வீண்செயல் .. ...

சிவஞானசித்தியார்

மாயை:

மா - ஒடுங்குதல், யா - வருதல்

தநு, கரணம், புவனம், போகம் யாவும் தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் இடமாயுள்ளதே மாயையாகும். இது தன் தோற்றத்துக்கு வேறொன்றைக் காரணமாகவோ, கருவியாகவோ கொண்டதன்று. வேதாந்தக் கோட்பாட்டினர் குறிக்கும் மாயையின் தன்மை வேறு. சைவசித்தாந்தம் மாயை பற்றிக் கொள்ளும் கருத்து வேறு. வேதாந்தம் மாயையை நித்தியம் என்றும் சொல்லாது. அநித்தியம் என்றும் கொள்ளாது. 'உரைகடந்தது' என்னும் பொருளில் 'அநிர்வசனீயம்' என அழைப்பது வேதாந்த (சங்கரர்) வழக்கு. சகல அறியாமைகளுக்கும் அடிப்படைக் காரணம் மாயையின் தோற்றமே என்போர். அதன் இயல்பு பற்றித் தெளிவான விளக்கம் தராதது வியப்பிற்குரியது.

ஆனால் சைவசித்தாந்தமோ அது உண்மையானது, எனவே அநாதியானது, வெளித்தோற்றும் தன்மை உடையது என்று மாயையை அறுதியிட்டுக் கூறும். ஆன்மாவின் இயல்பாக உள்ள அறிதலும் கூணர்தலுமான தன்மைகளை அது பயன்படுத்த மாயையே உறுதுணையாகின்றது:

மாயையே உடலுமாகும் மாயையே கரணமாகும்
மாயையே புவனமாகும் மாயையே யோகமாகும்
மாயையே பொறிகளாகும் மாயையே புலன்களாகும்
மாயையே அண்டபிண்டம் யாவையும் மாயையாமே.

சிவஞானசித்தியார்

இவ்வாறு இறைவனின் விதிப்படி தொழிற்படுவதாகிய அம்மாயை, த்தமாயை எனவும் குண்டலி எனவும், குடிலை எனவும், சுத்த மாயை எனவும் திரோதாயி எனவும் பல பெயர்களால் வழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிவாயநம' என்ற பஞ்சாக்கர மந்திரத்திலே 'ந' என்ற அக்கரம் (எழுத்து) சுத்தமாயையையே குறிப்பதாகும்.

சுத்தமாயை ஆணவத்தின் ஆதிக்கத்தினின்று ஆன்மாவை ஓரளவு விடுவித்து, ஆன்மா கன்மங்களைச் செய்ய வழிகோலுகின்றதாயினும் இதனையும் ஆன்மா முற்றாகச் சார்ந்திருத்தலாகாது. ஏனெனில் உலக பந்தங்களிலிருந்து ஆன்மாவை முழுமையாக விடுவிக்கும் ஆற்றல் இதற்கில்லை.

சுத்தமாயையைத் தவிர அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்ற பிரிவுகளும் உள்ளன. சுத்தமாயையே மாயையின் தொடக்க நிலை. அது மலத்துடனும் கன்மத்துடனும் சேர்ந்து செயற்படும் பொழுதுதான் அசுத்தமடைந்து அசுத்த மாயையாகின்றது. இவ்வசுத்தமாயையே குறையறிவு பெறும்போது சுகத்தையும் துக்கத்தையும் தருகின்றது. அதனினின்றும் வருவதே அசுத்தப் பிரபஞ்சம். இப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயுள்ளது பிரகிருதி மாயையாகும்.

சுத்தமாயைக்கு மோகினி என்பதும் ஒரு பெயர். அதற்கு உருவம் இல்லை. அது மந்தமானது. அறிவற்றது. அதுவே தன்னிடமிருந்து பல்வேறு தன்மைகள் தோன்ற உடம்புகளையும் கருவிகளையும் உலகங்களையும் தோற்றுவிக்கின்றது. அஃது ஆன்மாக்களை மயக்கத்தில் ஆழ்த்துகின்றது. எனினும் ஆன்மாவின் பெத்தநிலையில் இதனுடைய உதவியுந் தேவைதான். சாணம், உவர்மண், தேற்றாங் கொட்டை, முதலிய பொருள்கள் அழுக்கினைப் போக்குவதுபோல அசுத்த மாயையானது ஆன்மாவுடன் சேர்ந்திருந்து அதனுடைய அழுக்குகள் போக உதவுகின்றது.

**தத்துவங்கள்:**

ஆன்மாக்களின் அநுபவங்கள், உணர்வுகள், செயற்பாடுகள் யாவிற்கும் அடிப்படையாகச் சுத்தமாயை, அசுத்தமாயை என்பன காரியப்படுகின்றன, இக்காரியங்கள் தத்துவங்களாக உருவெடுக்கின்றன. இவை ஆன்மதத்துவங்கள் (24), வித்தியாத்துவங்கள் (7) சிவதத்துவங்கள் (5) என மூவகைப்படும். சிவதத்துவங்கள் சுத்தமாயையின் காரியங்கள். ஆன்மதத்துவங்களும், வித்தியாதத்துவங்களும், அசுத்தமாயையின் காரியங்கள்.

**ஆன்மதத்துவஞ்கள் (24)**

அறிதல், விரும்புதல், முயலல் என்ற மூன்றும் ஒவ்வோர் ஆன்மாவும் தன்னை மற்றதிலிருந்து வேறுபடுத்தித் தனித்தன்மையுள்ளதாய் 'நான்' என எண்ணிச் செயற்பட வைக்கின்றன. இவற்றுள் அறிதலும், முயலுதலும் உடலை இடமாகக் கொண்டு வெளியாகின்றன. விரும்புதல் இவ்விரண்டனுள்ளும் அடங்கிவிடுகின்றது. எனவே அறிஉக்கு அடிப்படையான தத்துவங்கள் ஐந்து. அவை காது துவக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உடல்) கண், நாக்கு, மூக்கு என்பன. இவை ஞானேந்திரியங்கள் இவ்வைந்தினதும் செயற்பாடுகளுக்கான கருவிகளை வகை செய்து அவற்றை வாக்கு, கால், கை, பாயு (மலவாயில்) உபத்தம் (ஆண் பெண் குறி) எனப் பெயரிட்டுக் கன்மேந்திரியங்கள் என்றனர். இவற்றால் உணரப்படும் புலனறிவைக் கேட்டல் (சப்தம்), உணர்தல் பரிசம்),பார்த்தல், (ரூபம்),சுவைத்தல் (இரசம்), முகர்தல்(கந்தம்)என ஐந்தாக வகைசெய்து தன்மாத்திரைகள் என்றனர். இப்புலன்களே குணங்கள். இக்குணங்கள் தோற்றும் குணிகளாக, நிலம், நீர், தீ வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களும் அமைந்தன.

அறிவிற்கு அடிப்படையானவை ஐம்பொறிகள். இவற்றை வாயிலாகக் கொண்டு உணர்வுகளை இணைக்க அகக்கருவிகள் வேண்டப்படும். அகக்கருவிகள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்குமாகும். இவை அந்தக்கரணங்கள் எனப்படும். ஆக,

கன்மேந்திரியம் — (காது, துவக்கு, கண், நாக்கு, செவி) — 5
ஞானேந்திரியம் — (வாக்கு, கால், கை, பாயு, உபத்தம்) — 5
தன்மாத்திரை — (சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்) — 5
பூதம் — (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) — 5
அந்தக்கரணங்கள் — (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) — 4
ஆக ஆன்மத்துவங்கள் — 24)

**வித்தியாதத்துவங்கள் (7)**

கலை, வித்தை, அராகம், காலம்,நியதி, மாயை, புருடன் என்ற ஏழும் வித்தியாதத்துவங்களாகும்.

1. கலை:

ஆன்மாவுக்கு உணருந்திறம் உண்டு. ஆனால் ஆணவம் அதன் உணர்வை மறைத்துள்ளது. அதன் மறைப்பாற்றலிருந்து ஓரளவு விடுபடக் கலை என்ற தத்துவம் உதவும். ஆணவமல ஆற்றலைச் சிறிது நீக்குதலும், செயலாற்றல் அளித்து ஆன்மாவை இன்பதுன்பமாகிய போகங்களில் செலுத்துவதும் கலையேயாம்.

2. வித்தை

கலையினின்றும் தோற்றும் வித்தை ஆன்மாவின் அறிவாற்றலை விளக்குகிறது.

3: அராகம்:

மேற்குறித்த போகங்களிலே ஆன்மாவுக்கு விழைவை ஏற்படுத்துவது.

4. காலம்;

போகத்துக்கான காலவரையறை.

5. நியதி:

ஆன்மா அநுபவித்த போகத்தினால் விளைவது. இது, இது வன்று என்று கட்டுப்படுத்தி நடத்துவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மாயை:

மேலே குறித்த ஐந்து தத்துவங்களும் ஆன்மாவுக்கு ஐந்து சட்டைகள் போன்றவை. (பஞ்சகஞ்சுகம்) இவற்றை அது அணிவதற்கு மூலகாரணம் அறிவு, விழைவு, செயல் என்ற மூன்றுமாம். இவற்றை ஆன்மா உணருமாறு முதலில் விளக்கிப் பின் மயக்கத்தில் ஆழ்த்துவது மாயை என்ற தத்துவம்.

7. புருடன்:

கலை முதல் நியதி ஈறாக ஐந்து சட்டைகளையும் அணிந்த வண்ணம் போகத்திலே நோக்கமுடையதாய் ஆன்மா இருக்கும் நிலையே "புருடன் என்ற தத்துவம்.

சிவதத்துவங்கள்: (5)

வித்தியா தத்துவங்களிலே வித்தை என்று குறிக்கப்படுவதைச் சிவதத்துவத்திலிருந்து வேறாக்க இந்த ஐந்தினுள்ளும் ஒன்றாய் அடங்கும் தத்துவம் சுத்தவித்தை எனப்படும். இதனோடு நாதம், விந்து, சதாக்கியம், ஈசுரம் என்ற நான்கும் சேரச் சிவதத்துவங்கள் ஐந்தாகும்.

1. விந்து:

இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்றனுள்ளும் கிரியைக்கு ஆதாரமாயுள்ள தத்துவம் விந்து.

2. நாதம்:

ஞானத்திற்கு ஆதாரமாயும் நாதமே உருவாயும் கொண்ட சிவம் நாதம் என்ற தத்துவமாகக் கொள்ளப்படுகின்றது,

3. சுத்தவித்தை:

கிரியை குறைந்து ஞானம் மிகுவதற்கு ஆதாரமாயுள்ளது.

4. சதாக்கியம்:

கிரியையும், ஞானமும் தாழ்வு, ஏற்றம் இல்லாது ஒத்து நிகழ்வதற்கு ஆதாரமாய் விளங்குவது

5. ஈசுரம்,

கிரியை மேம்பட்டு ஞானம் அடங்கிச் செயற்படும் தத்துவம்.

இங்குக் குறிக்கப்பட்ட சிவதத்துவங்கள் ஐந்தும் ஏனைய முப்பத்தொரு தத்துவங்களையும் தொழிற்படுத்துவதற்குத் துணையானவை. இவை பற்றிய விரிவான விளக்கத்தை மனவாசகங்கடந்ததேவர் இயற்றியருளிய 'உண்மை விளக்கம்' என்ற நூலுக்குத் திரு. க. வச்சிரவேலு முதலியார் எழுதியுள்ள விளக்கவுரையிற் படித்துத் தெளியலாம்.

கிரியைக்கு ஆதார உருவாகச் சத்தியும் ஞானத்திற்கு ஆதார உருவாகச் சிவமும் விளங்குகின்றன. சதாசிவம் தத்துவம் யாவும் கடந்து பேரருளை வழங்கச் சிவலிங்கத் திருமேனி தாங்கிச் சிவாலயங்களில் எழுந்தருளி விளங்குகின்றது. எனவே சைவசித்தாந்தமானது பல்வேறு தத்துவங்களை விரித்து விளக்கம் தந்து இறுதியிலே ஆலயவழிபாட்டையும், சிவனடியாரான மாகேசுரர் வழிபாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையும், சிவஞானத்தை அருளவல்ல குருவையும் வழிபட்டுஉய் வடைய வழிகாட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

செம்லர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

(சிவஞானபோதம் 12)

### ஆன்மாவின் மலநீக்கத் துணைகள்

இவ்வாறு ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை அவற்றின் காரியங்களாகிய தத்துவங்களின் இணைப்பாலே பிறவி யிலே கிடந்தழுந்தி அவற்றிலிருந்து விடுபட்டுச் சிவபெருமானின் திருவருளைத் துணையாகக் கொண்டு, அதன் வழிகாட்டலிலே ஆன் மாவானது, தனது யாத்திரையை முடிவிற்குக் கொணர்ந்து அவரின் திருப்பாதங்களிலே பேரானந்தத்தை அநுபவிப்பதே சைவசித்தாந் தம். எமக்கு வழங்கியுள்ள அரும்பெருங் கலங்கரை விளக்காகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பாதங்களையும், குரு, லிங்க, சங்கமமாகிய மூவகை வழிபாடுகளையும் வலியுறுத்தி ஆன்ம விடுதலைக்குச் செலுத்துகின்ற பெரும் பணியைச் சைவசித்தாந்தம் மிகச் சிறப்பாகப் புரிந்துள்ளது. இவ்வகையில் வெறும் ஆய்வுக்குரிய தத்துவமாக மட்டும் விளங்காது, வையத்து வாழ்வாங்கு வாழ்வதற் கும், வாழ்வின் முடிந்த முடிபான முத்தியாகிய குறிக்கோளினை அடைவதற்கும் அதன் வழிகாட்டல் சைவசமயிகளாகிய எமக்குக் கிடைத்த பெரும்பேறே எனலாம்.

### அத்துவிதம்

ஆன்மா, ஆணவத்தின் வலிமை குன்றப் பெற்ற நிலையில் சுத்த மடைந்து சிவபெருமானோடு கூடிப் பேரானந்தத்திலே திளைப்பதே சுத்தாத்துவிதம், அத்துவிதம் என்ற பெயர்களில் வழங்குகின்றது. பிரமம் ஒன்றே உள்பொருள் எனக் கொள்ளும் சங்கர வேதாந்தம், அத்துவிதம் என்பதற்குச் சீவன்களாய்த் தோன்றிய யாவும் தம் தோற்றம் யாவும் மறையப் பிரமமாகி விடுதலே அத்துவிதம் (இரண் டற ஒன்றாதல்) எனக் கொள்ளும். சைவசித்தாந்தமோ சிவத் தோடு ஆன்மா கூடுவது ஒன்றற்றதும் இரண்டற்றதுமான அத்து விதம் என வலியுறுத்தும். ஏனெனில் அநாதியான மலம் ஆன்மாவை முற்றாய் நீங்குவதுமில்லை. ஆன்மா இறைவனேயாவதுமில்லை. இவ்வாறு இறையும் ஆன்மாவும் கூடுவதைப் பாலிற் கலந்த நீர் போன்றது எனவும் தாள் + தலை என்ற இரு சொற்கள் புணர்ந்து 'தாடலை' என்ற சொற்றொடர் அமைந்தாலும், இரு சொற்களும் அக்கூட்டு நிலையிலும் தத்தமது சொல் நிலையை இழக்காதது போன்றது எனவும் விளக்கம் தரப்படுகின்றது.

14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் அவதரிப்பதுண்டா?

அவ்தாரம் என்ற சொல்லின் பொருள் கீழிறங்கல் என்பதாகும். வைணவத்திலே பரம்பொருளாகக் கொள்ளப்படும் மகாவிட்டுணு மச்சம், வராகம், முதலாகப் பல அவதாரங்கள் எடுத்துவந்து ஆன்மாக்களைச் சம்சாரபந்தத்தினின்றும் விடுவித்தும், நல்லோரைக் காத்தும், தீயோரையழித்தும், தருமத்தை நிலைநாட்டியும் அருளுவார் என்று வைணவர் கொள்வர். ஆனால் சைவசித்தாந்தம் சிவபெருமான் எந்நிலையிலும் விகாரமடைந்து தமது இறைதன்மையிலிருந்து இறங்கி வருவதாகக் கொள்வதில்லை. இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கிய அப்பெருமான், மலவாதைக்கு உட்பட்டுழலும் உயிரினங்களிடையே கருவாகி உருவாகி இன்பதுன்பங்களை அடைந்து தான் ஆன்மாக்களைக் கரைசேர்க்க வேண்டுவதில்லை. அவ்வப்போது அவர் திருமேனிதாங்கி ஆன்மாக்களுக்கு நலஞ்செய்வதேயன்றிப் பிறந்தும் இறந்தும் கரைசேர்ப்பதில்லை.

> யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே
> மாதொரு பாகனார்தாம் வருகுவர்.

என்பது சிவஞானசித்தியார். இவ்வாறு சிவபெருமானின் பரம்பொருட்டன்மை நிலைநாட்டப் படுகின்றது. 'தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்' திறத்தினன் சிவபெருமான் என்பது திருவாசகம்.

சைவசித்தாந்தத்திற்குப் புறம்பான சமயங்கள்

சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயங்களிலே பல பிரிவுகள் உண்டு. இருப்பினும் கோட்பாட்டடிப் படையிலே இவை சைவசித்தாந்தத்திற்கு முரணானவை. இவற்றை இவற்றின் தரத்திற்கேற்ப, அகச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள் புறச்சமயங்கள், புறப்புறச்சமயங்கள் என வகுத்துள்ளனர்.

அகச்சமயங்கள:

பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாதசைவம், ஈசுவரஅவிகாரவாதசைவம், சிவாத்துவித சைவம் (நிமித்தகாரண பரிணாமவாதசைவம்).

இவை பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்த மாயை என்ற ஆறையும் ஏற்றாலும் அவற்றின் பொதுவியல்புகளுக்கு மட்டும் முதன்மையளிப்பன.

அகப்புறச் சமயங்கள்

பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம். இவை சிவாகமக் கொள்கைகளைப் பொதுவாக ஏற்பவை. எனினும் இவற்றிற்கு வேறாய்த் தமக்கெனச் சிலகோட்பாடுகளையும் அற்றிற்கென ரமைந்த முதனூல்களையும் முதன்மையாகக் கொள்வன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புறச்சமயங்கள் :**

சிவபெருமானைப் பரம்பொருளாக ஏற்காதவையும் வேதங்களுக்கு மட்டுமே முதன்மையளித்து, ஆகமங்களை ஏற்காதவையும், சிலசந் தர்ப்பங்களிலே தமக்கென ஆகமங்களை அமைத்துப் பின்பற்றுபவை யாயுமுள்ளவை புறச்சமயங்களாகும். இவை தார்க்கிகம், மீமாஞ்சகம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரிகம் என்பன. சிவபெருமானை முதற்கடவுளாகக் கொள்ளினும் அவரைப் பிரமமாகக் கொண்டு ஏகான்மவாதம் புரியும் வேதாந்தமும் புறச்சமயத்துள் அடக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**புறப்புறச்சமயங்கள்:**

வேத சிவாகமங்களை நிந்தித்து அவைதிக சமயங்களாய் உள்ளவை புறப்புறச்சமயங்களாகும். உலகாயதம், மாத்தியாமிகம், யோகாசாரம், சௌராந்திரிகம், வைபாடிகம், ஆருகதம் (சமணம்) என்பன புறப் புறச் சமயங்களாகும்.

எனினும் எல்லாச்சமயங்களும் இருக்க வேண்டும் என்ற கோட் பாடு சைவசித்தாந்தத்தின் அடிப்படை என்பர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

**சைவசித்தாந்தத்தோடு முரணாத சமயங்கள்.**

காஷ்மீரசைவம் சைவசித்தாந்தத்தின் தோற்ற மூலம் என்றும் வீரசைவம் அதற்குப் பெரிதும் உறவுடையது என்றும் கொள்வர். இவை பற்றிய சுருக்கமான விளக்கம் 'சைவம்' என்ற இயலிலே தரப் பட்டுள்ளது

**சைவசித்தாந்த சாத்திர நூல்களிலே கூறப்பட்டவை பற்றிய சிறு விளக்கம்:**

1. **திருவுந்தியார்:**

திருவியலூர் உய்யவந்த தேவர் பெற்ற ஞான அநுபவங்களும், பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இலக்கணமும், உயிர் பதியை அடைவதால் ஏற்படும் பயன்களும் அப்பயன்களை அடைவ தற்கான வழிவகைகளும் 45 பாடல்களில் இந்நூலில் விளக்கப்பட் டுள்ளன.

2. **திருக்களிற்றுப்படியார்:**

இந்நூல் நூறு வெண்பாக்களால் ஆனது. இது சிதம்பரத்திலுள்ள திருக்களிற்றுப்படியிலே வைத்துப் பாராட்டப்பட்டமையாலே திருக்க ளிற்றுப்படியார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது. சிவத்தின் இயல் புகளும், உயிர்களின் இயல்புகளும், உயிர் சிவத்தை அடையக் கடைப் பிடிக்க வேண்டிய வழிவகைகளும், முத்தியடைந்தோரின் தன்மைகளும் இந்நூலிலே விளக்கப்படும். திருக்குறள், திருத்தொண்டர் பெரிய புராணம் முதலான நூல்களிலிருந்து உதாரணங்களும், மேற்கோள் களும் இதிலே தரப்பட்டுள்ளன. சிறந்த உவமைகள் மூலம் விடயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்படுகின்றன. உதாரணமாகக் குருவின் இயல்பை விளக்கும் பொழுது, 'மலம் யாவுமே நாற்றம் உடையன. இருந்தாலும் பசுவின் சாணம் அழுக்குகளை நீக்க உதவுகின்றது. அதுபோலக் குருவானவர் மனிதருள் ஒருவரேயாயினும் அவரே பிறவியை ஒழிக்க வல்லவர்' என உவமை கூறுவது கருதத்தக்கது.

3. சிவஞானபோதம்:

சிவஞான போதமே சைவசித்தாந்த சாத்திரங்களில் முதன்மை யானது. இது பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. சூத்திரங் களை விளக்க 81 வெண்பாக்கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றோடு உரைநடை வாயிலாகவும் விடயங்கள் விளக்கப்படும். சிவஞான போதம் ரௌரவ ஆகமத்தின் சாரமாய் அமைந்தது என்பர். இதன் முதல் மூன்று சூத்திரங்களும் பிரமாண இயல் எனப் பெயர் பெறும். இவ்வியலிற் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் உண் மையை மெய்கண்ட தேவர் விளக்கியுள்ளார். அடுத்த மூன்று சூத் திரங்களும் இலக்கண இயல் என வழங்கும். இவ்வியலிலே முதலிற் கூறிய முப்பொருள்களின் இலக்கணம் விளக்கப்படும். மூன்றாம் இயல் சாதன இயல் ஆகும். சாதனஇயலிலே சிவபெருமான் மானிட வடிவந்தாங்கிக் குருவாய் நின்று உபதேசித்தல் பற்றியும், அவ்வுப தேசத்தைப் பெற்ற உயிர்கள் பஞ்சாட்சரத்தை ஓதி முத்தியடைதல் பற்றியும் விளக்கம் உள்ளது. இறுதி மூன்று சூத்திரங்களும் பயன் இயல் எனப் பெயர்பெற்றுப் பாச நீக்கத்தையும், சிவப்பேற்றையும், முத்தியை நிலையாய் அடைய எவ்வெவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதையும் விளக்குகின்றன.

4. சிவஞானசித்தியார்

இது சிவஞான போதக் கருத்துக்களை மேலும் விளக்க எழுந்த வழிநூல். சிவஞான போதத்தின் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் விளக்க மாக ஒவ்வோர் அதிகாரத்தைக் கொண்டு பன்னிரண்டு அதிகாரங்க ளால் அமைந்தது இந்நூல். இதிலே பரபக்கம் என்ற பகுதியிற் பிற சமயங்களின் தன்மைகள் ஆராயப்படுகின்றன சுபக்கம் என்ற பகுதி சைவசித்தாந்த நெறியின் உயர்வை விளக்குவது. சிவஞான போதத் திற்கு அடுத்த நிலையிற் சைவ அறிஞர்களாற் போற்றப்படும் நூல் சிவஞான சித்தியாரேயாகும்.

5. இருபா இருஃது

அருணந்தி சிவாசாரியர் தம் குருவிடம் ஐயங்களை வினாவுதல் போலவும், அவர் அவற்றிற்கு விடை தருதல் போலவும் அமைந்த இருபது பாடல்களைக் கொண்ட நூல் இருபா இருபஃது. மும்மலங் களின் இயல்புகளும் இந்நூலிற் சிறப்பாக விளக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உண்மை விளக்கம்:

53 வெண்பாக்கள் கொண்டது. முப்பத்தாறு தந்துவங்கள் ஆணவம், நல்வினை தீவினையாகி இருவினைகள், ஆன்மா, சிவம் ஆகியவற்றின் இயல்புகள் என்பவற்றை இதன் வாயிலாக மனவாசங் கடந்த தேவர் விளக்கியுள்ளார்.

7. சிவப்பிரகாசம்

சிவஞான போதத்திற்குச் சிவஞானசித்தியார் வழிநூல்,சிவப்பிரகாசம் சார்புநூல். இந்நூலில் நூறு விருத்தப்பாக்கள் உள்ளன. அத்துவிதமுத்தி, மும்மலங்கள், அவற்றுள் ஒன்றாகிய மாயையின் பல்வேறு பிரிவுகள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. தீட்சை பற்றியும் விளக்கம் உள்ளது.

8. திருவருட்பயன்

பத்து அதிகாரங்கள் கொண்ட நூறு குறட்பாக்களால், முப்பொருள் இயல்பும் திருவருளின் இயல்பும் உருவும் அதை அடையும் நெறியும் அடைந்தோர் பெறும் பேறும் விளக்கப்பட்டுள்ளன,

9. வினாவெண்பா:

இருபா இருபஃது போல, ஆசிரியர் வாயிலாக ஐயங்களைத் தெளிந்து கொள்ளும் முறையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. முத்தி நிலையிலே காண்பவன், காட்சி, காணும் பொருள் என்ற மூவகை வேறுபாடுகளும் இல்லாது போவதை மிகவும் நுட்பமாக உமாபதி சிவாசாரியார் இதில் விளக்கியுள்ளார். இந்நூல் 13 வெண்பாக்கள் கொண்டது.

10. போற்றிப்பஃறொடை வெண்பா:

196 அடிகளாலான இந்நூலிலே பதியின் சொரூப, தடத்த நிலைகள், ஆணவத்தின் தன்மை, தநு, கரணம், புவனம், போகம் ஆகிய நான்கையும் இறைவன் ஆன்மாவிற்கு அருளும் நோக்கம், ஆன்மாக்கள் உடலெடுத்து வருந்தும் வகை, வினையும் அதற்கு ஈடாக ஆன்மா அடையும் பயனும், இறைவன் மூவகை ஆன்மாக்களுக்கும் அருளும் வகை, நாறபாதங்களின் விளக்கம் ஆகியன தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கொடிக்கவி:

நான்கு வெண்பாக்களாலானது. பஞ்சாட்சரம் முதலிய சிவ மந்திரங்களுக்கான விளக்கம் இதிலே உள்ளது.

12. நெஞ்சுவிடுதூது;

உமாபதிசிவாசாரியார் தம் குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் மாலையை வாங்கி வரும்படி தமது நெஞ்சைத் தூதுவிடுவது போல இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. 129 கண்ணிகள் இதன்கண் உண்டு. ஆன்மாவின் செயற்பாடு பற்றிய விளக்கத்தினை இந்நூலிற் காணலாம்.

13. உண்மைநெறிவிளக்கம்:

ஆறு திருவிருத்தங்களால் முத்தியை அடைதற்கான பத்து வழிகளை இந்நூல் எடுத்து விளக்கும். அந்தப் பத்து வழிகளும் வருமாறு: தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம வடிவம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம்.

14. சங்கற்ப நிராகரணம்:

இந்நூல் சங்கற்பம், நிராகரணம் என்னும் இரு பகுதிகள் கொண்டது. சங்கற்பம் என்ற பகுதியிலே சிவப்பிரகாசத்தைக் கற்பதால் ஞானம் பெறலாம் என்ற உண்மை விளக்கப்படுகிறது. நிராகரணப் பகுதியிலே மாயாவாதம், ஐக்கியவாதம், ஈசுவரவிவகாரவாதம், நிமித்தகாரண பரிணாமவாதம், சைவவாதம், முதலாகிய சமயங்களின் இயல்புகளை எடுத்துரைத்து அவை முத்திக்கு உகந்தவையல்ல என்று மறுக்கப்படுகின்றன.

சைவசித்தாந்தசாத்திரங்களின் சாரம்

1. முப்பொருள்களின் இயல்புகள்
2. நான்கு பாதங்களின் தன்மைகள்
3. ஸ்ரீ பஞ்சாட்சர மகிமை
4. சீவன் முத்தர்களின் இயல்புகள்
5. திருவருளின் தன்மைகள்
6. ஆலய வழிபாடு, சிவசின்னங்களின் மகிமைகள்
7. அடியார் சிறப்புக்கள்
8. பிற சமயங்களின் கூற்றுக்களை மறுத்தலும் சைவசித்தாந்த நெறியை நிலைநாட்டலும்
9. குருவின் மகிமை
10. வீடுபேற்றின் இன்றியமையாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைதிருத்தம்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 02 | உத்தரமேரூரப் | உத்தரமேரூர்ப் |
| 02 | நிலையாமைச்குச் | நிலையாமைக்குச் |
| 02 | கூறப்பட்டமையால் | கூறப்படாமையால் |
| 03 | குறிக்கப்பட்ட | முறிக்கப்பட்ட |
| 06 | யூமரேசர் | மயூரேசர் |
| 08 | அரணெனத் | அரனெனத் |
| 0[illegible] | கருதிது | கருத்து |
| 10 | சீரிராகப் | சீடராகப் |
| 10 | அருணத்தி | அருணந்தி |
| 11 | பறவற்றுள் | பலவற்றுள் |
| 12 | வாழ்த்த்தாக | வாழ்த்தாக |
| 13 | எழுந்தருயிருக்கையில் | எழுந்தருளியிருக்கையில் |
| 14 | அம்மூன்றுவாம் | அம்மூன்றுமாம் |
| 17 | பரிணாமவாத | பரிணாமவாதம் |
| 17 | முரன்பாடுகள் | முரண்பாடுகள் |
| 19 | எழுந்தருளிருக்கும் | எழுந்தருளியிருக்கும் |
| 19 | வியப்யில்லை | வியப்பில்லை |
| 21 | அல்லாமல் | அல்லாமல் |
| 21 | வேறென்பறியேன் | வேறொன்றறியேன் |
| 23 | வேதகர்லத்திலும் | வேதகாலத்திலும் |
| 31 | என | — |
| 31 | வழிபடுவற்கென | வழிபடுவதற்கென |
| 32 | இயக்குளதால் | இயக்குவதால் |
| 41 | வரள்முறை | வரன்முறை |
| 44 | நிளத்தவரான | நிலத்தவரான |
| 44 | வரிமயிர்க் | வரிமயிற் |
| 57 | பாரசீகத்திற் | பாரசீகத்தில் |
| 64 | விசுவம் | (விசுவம்) |
| 69 | உண்டானபிள் | உண்டானபின் |
| 71 | உஅளன | உள்ளன |
| 7[illegible] | ரரியில்புகள் | ஈரியல்புகள் |
| 71 | இவ்லதை | இல்லதை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 72 | உரிமை | ஒருமை |
| 73 | நோக்கச் | நோக்கிச் |
| 75 | பிரமசூத்திரத்தைய்யும் | பிரமசூத்திரத்தையும் |
| 75 | ஆசியவை | ஆகியவை |
| 78 | யிரமும் | பிரமமும் |
| 78 | விஜாயாதிபேதம் | விஜாதியபேதம் |
| 89 | ஆகவங்களின் | ஆகமங்களின் |
| 89 | சைவசத்தாந்தம் | சைவசித்தாந்தம் |
| 95 | அவனருளாலேகண்ணாக | அவனருளே கண்ணாக |
| 97 | சாசம் | பாசம் |
| 102 | ஆன்மதத்துவஞ்கள் | ஆன்மதத்துவங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org